# சுதந்திரப் போர்

## நான்காம் பாகம்

## தேய்ந்த கனவு

நாட்கள் தேய்ந்து மறைந்தன.

ரகுபதிக்கு நடமாடும் ரேடியோவாக விளங்கிய ராஜேசுவரியின் நட்பு இப்போது கிட்டவில்லை. அதனால் அவன் யந்திர ரேடியோவின் உறவில் நாட்களைக் கடத்தி வந்தான். வானொலி நிகழ்ச்சிகளில் தரங்குறைந்தவை, தரம் சிறந்தவை, என்ற பாகுபாடு பாராமல், ரேடியோவே கதி என்ற மனப்போக்கில், சதா ரேடியோவையே நெருங்கி உறவாடினான். அலை பாயும் மனதை அடக்க முடியாத போது கை போன போக்கில் திருகி மனம் போன போக்கில் ஒலி விசித்திரங்களை கேட்டு அனுபவிக்க அந்த ரேடியோ உதவிற்று. இத்தனைக்கும் ரகுபதியின் மனம், கட்டுக்கடங்காத மனமில்லை. உணர்ச்சிகளுக்கும் இலக்காகும் மனமல்ல. ராஜேசுவரியின் கடிதங்கள், அவனுடைய மன அமைதியை நன்குநிலை நாட்டிவிட்டன. துளிப்பொழுது வீணாக்காமல், உற்சாகமாக பாட்டும்படிப்பும், பணியும் பாராட்டுமாக அவள் பிறந்தகத்தில் சுறுசுறுப்பாக இருக்கிறாள் என்றும், அவளிடம் உற்சாகக் குறைவு இல்லை என்றும் அவன் அறிந்த போது, அதைத்தான் அவன் எத்தனை ஆறுதலாக ஏற்றான்? கணவனுடைய உத்தியோகமின்மையைக் குறித்து வருந்தும் மனைவியாக அவள் விளங்கவில்லை என்ற நினைப்பே அவனை தென்புடன் வைத்திருந்தது. ராஜேசுவரியை பாதிக்காததால், அவன் நிலையை அவனும் அருவருக்கவில்லை. 'இது கொஞ்ச காலம் வரை தானே!" என்று அந்தரங்க சுத்தியாகத் தெம்பாக இருந்தான். ஆனால் சிற்சில சமயங்களில் மட்டும் ராஜேசுவரியிடம் ஏதோ மாறுதல் புகுந்துவிட்டது என்று மட்டும் நினைக்காமலிருக்க முடியவில்லை. முன்பு கலப்பற்ற மகிழ்ச்சி செறிந்த நினைவுகளே மனைவியைப் பற்றி எழும். இப்போது சில சமயங்களில் அவளுடைய நினைவின் குளிர்ச்சி குன்றி கொஞ்சம் நெதுநெதுப்பு ஏறியது. அவ்வப்போது அவள் பார்த்த கூர்ந்த நோக்குகளையும் வெறித்த பார்வைகளையும் அவன் நினைக்கும்படிதான் இருந்தது.

'அவளுடைய இயல்புக்கும் சிறப்புக்கும் சூழ்நிலை இப்படி இருந்தால் சிரமம் தான், அந்த எட்டுமாத வாழ்வு அவள் மறந்து போக முடியுமா? இருக்காதா துன்பம் இப்போது? என்ன இருந்தாலும் இளம் உள்ளம் . . . எத்தனைதான் அடங்கும் அது?' என்று அவனும் நினைக்க வேண்டியிருந்தது.

அவனுக்கு ராஜேசுவரி அழைப்புவிடுத்தாள்.

"என்னைப் போலவே இருக்கிறாளாம், எங்கள் தங்கை! நான் மதலையாக எப்படியிருந்தேன் என்பதைத் தெரிந்து கொள்ளலாம், வாருங்கள்," என்று அழைத்தாள்.

"வாருங்கள்," என்று அழைத்தாள் ராஜேசுவரி. 'என்னை அழைத்துப் போகலாம்' என்று சொல்லத் தோன்றவில்லை. ரகுபதிக்கும் அந்த வித்தியாசம் தோன்றவில்லை. மனைவியின் அழைப்பில் உள்ள அன்புதான் தெரிந்தது. சிரித்துக் கொண்டான்; பிறகு சிரிக்கத் தோன்றவில்லை, யோசிக்கத் தோன்றிற்று. அதன் பயனாக மறுமொழிக் கடிதம் உருவாயிற்று.

"வருகிறேன். உன்னைப் போலவே உன் தங்கை பல உயர்வுகள் படைத்த பெண்ணாய் வளரட்டும். ஆனால் அவளுடைய வாழ்க்கைக் கனவுகளாவது பொய்க்காமல் பலிக்கட்டும்!" என்று வாழ்த்துரையை அனுதாபத்தில் தோய்த்து எழுதினான். ராஜேசுவரிக்கும் அந்த அனுதாபம் வேண்டித்தான் இருந்தது. காதலும் கனிவுமாகக் கணவனை வரவேற்கத் தயாரானாள்.

ரகுபதி வேட்டகம் புறப்பட்டான். "உன்னை அங்கே வந்து அழைத்துக் கொண்டு போகும்படி எழுதியிருக்கிறாரா மாமனார்?" என்று கேட்டார் சாரதாம்பாள்.

அப்போதுதான் அவளை அழைத்து வரும் அம்சம் அவன் நினைவில் வந்தது. நடராஜன் கூட, "தீபாவளிக்கு, வாருங்கள், மாப்பிள்ளை!" என்றுதான் எழுதினார்; வேறு ஒன்றும் எழுதவில்லை.

ரகுபதிக்கு அன்னையின் கேள்வி சிந்திக்கச் செய்தது. "உம், அதெல்லாம் காரண காரியமாகப் போகவில்லை," என்று சொல்லிவிட்டானே தவிர, அவன் போனால் அதன் பலன் என்னவாயிருக்குமோ என்று அஞ்சினான். அவளை அழைத்து வந்தால் இங்கு சந்தோஷமாயிருக்கணுமே அவள்? இருப்பாளா? ஆனால் காதல் அவனை இழுத்தது வேட்டகத்திற்கு. புறப்பட்டுவிட்டான்.

"இந்தா, இதை உன் மாமியாரிடம் கொடு;" என்று அப்பளம், முறுக்கு எல்லாம் நிறைந்து சாரதாம்பாள் ஒரு டப்பாவைக் கொடுத்தார். பட்டணத்துக்கு பண்டம் வேறொன்றும் வாங்கிக் கொள்ளவும் தோன்றாமல், காதலே நிறைந்த கருத்தினனாய் ரகுபதி வந்து சேர்ந்தான். காதலே கருத்தை நிறைந்திருந்ததனால் ராஜேசுவரியும் அந்த அப்பளம் முறுக்கு நிறைந்த டப்பாவைக் கூட அதிகம் கருத்துடன் பார்க்கவில்லை.

விசாலம் தான் பெருமையாக, "தாய்க்குச் சமானமாக சம்மந்தியம்மாளும் இருக்கிறார்" என்றாள் ரகுபதியின் காது கேட்க.

ராஜேசுவரி வெகு அலக்காக, "அப்பளம் இடுவது என்றால் உனக்குத்தான் பயம், அம்மா! எல்லோருக்கும் அப்படியா? யாராருக்கோ இட்டு இட்டு கட்டுக் கட்டாகத் தருகிறவருக்கு சம்மந்தியம்மாளுக்குக் கொடுக்கத் தோன்றாதாக்கும்" என்றாள், பெருமையும், தொனிக்காத, அலக்ஷியமாகவும் பொருள்படாத அவளுடைய இந்த போச்சு, அவளுடைய பல கருத்துகளின் சுமைக்குப் பொதுவான ஓர் முத்திரை ஆகும். ஆனால் அது யாருக்குத் தெரியும் அப்போது?

"சிரத்தையாக 'அரிசி அப்பளம்' இட்டு எனக்கு என்று அனுப்பியிருக்கிறாரே, அது எனக்குப் பெருமையாயிருக்கிறது," என்று உள்ளன்புடன் விசாலம் மீண்டும் சொன்னாள். மகப்பேறு பெற்ற பச்சை உடம்புக்கு அரிசி அப்பளம் நல்லது என்று சாரதாம்பாள் அனுப்பியிருக்கும்போது, அவளுக்கு நன்றியும் பெருமிதமும் இராதா? ராஜேசுவரிக்கு மட்டும் ஏனோ அந்தப் பெருமை இல்லை.

ரகுபதிக்கு மட்டும் பெருமையாகத்தான் இருந்தது. "போன வாரம் நாலு பேரை சாப்பிடக் கூப்பிட்டிருந்தார் அப்பா. அன்றைக்கு அப்பளம் வேண்டுமென்று காலையிலேயே கால் சேர் பருப்பு ஊறப்போட்டு அதை சாயங்காலத்திற்குள் உலர்த்தி அரைத்து இட்டு, டிட்ன்னருக்கு அப்பளம் ரெடி!" என்று தெரிவித்தான் உற்சாகமுடன்.

விசாலம் வியந்தாள்!

ராஜேசுவரி திடுக்குற்றாள்! "ஏன்? நானும் அம்மாவும் இட்டோமே எத்தனை கட்டு? என்னாயிற்று எல்லாம்? மூன்று மாதந்தானே ஆச்சு நான் வந்து?" என்று கேட்டாள்.

"எழுநூறு பவானிக்கு அனுப்பினாள் அம்மா. அங்கே எல்லோரும் கேட்கிறார்களாம், அம்மா அப்பளம். இன்னும் இரண்டு கட்டு, என் சிநேகிதன் வடக்கே போகிறான் என்று கொடுத்தாள், இப்படித்தான் ..."

ராஜேசுவரிக்கும் விளங்கியது. இன்னும் யாரோ உறவு முறையார் வந்திருப்பார்கள். அப்பளம் வழங்கப்பட்டிருக்கும். அதுதான் சாரதாம்பாள் வழக்கம் ஆயிற்றே!

ராஜேசுவரி யோசித்தாள். அப்பளம் என்ற ஒரு விஷயத்திலே மட்டும் சாரதாம்பாள் நடந்து கொள்ளும் முறையே அலாதி. அதாவது அசாதாரணம். ஜன்மப்பகை என்று யாராவது ஏற்பட்டாலும், அப்பளப் பரிசு வழங்கி, மனமுவந்து, "சந்தோஷமாகத் தின்னு" என்று வாழ்த்தி பெருமைப்பட்டு விடுவார் மாமியார் என்று உணர்ந்தாள் ராஜேசுவரி. அத்தகைய சக்தி மாமியாரின் அப்பள ஆர்வத்திற்கு இருக்கிறது. அதை ஒரு கலையாகப் பேணி, தன் வாழ்க்கையின் இன்றியமையாத அம்சமாக விளங்கத்தான் ராஜத்தை

அந்தப்பாடு படுத்துகிறது. ஆனால் அதுவா லலிதகலை? வாழ்க்கையோடு பிணைந்து குடும்பத்தோடு தழைய இந்த லலித கலைக்கு போதுமா பலம்? தாங்குமா எதிர்ப்பு?

கணவரும் சர்மா வாத்தியாரும் சந்திக்கும் கட்டத்தை இந்தத் தடவை ராஜேசுவரிக்கு பேராவலுடன் எதிர்பார்த்தாள். இதற்கு முன்பு இத்தகைய ஆவல் இல்லை. பார்க்கப்போனால் பீதி தான் இருக்கும். சர்மாகாருவை மதிக்காத தோரணையில் கணவன் பேசக்கூடும் என்ற பீதிதான் அது. இந்தத் தடவையோ, உற்சாகமாயிருந்தாள். அவளுடைய இசையரங்கு நடந்ததைப் பற்றி பேச்சு வந்துவிடும். அப்போது சர்மாபாரு, "பயிற்சி கொடுத்தால் ஜமாய்த்துவிடுவாள்" என்று சொல்லாத தோஷமாக ராஜேசுவரியைப் பற்றி சொல்லப் போகிறார். அதற்குப் பிறகும் ரகுபதி மறப்பானா மனைவியின் இசையார்வத்தினை? 'இனிமேல்' யோகந்தானே அவளுக்கு?

சர்மா வந்தார். ரகுபதியும் அவரும் பல விஷயங்களைப் பேசினார்கள். சர்மா பேச்சுப் போக்கிலே ராஜேசுவரியைப் பற்றிப் பேசினார், சொன்னார், புகழ்ந்தார். ஒரு குரு தமது சிஷ்யையை புகழும் புகழ்ச்சி என்ற அபிப்பிராயம் மட்டும் ஏற்பட்டது ரகுபதிக்கு. தனது மனைவி பெற்ற பாராட்டு என்றோ, அவள் புகழும் அந்த சிஷ்யை தான், எதிரிலிருக்கும் தனது மனைவி என்றோ அவனுக்குத் தோன்றினதாகத் தெரியவில்லை. அவன் ஒன்றுமே சொல்லவில்லை. கேட்டுக்கொண்டிருந்தாலும் ஏற்று ரசிக்கவில்லை.

அப்போது ஒரு பெரும் பாறாங்கல் நெஞ்சிலே வந்து விழுந்தாற்போல ராஜேசுவரி வேதனைப்பட்டாள். சொல்ல முடியாத துன்பம் குமுறுவதாக அந்தரங்கம் திணறியபடியே குசித்தது. அன்று சர்மா வாத்தியார் எழுந்து போகுமுன்பு, "இரண்டு நாள் கழித்து வந்து, காம்போதி கீர்த்தனையை நிரவல் ஸ்வரமுடன் பாட ஆரம்பித்து வைக்கிறேன். இன்று பேச்சுடன் போய்விட்டது, நேரமாகிவிட்டது." என்று சொன்னார்.

கணவனைப் பார்த்தாள் ராஜேசுவரி. ரகுபதி சர்மாகாருவைப் பார்த்த பார்வையில் "பிரமாத வாத்தியார் தான், காம்போதி ராகத்தின் அழகே கெடுத்துவிடுவீரே" என்று நினைப்பது போல ஒரு பிரமை ஏற்பட்டது அவளுக்கு.

"இனிமேல் நான் பாடமாட்டேன், சார்" என்று வறட்டுச் சிரிப்பு சிரித்தாள் ராஜேசுவரி.

"அதென்னது?" என்று சிரித்தார் சர்மா. 'தெரியாதா உங்களுக்கு! நான் அவருடைய மனைவியாக இருக்கும்போது பாடமாட்டேனே!" என்று சிரிக்க முயன்றபடியே சொல்லி ரகுபதியைப் பார்த்தாள். அவனுக்கு பார்வையும் கருத்தும் அவளிடத்தில் இல்லையென்று கண்டாள். ரேடியோவினருகிருந்த 'வானொலி' நிரல் பத்திரிகையில் இருந்தது கவனம்.

இந்தச் சிறு சம்பவம், உடனே எவ்வித பலனையும் கொடுக்கவில்லை. கணவன் வந்துவிட்ட பூரிப்பிலும், அவனுடன் சிரித்துப் பேசி மகிழ்வதிலும், ராஜேசுவரியின் பெண் உள்ளம் திளைத்தது.

சுதந்தர உணர்ச்சியோடு கணவனிடம் பழகிய அந்தச் சமயத்தில், இசை ஆசையின் நிறை குறைந்தது. ஆனால் . . . அந்த நிலையும் சொற்ப காலம் தான். மீண்டும் தராசுத் தட்டுக்கள் மாறின; மனக்குரங்கு செய்த குறும்பு!

சர்மா வாத்தியார், சம்பளம் எதிர்பாராமல்தான் அவ்வப்போது வந்து கொண்டு, ராஜேசுவரிக்கு பாடம் சொல்லி வந்தார். இப்பொழுதெல்லாம். ஏதோ பரிசாகவோ பொருளாகவோ, அபிமானத்தின் பேரில் திரும்பிவிடும் என்று தெரியும் அவருக்கு. அதனால் ராஜேசுவரி 'பாடமாட்டேன்' என்று சொல்லிவிட்டாலும் அவர் வந்தார். நிறைய பேசுவார் ரகுபதியுடன். ராஜேசுவரியைப் பார்த்து பாடும்படியும் சொன்னார். ஆனால் அவளோ சுருதி பேதம் செய்து பேசி, கண்டிப்புடன் மறுத்தாள். ஓரோர் சமயம் சினமுடன், 'என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாமே!" என்றும் சொல்லிவிட்டாள். அவள் மனம் புண்பட்டுக் கிடந்தது.

"பயிற்சியை விடாமலிருக்கிறாயோல்லியோ?" என்று கேட்டார் சர்மா.

"உம், இவரும் தம்பி மணியும் சாயங்காலம் உலாவப் போனப்புறம் பாடினேன்" என்று நிஷ்டூரமாகச் சொன்னாள் ஒரு தடவை. ஏனோ அவள் மனதில், "நான் இவருடைய மனைவியாயிருக்கும்போது பாடமாட்டேன்" என்று அவள் அன்று சொன்ன மறுமொழி அடிக்கடி முழங்கியது.

அன்று சர்மா வாத்தியாரிடம் சொன்னாளே, அப்போது அவள் கருத்து என்ன?

"நான் இங்கே பெற்றோரின் பெண்ணாக இருக்கும்போது தான் பாட்டு கவனிக்கிறேன்" என்று சொல்ல விரும்பித்தான், அதைச் சற்று ஆணித்தரமாக அவ்வாறு சொன்னாள். அத்தகைய மறுமொழியை வீசி தனது அந்தரங்கத்தைக் கணவனுக்குப் புலப்படும்படி செய்துவிட்டதாக அவள் ஆறுதலடைந்தாள்.

"நான் உங்கள் மனைவியாயிருக்கும்போது இசைக்க இயலுவதில்லை" என்று கணவனிடம் நேரடியாகச் சொல்ல முடியாமல் அவ்வாறு சொன்னாள்.

"ஏன்? அப்படியா வருந்துகிறாய்? இனிமேல் அப்படி ஏற்படாது பார்," என்று கணவன் நேரடியாகத் தோற்றாவிட்டாலும், அவனுக்கு அத்தகைய கனிவு உண்டாகும் என்று கருதினாள் அவள். ஆனால் ரகுபதி இருந்த தோரணையே வேறு.

அவளுடைய பேச்சின் உட்கருத்து யாது என்ற சிந்தனையே இல்லை அவனுக்கு. சற்று புரட்சிகரமாகப் பேசும் மனைவி, என்ன பொருளுடன் தான் சொல்கிறாள் என்று அவன் யோசனை செய்திருக்கலாம். "என்னமோ சொல்கிறாள்; இங்கே தான் பாட்டு பயிற்சிக்கு அவள் முனைகிறாளாம்!" என்று ரொம்ப சாதாரணமாக நினைத்தான். நினைக்கக்கூட இல்லை. அந்தப் போக்கிலே இருந்துவிட்டான்.

ஆனால் ராஜேசுவரியோ, "இப்படிச் சொல்லிவிட்டேன், இன்னும் எப்படித் தான் சொல்லுவேன்? இதுவே பலனளிக்கும்" என்று எண்ணமிட்டு எதிர்பார்த்தாள், ஏமாந்தாள்.

பெண் மனம் புதிர் என்றும் ஆண்களுக்கு அதை புரிந்துகொள்ள சாத்தியம் அல்ல என்றும் சொல்கிறார்கள்! அது நிஜம் தானா?

ஆம் நிஜம் தான். ஆனால் அது பெண்ணின் சிறப்புக்கு ஊறு ஆகுமா? இல்லை, பெண்ணுக்கு காதலே வாழ்வு. கணவனுக்கு வாழ்வின் ஒரு பகுதி தான் காதல். இப்படி யாரோ சொல்லியிருக்கிறாரே, அது தான் வினாவிற்கு விடை.

பெண், கணவனிடம் செலுத்தும் அன்பிலே வன்மையும், உயர்வும் இருக்கிறது. நுண்ணிய அறிவுடன், கணவனின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து கொண்டு அதற்கேற்றபடி நடந்து கொள்ளும் அற்புத சக்தி படைத்திருக்கிறாள் பெண். ஆண் மனம் அவளுக்கு எப்படி புதிராக முடியும்?

ஆனால் கணவன் செலுத்தும் அன்பிலே கனிவும் கவனமும் சொற்பம். பெண், தன்னுடைய அன்பின் ஆழத்திற்கு ஏற்ற எதிரொலி விரும்புகிறாள். அனுதாபமும் பரிவும் இன்றி கணவன் வழங்கும் அன்பு அவளுக்கு சில மனத்தாங்கல்களை உண்டாக்குகிறது. அதை கவனிக்கத்தான் ஆணுக்கு அக்கரை இல்லையே! அவளோ, அன்புக்கும் ஏக்கத்திற்குமிடையே ஊசலாடிய வண்ணம் இயங்குகிறாள். அப்போது வெளிப்படும் அன்பும் வன்மமும், பெண் மனம் புதிர் என்ற பட்டத்தைக் கொணருகின்றன.

ராஜேசுவரி அந்தப் 'பெண் மனம்' படைத்துவிட்டாள் இப்போது.

'அவருடைய மனைவியாக இருக்கும்போது நான் பாடமாட்டேன்' என்று ஒரு சோர்வுடன் நினைத்து வந்த ராஜேசுவரி, ஏமாற்றத்தின் சூழலில் தவித்தாள்.

ஏமாற்றமே, ஏக்கமாக மாறிப்போயிற்று பையப் பைய.

"இன்றைக்காவது இரண்டு பாட்டுப்பாடேன், ராஜம். இவர் வந்தப்புறம் இந்தப் பத்து நாளாய் பாடவில்லையே!" என்று சர்மா ஒரு நாள் சொன்னார். ரகுபதியைப் பார்த்தாள் ராஜேசுவரி.

"ஆமாம் பாடட்டுமே, சுலோகம் நன்றாகப் பாடினாள் என்று சொன்னீர்களே, கேட்கிறன்," என்று பகர்ந்திடும் நாவோ, நோக்கமோ, நெஞ்சமோ, ரகுபதியிடம் ராஜம் காணவில்லை.

அவனுக்கு வாத்தியாரிடம் அலக்ஷியம் தானோ? அல்லது, ராஜேசுவரியின் திறமையில் உள்ள அவ நம்பிக்கையோ?

இரண்டுமே கசந்தன அவளுக்கு!

கொஞ்ச நாளாகவே ராஜேசுவரி கவனித்து வந்தாள். சர்மா வாத்தியாருக்கும் ரகுபதிக்குமிடையே நடக்கும் தர்க்க ரீதியான வாதங்களை கவனித்தாள். ரகுபதியுடன் பேசுவதற்கென்றே சர்மா வந்து கொண்டிருந்தார். செய்தித்தாள்களைப் படிப்பவர்களுக்குத்தான், படித்த விஷயங்களை அலசிப் பேசுவதில் எத்தகைய துடிப்பு? இசை முதல் அரிசிக் கட்டுப்பாடுவரை பேச்சு அடிபடும். ரகுபதிக்குத்தான் தர்க்கம் செய்வதிலே அலுப்பு கிடையாது என்றால், சர்மாகாருவுக்கு விஷயங்களை எல்லாம் ஆராய்ந்து பேசத் துடிப்பு! யுத்த கால கொடுமையை அனுபவித்தவர். அதனால் அரசியல் பொருளாதார நிலைகளை அறிந்து கொள்ள அவர் துடியாக இருந்தார். சுதந்தரம் வந்தாயிற்றே! சுபிட்சம் ஏற்படுமா அதனால்? உணவுப் பொருள்களைக் கட்டுப்பாடு செய்து ஏன் சர்க்கார் தொல்லைப்படுத்துகிறது? இந்த அவதிக்கு விமோசனம் உண்டா? இன்னும் பண்டங்கள் குறைவு என்றும், பங்கீடு செய்து வழங்கிச் சமாளிக்கணும் என்றும் கட்டுப்பாடு விதிக்கிறார்களே? கள்ளச் சந்தையில் வேண்டிய பண்டம் கிடைக்கிறதே! வேண்டிய அளவு கிடைக்கிறதாமே? எப்படி முளைத்தது அங்கே? பண்டங்கள் குறைவு என்ற விஷயம் பொய்தானே? சர்க்காருக்கு இது ஏன் தெரியாமற் போயிற்று? இதுபோன்ற பல கேள்விகளைக் கேட்பார்; படித்துப் பெருநோக்கு படைத்த ரகுபதி நன்றாக விளக்கிச் சொல்கிறான் என்ற சந்தோஷம் அவருக்கு. ரகுபதியும், அவருடைய சந்தேகங்களைப் போக்கும் வகையிலே உற்சாகமாகப் பேசி, தன் நாவன்மையைப் பொழிந்தான். அவனுக்கும் பொழுது போக்குவதற்கு நல்ல சந்தர்ப்பம் அல்லவா?

ஆனால் சில சமயம் ரகுபதியின் உற்சாகம் திசை திரும்பிற்று. "நான் தமிழன்" என்னும் இறுமாப்புடன் அவன் பேசும்போது, "நீங்கள் ஆந்திரர்," என்ற இடக்காரமும் சேர்ந்து கொள்ளும். "இசையைப் பற்றி என்ன தெரியும் உமக்கு?' என்று கேட்கும் தோரணையில் பேசுவான், சங்கீதத்தைப் பற்றிப் பேசுகையில். 'இசை ஆசிரியர் என்று பேர், இசையைப் பற்றியே ஒன்றும் தெரியாது; மற்ற விஷயங்களை என்ன கண்டுவிட்டீர்?" என்று சவால் விடுவது போல பிரசங்கமாரி பொழிந்தான். ஓர் சமயம்.

இது போன்ற கட்டங்களிலே சர்மா அடக்கமாக இருந்து ஆமோதிப்பவராகக் காட்சியளித்தார். சிறிது நேரத்திற்குள், அவர் மீண்டும் ரகுபதியை உயர்த்தி வைக்கும் முறையில் சந்தேகங்கள் கேட்டுப் பேசத் தொடங்குவார். ராஜேசுவரிக்கோ, குருவான சர்மா மேல் அனுதாபம் பொங்கும் வயதானவர் என்ற ஒரு மதிப்பாவது கொடுத்து சற்று இதமாகப் பேசலாமே கணவன் என்று நினைப்பாள்.

அவள் அவ்வாறு நினைத்ததும் நியாயம்தான். பெரியவர்களிடம் குறை இருக்கும். அது அவர்களுடைய மனப்போக்கு என்று கொள்ள வேண்டும். அப்படித்தானே அவளே கருதுகிறாள்? பவானியைப் போலவே தன்னையும் பாவித்து மாமியார் தன்னையும் கணவனோடு நாலு இடங்களுக்கு அனுப்பக்கூடாதா என்று முதலில் ஆசைப்பட்டாள். ஆனால் பிறகு? சற்று கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று மாமியார் விரும்புவதும் இயற்கைதான் என்று சமாதானம் அடைந்தாள். இப்போது சர்மா வாத்தியாரின் அபிப்பிராயங்களை வாயடி கையடி அடித்து மடக்கிப் பேசுகிறான் ரகுபதி. இது அடுக்குமா?

'என்ன இருந்தாலும் எனக்கு இசை அறிவூட்டியவர் என் வாத்தியார். அந்த நினைப்போ மரியாதையோ லவலேசுமும் இல்லை இவருக்கு" என்று மருகினாள் ராஜேசுவரி.

சிறு வயது முதலே உடலிலும் உள்ளத்திலும் பரவிய சங்கீதம் அவளை இப்படியெல்லாம் பாடுபடுத்தத் தொடங்கியது. நெருப்பினால் உண்டாகும் வெந்நீர் நெருப்பை அணைக்காதா? பேஷாய் அணைக்கும். ஆனால் சூரிய வெப்பத்தினால் உண்டாகும் வெந்நீர்

சூரியனை என்ன செய்யும்? ராஜேசுவரி தன்னுடைய இசையறிவையும் கற்ற வித்தையையும் ஒதுக்கி, சுயநலமற்றவளாய் பணி செய்து நற்பெயர் எடுக்க வேண்டும் என்று முன்னாடி உறுதி செய்து கொண்டிருந்தாள் அல்லவா? அது அந்த நாள் இருந்த சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் ஏற்பட்ட உறுதியே அன்றி வேறு அல்ல. அவளுடைய இயல்பிலே சுடர் வீசிய ஊக்கமும், இளமையிலே ஒளிர்ந்த ஆற்றலும், அவளுடைய இசைத் திறன் பெருகி வளர்வதையே பேணின. பிறவிச் சுடரை எந்தப் போலிச் சக்தியும் அவிக்கவில்லை.

கொஞ்ச நாட்களாகவே இந்தப் புதுக் கிளர்ச்சியின் வலிமை பெருகித்தான் இருந்தது. கணவனின் அன்பும் ஆசையும் அவளுடைய இந்தக் கிளர்ச்சிக்கு எந்தவிதமான ஆறுதலும் தர மறுத்துவிட்டது. உணர்ந்தாள். அவளுடைய வாத்தியாரிடம் ரகுபதிக்கு மதிப்பு இல்லை. அவளுடைய வித்தையில் ரகுபதிக்கு அக்கரை இல்லை. ஆனால் ராஜேசுவரிக்கே அந்த சர்மா வாத்தியார் தான் கண் கண்ட சரஸ்வதி. அவர் பாடுபட்டு ஊக்கி வளர்த்த அறிவுதான், "ராஜ்யம், ராஜ்யம்' என்று பலர் அவளை மெச்சிப் புகழக் காரணம். அந்த நன்றி மறக்கலாமா? மறக்குமா, உயிர் உள்ளவரை?

ராஜேசுவரிக்கு, சர்மாகாருவின் மீது உள்ள பக்தி, மாற்று உருவத்தில் வெளிப்பட்டது.

"இன்றைக்காவது இரண்டு பாட்டு பாடேன்," என்று சர்மா அவளைக் கேட்டுக் கொண்டதும், 'இந்த வாத்தியார் தான் ரோசங்கெட்டார்! இவருடைய அலக்ஷியம் தெரியவில்லை. நானும் அப்படியா?' என்று வீரிட்டுக் கொண்டு ராஜேசுவரிக்கு ரோசம் வந்தது.

கடுகடுப்புடன், " நான் இவருடைய மனைவியாக இருக்கிறேனே இப்போது. அதனால் பாட முடியாது," என்று சொன்னாள் பதில்.

"என்ன அர்த்தம் தெரியவில்லை!" என்று வாத்தியார் சிரித்தார்.

தயங்கினாள் ராஜேசுவரி. அவள் பேசியதன் அர்த்தம் அவளுக்கு இப்போது விளங்கிவிட்டது. சபாஷ் போட்டுக் கொண்டது ரோசம்.

'இவருக்கும் எனக்கும் மணையில் முடிச்சு விழுந்ததிலிருந்து, சங்கீதம் எனக்கு மனத் துன்பமே அளிக்கிறது. அதனால் எனக்கும் இவருக்குமிடையே சங்கீதம் என்ற பேச்சும் உறவுமே வேண்டாம்' என்று முழங்கிற்று ஒரு குரல்.

"இவருக்கு எதிரில் பாடமாட்டேன் சார், இது என் தீர்மானம்" என்று ஒரு தடுமாற்றத்துடன் சொல்லி முடித்தாள் ராஜேசுவரி.

ரகுபதிகூட அவளைக் கூர்ந்து பார்த்தான்.

"சபதமா?" என்று சர்மா சிரித்தார். அவருடைய அமைதியிலிருந்த அறியாமையையும், கணவனின் அமைதியிலிருந்து ஆணவமும் ராஜேசுவரிக்கு உறுத்தித் துளைத்தன.

"ஆமாம்," என்று சொல்லிவிட்டு உடனே அங்கிருந்து அப்பால் சென்றுவிட்டாள்.

அவளுடைய உறுதியின் வலிமையையோ ஆழத்தையோ சோதிக்கும்படியாக அப்புறம் நிகழ்ச்சிகள் ஏதும் இல்லை. கணவனுடன் வெளியிடங்களுக்குப் போய் வருவதிலும், வீட்டிலே குதூகலமாக வளைய வருவதிலும் பொழுது போயிற்று. ரகுபதிக்கும் அவளுக்குமிடையே வேறு எந்த விஷயத்திலும் திரை விழவில்லை.

வேட்டகத்தில் இருந்தது போதும் என்று ரகுபதியே முடிவு செய்ய வகையில்லாமல் வேலை விஷயமாக பேட்டி ஒன்று அவனை அழைத்துவிட்டது பங்களூருக்கு. ரகுபதி நாள் குறிப்பிட்டான் பயணத்திற்கு.

"வெள்ளிக்கிழமையா? கூடாதே, பிறந்தகத்திலிருந்து புறப்பட!" என்று ராஜேசுவரி சொன்னாள்.

"நான் பிறந்தகம் தானே போகிறேன்," என்று ரகுபதி சொன்னான்.

"எனக்குன்னு சொன்னேன்?" என்று ராஜேசுவரி சொன்னாள். சிரித்தாள்.

"நீ வருகிறாயா என்ன என் கூட?" என்று சற்று அமைதியாகவும், நிறைய துடிப்புடனும் ரகுபதி வினவினான்.

"பின்னே? வரவேண்டாமா?"

இந்தக் கேள்வியை ராஜேசுவரி உற்சாகமாகக் கேட்கிறாளோ என்று கூர்ந்து பார்த்தாள். இல்லை என்று தெளிந்தான். சந்தோஷித்தான்!

## 36

சென்னையை நெருங்கி வரும்போது, ராஜேசுவரிக்கு அவளறியாமலே பீதியும் படபடப்பும் ஏற்பட்டன.

முதல் தடவை, பெற்றோருடன் புக்ககம் நோக்கிப் புறப்பட்டாளே, அப்போது கூட இத்தனை அச்சம் இருக்கவில்லை. முன் தடவை கணவனோடு சென்னை வந்ததற்கு எதிரிடையாக இருந்தது மனநிலை, இம்முறை. ஒரே ஒரு ஒற்றுமை மட்டும் இருந்தது. "சென்னை, இசைக் கடல்," என்ற கவர்ச்சியும், கணவனுடன் தொடர்ந்து செல்லும் திருப்தியும் தான் முன்பும் இப்போதும் மனத்தாழத்தில் குடிகொண்டு அவளை ஆட்கொண்டன. மற்ற கற்பனைகளும் சிந்தனைகளும் ரொம்ப மாறுபட்டுவிட்டன. ஏதோ, ஒரு கடமையுணர்ச்சியினால் உந்தப்பட்டு வந்துவிட்டதாக உணர்ந்தாள் பயணத்தில். இருக்க வேண்டிய உற்சாகம் இல்லை.

வந்து சேர்ந்தாள் வீட்டிற்கு. ஆனால் மாமியாரை வணங்கி எழுந்தபின், முன்பு இருந்த சகஜ பாவமுடன், கலகலவெனப் பேசத் தயக்கமாயிருந்தது. சாரதாம்பாள் மாறாமல் 'வா' என்றார் வரவேற்கும்போது. ஆனால் முன்னம் குரல் எழுப்பிப் பேசிப் பழக்கமான ராஜேசுவரிக்கு இப்போது குரல் எழும்பவில்லை. பேசினாள், அதிலே அணை ஒன்று இருந்தது.

ராஜேசுவரி கற்க வேண்டிய பாடங்களும், சிந்திக்க வேண்டிய கட்டங்களும் கடக்க வேண்டிய பரீட்சைகளும் இன்னும் பல இருந்தன. இன்னும் தெரிந்து கொள்ள வேண்டிய சிக்கல்கள் சில இருந்தன. அங்காங்கு உள்ளத்தின் பல கோணங்களிலே தேங்கியிருந்த சில பால் துளிகளை, குழந்தைத்தனமான கருத்துக்களை, சூழ்நிலை உஷ்ணம் கெடுத்துவிட்டது.

"அம்மா, இந்தக் கூடை, உன் நாட்டுப் பெண் உனக்காக என்று ஆசைப்பட்டு வாங்கினாள்," என்று ரகுபதி ஒரு மடிப்புக் கூடையை எடுத்து வந்து தாயின் முன் வைத்தான். கூடை போலவும், பை போலவும், பெட்டி போலவும் பயன்படும் கூடை அது. வர்ணப் பூச்சும் கவர்ச்சியாக இருந்தது. அந்த தினுசில் உள்ள சின்னஞ்சிறு கூடைகளை சில பெண்கள் டம்பப்பையாகவும் உபயோகிப்பது வழக்கம். ராஜேசுவரி, பெரிய கூடையை மாமியாருக்காக வாங்கி வந்திருந்தாள். மாமியாரிடம் நல்ல பெட்டியோ, புடவைக் குவியல்களோ கிடையாது என்று தெரியும். இந்தக் கூடையாவது அவசியம், உபயோகம் என்று அவள் வற்புறுத்தியிருந்தாள்.

"ஆமாம் அம்மா! இவர் வேண்டாம் என்றார். நான் தான் பிடிவாதம் பிடித்தேன்" என்று ராஜேசுவரி சிரித்தாள்.

"எதற்கு போ! என்ன விலை?" என்று சாரதாம்பாள் முறுவலுடன் கேட்டார்.

"இரண்டே முக்கால் போலிருக்கு . . . இல்லை?" என்று கேட்டாள் ராஜேசுவரி, கணவனை.

"இரண்டே கால்" என்றான் ரகுபதி.

"இல்லைன்னா! இரண்டே முக்கால் இது; அப்புறம் டார்ச்சு பேட்டரி வாங்கினீர்கள் டார்ச்சுக்கு. சாக்கலேட் எட்டணா. சரியாகப் போயிற்று பணம் என்று சொன்னீர்களே," என்று சிரித்தாள் ராஜேசுவரி,

"அவனா கொடுத்தான் பணம்?" என்று கேட்டார் சாரதாம்பாள், ராஜேசுவரியை.

"ஆமாம் அம்மா, இரண்டு பேருமாகத்தான் போனோம் கடைக்கு; கொட்டி கிடந்தது இந்த மாதிக் கூடை," என்று சொன்னாள் ராஜேசுவரி.

"நீ தான் வாங்கியிருக்கிறாயா இந்தக் கூடை?" என்று ரகுபதியைக் கேட்பதற்கு சாரதாம்பாள் திரும்பினார். அவன் அலமாரியினருகு எதையோ எடுத்துக் கொண்டிருந்தான். கவனம் இந்தப் பக்கம் இல்லை.

"இரண்டும் மூன்றும் இதற்கெல்லாம் போட்டு . . ." என்று இழுத்தாற்போல சொல்லி முடித்தாள் சாரதாம்பாள்.

அப்போது ராஜேசுவரிக்கு என்னமோ சம்சயம் உறுத்திற்று.

'கூடையை அம்மாவுக்காக வாங்கலாம் என்ற ஆசை எனக்குத்தான் உண்டாயிற்று. பணம் கொடுத்தது அவர் தான். அதனால், நான் வாங்கினதாக அவர் சொன்னது சரியல்ல போலிருக்கு! மாமியார் முகத்திலே முறுவல் மாயமாகிவிட்டதே ஒரு நொடியில்!' என்று அவள் ஆச்சரியப்பட்டாள்!

ஸ்ரீமதி ராமசேஷன் அன்று பகல் வந்தார். ராஜேசுவரியைப் பார்த்துப் போக விரும்பித்தான். எப்போதும் அந்த மூதாட்டிக்கு ராஜேசுவரியிடம் உயர்ந்த அபிப்பிராயம் உண்டு. ராஜேசுவரியும் அதை உணர்ந்திருந்தாள்.

முறுவலுடன் தான் ராஜேசுவரி காட்சியளித்தாலும், அந்த முறுவலிலே இன்பம் குன்றியிருந்ததை ஸ்ரீமதி ராமசேஷன் அறிந்து கொண்டார்.

"இளைப்பாகவும் தெரியவில்லை; ஆனால் முகம் வாடியிருக்கே!" என்றார் அந்த மூதாட்டி.

"பிறந்தகத்திலிருந்து தான் வந்திருக்கிறாள்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள் சாரதாம்பாள்.

சிரித்தார் அந்த அம்மாள். "தேவலையே சாரதாம்பா; கெட்டிக்காரத்தனமாக பதில் சொன்னாயே!" என்று பாராட்டினார். ஆனால் உடனே குரல் தாழ, "அங்கே அம்மாவுக்கு ஒத்தாசை செய்கிறதற்கு என்றே போனாள், அதை நிறைவேற்றிவிட்டு வந்து சேர்ந்தாள், அதுவே பெருமைப்பட வேண்டிய விஷயம்!" என்று உள்ளங்கனிந்து பகர்ந்தாள்.

"இல்லை என்று யார் சொன்னா? ஆனாலும் இந்த இடத்தில் நாட்டுப் பெண்ணுக்கு இருக்கிற சௌகரியம் அங்கே பெண்ணா இருந்தாலும் வருமா? சம்சாரி இடம்; இவள் தான் மூத்தவள். எப்போதுமே, இங்கிருந்து போகும்போது நன்றாகத் தான் போவாள்" என்று முடித்தார் சாரதாம்பாள்.

"இந்தாத்து எள்ளும் நீரும் தான் ஒத்துக் கொண்டிருக்கிறதாக்கும்!" என்று மட்டும் சொன்னார் அந்தம்மாள்.

ராஜேசுவரிக்கு, தனது முகத்தின் பொலிவுக் குறைவும், அதன் காரணமும் தெரிந்து தான் இருந்தன. நாலு நாளாக, சென்னைப்பட்டணப் பயணம் உறுதிப்பட்டது முதல், அவளுடைய உடலில் சோபை குன்றியது போலச் சோர்வு இருந்தது. பிறந்தகம் போகும் மகிழ்ச்சியில் முகத்திலே இன்பச் சுழிப்புத் தேங்கியே இருக்கும்; புக்ககத்திலிருந்து போகும்போது அவள் முகம் அவளுக்கே பெருமிதமூட்டும். இதை ராஜேசுவரி அறிவாள். சென்ற தடவை, எப்போதும் இருந்த மகிழ்ச்சியையும் மீறிய ஒரு ஆறுதலடன் புறப்பட்டுப் போனாள்; வரும்போது, எப்போதும் இருந்த சிறு வருத்தத்தையும் மீறிய குழப்பத்துடன் வந்திருக்கிறாள். நல்ல வித்தியாசம் தெரிகிறது!

இது சாரதாம்பாள் பெருமைப்படக்கூடிய அம்சம் அல்லவே!

அன்று ஸ்ரீமதி ராமசேஷனின் கனிவுப் பார்வைகளை, எப்போதும் உணராத நன்றியுடன் பருகினாள் ராஜேசுவரி.

பெண்ணுகளுக்குப் பிறந்தகத்துப் பெருமையும் பெற்றோர் பாசமும் அதிகம். இது யாரும் மறுக்க முடியாத உண்மை. ராஜேசுவரிக்குக் கூட இப்போது பிறந்தகத்து அருமை நன்றாகத் தெரிந்து போயிற்று. ஆனால் அவளுக்கு இருந்த பிறந்தகப் பாசம், கணவனை துன்புறுத்தும் பாசம் அல்ல. புக்ககத்தைப் பழிக்கும் பாசம் அல்ல; நடுநிலைமை தான் வகித்தது அவள் பாசம்.

பவானி இருந்த தோரணையோ வேறு. பிறந்தகம் என்ற அவளுடைய பெருமை வெளிப்பட்ட போதெல்லாம், அது அவளுடைய சொந்தப் பெருமையாக முழங்கிற்று. நாளடைவில் அவளும் பிறந்தகப் பெருமை பேசுவதில் ஒரு மாறுதலைக் கடைப்பிடித்தாள். மதனி ராஜேசுவரியையும் உள்ளிட்ட பிறந்தகம் என்ற விளக்கத்தில் அவள் மதனிக்கு அந்த பெருமை சேருவதை விரும்பவில்லை. அதனால், பெற்றோர் என்ற பெருமையை மட்டும் பிறந்தகத்திற்குக் கொடுத்தாள். தன் அன்னையைப் போன்ற பொறுமைசாலியும், தந்தையைப் போன்ற தியாக சீலரும் இருப்பது அரிது என்று புகழ்ந்து வந்தாள். தந்தையின் தியாகத்தினால் தாய்க்குப் பொறுமை ஏற்பட்டது என்று பொருள்படும்படியும் பேசுவாள்; தன் தாயார் பிறரின் குற்றங்களைப் பொறுத்துப்போகும் பொறுமைசாலியாகையால் தான் ராஜேசுவரியிடமும் குற்றங் காணாமலிருக்கிறாள் தன் தாய் என்று தோன்றுபடியும் பேசுவாள்.

அப்படிப் பேசுவதில் பவானிக்கு ஒரு ஆறுதல் இருந்தது. அதை சத்தியமூர்த்தி சரியாக உணர்ந்து கொண்டாரா? இல்லை. ஆண் மகனாகிய அவர் அத்தனை சிந்திப்பாரா? ரகுபதியைத் தொடர்ந்து ராஜேசுவரி சென்னை வந்துவிட்டாள் என்றும், அதற்குப் பிறகு ரகுபதி பங்களூருக்கு பேட்டிக்காக சென்று பலனில்லாமல் திரும்பியிருக்கிறான் என்று கடிதத்தில் செய்தி வந்தபோது சத்தியமூர்த்தி அனுதாபப்பட்டார்.

"இந்தப் பக்கம் வரக் கூடாதோ ரகுபதி, பெண்டாட்டியை அழைத்துக் கொண்டு?" என்றார். "அதான் மன்னி பிறந்தகத்துக்குப் போய் இப்போ தானே வந்திருக்கிறாள்" என்று பவானி நினைவு மூட்டினாள். ராஜேசுவரியும் தன்னைப் போலத்தான் பிறந்தகம் நாடி ஓடுபவள் என்று சூசித்தாள், ஆனால் அதைக் கண்டிக்கும் வகையில் சத்தியமூர்த்தியின் பதில் வெளிப்பட்டது.

"முக்கியமான காரியமாகப் போனாள், வந்தாச்சு; உனக்குக் கூட உன் மன்னியே வந்து நடத்திக் கொடுத்துவிடுவாள், அழைத்தால்?" என்று சிரித்தார் அவர். பவானி கருவுற்றிருந்தாள் அப்போது.

"நான் பிறந்தகம் போகாவிட்டால் தீராது! மன்னிக்கு அப்படியா? ஏதோ அம்மாவுக்கு உதவி என்று சாக்குத்தான். அண்ணாவுக்கு வேலை இல்லை, புக்ககத்தில் இருப்பதென்றால் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்? எல்லாப் பெண்களும் ஒரே மாதிரிதான்," என்று படபடத்தாள் பவானி.

சத்தியமூர்த்தியோ, பவானியின் பொறாமையை அறியாமல், பவானி மதனியின் சிறப்புகளைக் குறைக்கும் வகையில் பேசுகிறாள் என்று உணராமல் பேசினார். "அம்மாவைக் கொள்வார்கள் பெண்கள்.....பெண்களுக்கு அம்மா ராசி வரும் என்று சொல்வார்கள். ஆனால் உனக்கு உன் அம்மா ராசி இல்லை.. உன் மன்னிக்கு மாமியாரின் ராசி வந்துவிட்டது பாரேன். உன் அப்பாவாவது வேண்டாம் என்று உதறியிருந்தார் வேலையை. அந்த வம்சாவளி வந்துவிடும் போலிருக்கு இனிமேல். ரகுபதிக்கு வலுவில் பிடுங்கப்பட்டிருக்கு வேலை. எனக்கு இரண்டு மாசம் லீவு எடுப்போம் என்றால் முடியவில்லை . . . " என்று சொல்லிக் கொண்டு போனார் அவர்.

"வம்சாவளி எங்கே! மன்னிக்குக் குழந்தையே பிறக்கக் காணோம். என் மாதிரி சட்டுப்புட்டென்று பெற்றிருந்தால், அம்மாவுக்கு உதவியாவது, மாமியாருக்கு அனுசரணையாவது!" என்று தனது விமரிசனத்தை முடித்துக் கொண்டாள் பவானி. ஆனால் அவளுக்கு ஏனோ ஒரு சிறு குறுகுறுப்பு மட்டும் இருந்து கொண்டே இருந்தது.

புருஷனுக்கு வேலை இல்லை என்ற நிலையினால், தனது மதனியின் பெருமைகள் மங்கிப் போகவில்லை, மெருகிட்டுக் கொண்டுவிட்டன என்று நினைக்காமலிருக்க முடியவில்லை. முன்பே பார்த்துவிட்டாள், ராஜேசுவரி கணவனுக்கு உத்தியோகம் வேலை இல்லை என்ற மனக்குறைபடவேயில்லையே!

பொருள், பதவி, தனிக்குடித்தனம் என்னும் சிந்தனைகள் ஒழிந்தவளாய், சூது வாது அறியாதவளாய், 'எங்களிடையே ஒளிரும் அன்புதான் உயர்ந்தது! எனக்கும் அன்பு போதும்," என்ற கம்பீரமான மனப்போக்குடன் இருந்தாள் மதனி. அந்த மனப்போக்கு வருவது கஷ்டம்தான்! தன் அன்னையாவது மனக்குறையுடன் அல்லற்பட்டுப் பொறுமையாக இருந்தாள். ராஜேசுவரிக்குக் குறையே இல்லாத நிறை மனம்! இத்தனைக்கும் அசடு அல்லவே அவள்! நல்லியல்பின் உருவகம் தான்!

இரண்டு மாதங்கள் விடுமுறை எடுத்தால், ஒன்றரை மாதம் சென்னையில் இருக்க வேண்டும், அரை மாதம் மதுரையில் இருந்தால் போதும் என்று சொல்லத் துடிக்கும் பவானிக்கு, ராஜேசுவரியின் பட்டணப் பிரவேசமும், அண்ணாவின் வேலையற்ற நிலையும் பொறாமையைக் கிளரும் அம்சங்களாகத்தான் இருந்தன. விந்தை!

"அண்ணாவிற்கு கூடிய சீக்கிரம் வேலையாகி மன்னிக்கும் ஒரு வழி பிறக்கட்டும்!" என்று பவானி தன் அன்னைக்கு கடிதம் எழுதியபோது பவானியின் கருத்து என்ன? மதனியின் புக்கக வாசம், தன் கணவனின் மதிப்பில் தன்னைத் தாழ்த்திவிடுமே என்ற அச்சம் தான். "நீ என்னமாகப் பேசுவாய், எப்படி இருப்பாய், அவள் நிலையிலிருந்தால்? உன் மதனிக்கு உன்னைப் போல வேற்றுமை தோற்றுகிறதா? அவள் எப்படி இருக்கிறாள் பார்," என்று அவள் கணவன் கேட்கக் கூடாது. நினைத்துவிடவும் கூடாதே! வீட்டிலே அப்பளப் பாட்டு தினசரி நிகழ்ச்சிகளில் ஒன்றாகிவிட்டது.

"அப்பளம் தீர்ந்துவிட்டது. பருப்பு ஊறப் போடுகிறேன். ஒரு கடை அப்பளம் கூட வாங்குகிறது கனவுக் கூட காண முடியாது நம்மகத்தில். கடை அப்பளமும் யாரோ அம்மாமியும், பொம்மக்காவும் தான் செய்கிறார்கள். பொம்மனாட்டி காரியமா அது? ஐய, சிகப்பு வாயல் புடவை தான் அப்பளம்!" என்று அப்பள விளக்கம் துவங்கிவிடும். பருப்பைக் களைந்து உலர்த்தும் போது, "இந்த மாதிரி அலம்பிக் காய வைக்கச் சோம்பல்பட்டால் அப்பளம் ஏன் சிகப்புப் புடவை ஆகாது?" என்ற கேள்வி கிளம்பும். பிறகு மாமியும் மருமகளுமாய் பருப்புப் பொறுக்கி சுத்தம் செய்யும் சாவகாசமான நேரத்திலே, சாரதாம்பாள், ஆதியோடந்தமாக, அப்பளம் இட தான் கற்ற வித்தையை விளக்குவது வழக்கம். கற்றுக் கொடுத்த அம்மாளே மூக்கின் மீது விரலை வைத்து அதிசயித்த வரலாறு அது. சொல்வதிலே ஊக்கமிராதா? பிறகு மாவு இடிக்கும்பொழுது "சிலர் சர சர வென்று கொட்டி விடுவார்கள். நான் பட்டுப்போன மாவு இடிக்கிறேன். அது தான் பார் அப்பளமும் வெண்பட்டு மாதிரி!" என்று சொல்வார் சாரதாம்பாள், ஏந்திரத்தின் மறுபுறம் அமர்ந்திருக்கும் ராஜத்தினிடம்.பின்னர்,மாவு பிசைந்து,இடித்து உருண்டைகள். உருட்டும்போது,"விளக்கெண்ணெய் ஊற்றி ஊற்றிக் குளிப்பாட்டுவார்களே சில பேர், நான் அப்படிச் செய்யமாட்டேன். பிரண்டை ஜலம் கூட போட மாட்டேன். என் அப்பளம் என்ன குறைந்து போயிற்று? எல்லாரும் எல்லா சிசுருஷையும் செய்துவிட்டு, அப்பளம் இட்டேன் என்று பெருமையடித்துக் கொள்வார்கள். ஆனால் அது எப்படியிருக்கும் என்கிறாய்? விரட்டிதான்!" என்று சொல்லி மாமியார் சிரிப்பார். ராஜமும் சிரித்து வைப்பாள். சிரிப்பதற்கும், உள்ளத்திலே இழுத்துப் பிடிக்கும் சுமையைத் தளர்த்துவதற்கும் சந்தர்ப்பங்களுக்காக காத்திருப்பவள் ஆயிற்றே!

அப்பளம் இடும்போது, ஒரு ஆவர்த்தனம். "கை வலிக்குமே என்று தளரப் பிசைய மாட்டேன். பிறத்தியாரைக் கூப்பிட்டால், கைவலி எடுக்கிற மாதிரி உருண்டை உருட்டிவிட்டாயே என்று கேட்பார்கள். அதற்குத் தான் நான் யாரையுமே கூப்பிடமாட்டேன். இங்கே தான் அக்கம் பக்கம் பங்களாவும், பெரிய மனுஷாளுமாச்சு. நம்மூரில், இடறி விழுந்தால் உறவு முறையார்தான். கூப்பிடலாம், வருவார்கள். ஆனால் பவானி கல்யாணத்திற்கும், ரகுபதி பூணலுக்கும் இட்டேனே . . . ஆயிரக்கணக்கிலே!

ஒண்டியாகத்தான் இட்டேன். தினத்துக்கு இருநூறு என்று இட்டுவிடுவேன். இப்போது நீ இட்டுப்போகிறாயே! அப்போ அது கூட ஒருத்தரும் இட்டதில்லை, போட்டதில்லை" என்று மாமியார் சொல்லும்போது, ராஜேசுவரிக்கு வருத்தமும் இதமும் உண்டாகும். "என் காரியம் பார்க்கப் போகிறேன்," என்று சொல்லிவிட்டுப் போய்விட அவளுக்கு அவசியமும் இல்லை, வசதியும் இல்லை. மாமியாரைத் தொடர்ந்து அண்டி நிற்பதைத் தவிர வேறு வழி இல்லை; வேறு அலுவலுமில்லை.

சபதம் என்றும் தீர்மானம் என்றும் தோன்றாத நாளிலேயே ரகுபதி ரேடியோவை ரசிக்கும்போது, "நான் பாடுவேன், பாடுகிறேன்," என்று குறிப்பு காட்ட ராஜம் கூசினாள்.

இப்போதோ?

ரகுபதி மாலைப் பொழுதில் உலாவப் போன பின்னர் தான் பாடவேண்டும் என்ற பிடிவாதம். அது எப்படி சாத்தியம்? மாமியாரின் அப்பள உற்பத்திக்கு ஒத்துழைக்கத்தான் அங்கு வசதியிருந்தது. அப்பள உற்பத்தியின் உற்சாகத்தினால் சாரதாம்பாளும் கலகலப்புடன் பேசிக் கொண்டிருந்தார். மேற்பூச்சு இல்லாத இன்முகம் காட்டினார் சாரதாம்பாள். அதுவே ஆறுதலாகக் கருதினாள் ராஜேசுவரி. அதனால், மாமி யாருடன் அப்பள வேலையில் ஈடுபட்டபோது, கருத்துடன் தான் சந்தோஷமுடன் தான் விளங்கினாள். ஆனால் அவளுடைய எந்த மன அடக்கத்திற்கும் ஒரு சோதனை இருந்ததே!

"அம்மா, இன்று எத்தனை அப்பளம் ஆச்சு? யாருக்குக் கொடுக்கப் போகிறாய்? என் சிநேகிதன் வருவான், பச்சையப்பளம் பொரித்துக் கொடேன். பூனாவில் இருக்கிற என் சிநேகிதனுக்கு ஒரு கட்டு திடுதிப்பென்று அனுப்புவோமா?" என்பன போன்ற கேள்விகளை ரகுபதி கேட்பதும், அப்பொழுதெல்லாம் ஒரு இரட்டைக் குரலிசை போல அப்பளப் புகழ்ச்சி முழங்குவதும் சகஜமாகிவிட்டது.

அப்பளம் இட்டு எண்ணிய பிறகு, "இருநூறு ஆகும் என்று போட்டேன். எங்கே, என் கையில் சின்ன உருண்டை வந்தால் தானே? எல்லா அப்பளமும் தாம்பாளம் மாதிரி பெரிசு. ராத்திரியே பச்சையப்பளம் பொறித்துவிட்டால் அப்புறம் ஒன்றரைக் கட்டுத்தான் தேறும். அப்பளம் இடுகிறன்றைக்கெல்லாம் பச்சையப்பளம் பொறித்து விடுவேன். என் சித்தப்பா இன்னமும் சொல்வார். சாரதம் பால் நுரையாட்டம் பச்சையப்பளம் பொறித்துப் போட்டாளே என்று! ஏகப்பட்ட எண்ணெய் இழுக்குமே என்று நான் கூசவே மாட்டேன்," என்று பெருமைப்படுவார் சாரதாம்பாள்.

"நான் பச்சையப்பளம் பொறிப்பதை நம்மகத்தில் தான் பார்க்கிறேன்," என்று ராஜேசுவரியும் ஆமோதிப்பாள். அவளுடைய பிறந்தகத்தில் அப்பளம் இட்டு அவள் பார்த்ததேயில்லையே.

அப்பளத்தைக் காயவைத்துக் கட்டி எடுத்து வைக்கும்பொழுது தான் ராஜேசுவரியின் வேதனை கிளறிக்கொள்ளும். 'ஒரு நூறு மங்கள மாமிக்குத் தருகிறேன். மாப்பிள்ளை சம்மந்தி வரப்போகிறார்கள், பெண் வளைகாப்புக்கு; வெளேரென்று அப்பளம் போடட்டும்" என்று மாமியார் சொல்லும்போது, "யாருக்கு வளைகாப்பு? எந்தப் பெண்ணுக்கு தாய்மை ஆரம்பம்?" என்று ஆவல் வெகு சொற்பமாக இருக்கும். "அந்தப் பெண் நன்றாகப் பாடுவாளோ? ரேடியோவில் பாடக்கூடுமோ? அந்தப் பெண்ணுக்கு கணவன் பக்க பலம் இருக்குமோ?" என்ற கற்பனை தான் ஓடும்.

"அப்பள சப்ளை நீங்களே பண்ணிவிடுங்கள் மாமி, என்று ஜனகம் சொல்லிவிட்டாள். அவளுடைய பெண் வடக்கே போகிறவளாச்சு. இரண்டு கட்டு தான் கேட்டாள்; மூன்றாகக் கொடுத்தால் போச்சு. இந்த மாதிரி அப்பளம் கடையில் ஐந்து ரூபாய் கொடுத்தாலும் வருமா? நமக்குப் பிரமாத செலவு இல்லை. ஆனால் அவளுக்கு இது பாக்கியமாய் இருக்கும். வெறுமனே இருக்கிற போதுக்கு நாம் இடுகிறோம்; கொடுத்தால் சந்தோஷப்பட்டுப் போகிறார்கள். இருக்கட்டும், நாளைக்கு பருப்பு ஊறப்போடுகிறேன்," என்று சாரதாம்பாள் பேசி முடிக்கும்போது "யார் யாரோ வடக்கே போகிறார்கள், நமக்கு எப்போது

விமோசனம்? வெறுமனே இருக்கிற நேரம் நினைத்துவிடவும் கூடாதே! இதுதான் பவானியின் கவலை.

ஆனால் பவானிக்கு ராஜேசுவரியின் நிலை தெரியுமா? தெரியாது. ராஜேசுவரிக்கும் இப்போது புக்ககச் சூழ்நிலை கைத்துப் போய்க் கொண்டிருந்தது. பிறந்தக வாழ்வு ஜாலக்குக் காட்டிக் கூப்பிட்டது.

பவானி, 'மன்னிக்கும் வழி பிறக்கட்டும்' என்று எழுதிவிட்டாள் அல்லவா? அதனால் ராஜேசுவரிக்கு பவானியிடம் நன்றி ஏற்பட்டது. இந்த மட்டும் பவானி சொன்னாளே என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் பவானியின் கடிதத்தில் இருந்த ஒரு சிறு பகுதி அவளைப் பார்த்து ஏளனம் செய்தது.

"அப்பளமும் பக்ஷணங்களும் பத்திரமாய் வந்து சேர்ந்தன. நெய் பண்டங்களுடன் வைத்து விட்டதனால், அப்பளத்திற்கும் எறும்பு வந்துவிட்டது. எல்லாவற்றையும் இன்னொரு முறை நான் காய வைத்துத் துடைத்து வைக்கும்படி ஆயிற்று. ஒட்டிக்கு ரெட்டி வேலை!" என்று எழுதியிருந்தாள் பவானி.

"இது கூட சுமையா?" என்று ராஜேசுவரி வியந்தாள்.

நினைக்கமாட்டாளா? பவானிக்கு அனுப்பப்பட்ட அந்த அப்பளங்களை உற்பத்தி செய்ய, அவளும் உதவினாளே! இப்போதும், இன்னும், இந்த வீட்டிலே அப்பளப் பாட்டு தினசரி நிகழ்ச்சிகளில் ஒன்றாகிவிட்டது. அந்த வெறிக்கு அவளுடைய பொழுதும் புலன்களும் பலி நிறுத்தப்பட்டன.

"இப்படியா போகணும் எனக்கு!" என்று ராஜேசுவரி நெட்டுயிர்த்தாள். "ஐயோ, இந்த ஒரு வேலை தான், இந்த ஒரு அற்ப விஷயந்தான் என் சூழ்நிலை முழுதும் பரவிப் படர்ந்துவிட்டது. அந்தோ, தெய்வீகமான இசைக்கு இல்லாத ஆதரவும் சேவையும் இதற்குத் தேவையா?" என்று இதயம் நொந்தாள்.

"எந்தன் பாட்டுத் திறமையினாலே வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்று ராஜேசுவரி விரும்பினாள். அது அவளுடைய தகுதிக்கும் பண்பிற்கும் ஒவ்வாத பேராசை தான். ஆனால் அவள் அத்தனை ஆவேசமுடன் தான் துடித்தாள். அபாயம், ஏமாற்றம், என்ற சமயங்களிலே எழும்பும் சக்தி தான் அலாதியாயிற்றே?

அன்னைக்கு உதவி செய்யவென்று தான் போனாள் பிறந்தகம். செய்தாள் வேலைகள். ஆனால் வேலையின் பளுவே உணராமல், வேலை செய்தபடி பாடி முழக்கினாள். சமையல் செய்து கொண்டே பாடினாள். துணி துவைத்துக் கொண்டே கைகளின் அசைவுக்கு ஏற்றபடி பாடினாள். அதற்கேற்ற துக்கடா பாட்டுக்களைப் பாடிவிடுவாள். தோசை வார்க்க இரண்டு மணி நேரம் வீண் போது ஆகிறதே என்று தோன்றாது, பாடிக் கொண்டே இருப்பாள்.

குரல் விட்டுப் பாடிப் பாடிப் பழகிவிட்டாள். இப்போது குரல் வளையை யாரோ பிடிப்பது போல வேதனைப்பட்டாள். மாமியாரும் மாமனாரும், கணவரும் தூண்டுதல் அளிக்காவிட்டாலும், தானாகவே அவள் முன் வந்திருப்பாள். இசையில் அத்தனை ஆர்வம் இருந்தது.

ஆனால் அவள் ஒரு பெண்! இல்லம், இன்பம், குடும்பம், குதூகலம், கணவன், காதல் என்று நினைப்புகளும் நிறைந்த பெண் அவள்.

குரங்கு மனம் வழங்கிக் கொண்டிருந்த நியாயத்தில் ஆசை, உணர்ச்சி, இரண்டின் பங்கும் குறைந்து கொண்டே வந்தாலும், இன்னும் போட்டி நீடித்துக் கொண்டிருந்தது.

மனைவியின் கலையுள்ளத்திற்குத்தான் பாராமுகமாக இருந்தானா ரகுபதி? இல்லை, அவளுடைய பெண் மனத்திற்கும் அவன் வஞ்சனை செய்துவிட்டான். அவன் மேல் பிழையில்லை. அவளை நோக வைக்கும் ஆசையோ கருத்தோ கிடையாது அவனுக்கு. "கொஞ்ச நாள் சற்று சிரமம்தான் அவளுக்கு, என்ன செய்ய முடியும்? இருக்கட்டும், சமாளித்துக் கொள்ளும் சக்தியும் இருக்கிறது அவளிடம்." என்று நம்பிக்கை தான். ரகுபதிக்கு

ஒரு வேலை கொடுக்கக்கூடாது என்று அரசாங்கத்திற்கு வன்மமா? இல்லையே! "நாட்டின் நிலைமை இது. என்ன செய்ய முடியும்? யுத்த காலத்தில் வேலை கிடைத்ததே, சம்பாதித்தோமே என்று சந்தோஷப்படவேண்டும்," என்று அரசாங்கம் நினைத்தது. ரகுபதியும் அப்படியே எண்ணினான், மனைவியைப் பற்றி. எட்டு மாதங்கள் வாழ்வு வந்ததே பெரும்பேறு! அதற்கு முன்பும் இப்போது போல தானே இருந்தது நிலை?

ராஜேசுவரியின் கருத்து இன்னும், 'வேலையற்ற கணவன்' என்று பொருமலில் வரவில்லை. அவளுக்குப் 'பொருள்' என்பதின் பொருள் இன்னும் உள்ளதுள்ளபடி விளங்கவில்லை. மணவாழ்வில் கணவனிடம் என்னென்ன சலுகைகளை எதிர்பார்க்கும் உரிமை தனக்கு உண்டு என்பதைத் தான் அந்த அமர வாழ்வு உணர்த்திவிட்டது என்று கருதினாள். அங்கிருந்ததைப் போல இங்கே கணவன், மனைவியாக மட்டும் இருக்க முடியாது. அவன் புதல்வனாகவும், இவள் நாட்டுப் பெண்ணாகவுங் கூட இருக்கவேண்டும் என்று அவள் அறிந்தாள். ஆனால், கணவன், மனைவி என்ற சலுகையும் உறவும் அறவே ஒழிந்து விட்டதைத்தான் அவளால் தாளவில்லை.

"என் ஒருத்தி விஷயத்திலே தவிர மற்ற எந்த விஷயத்திலே அவர் வேலையற்றவராக நடந்து கொள்ளுகிறார்? பெற்றோரிடம் புகல் அடைந்த புதல்வர் என்ற ஒடுக்கமும் பணிவும் இருக்கட்டும். ஆனால் கணவன் என்ற ஹோதாவும் பொறுப்புங் கூட இழந்து விடவேண்டுமா? பொருளீட்டி மனைவியை ஆதரிக்க வேண்டாம், அன்பு சூட்டி தேற்றக் கூடாதா? உடல் ஒடுங்கி மனம் மனம் நொந்து உணர்ச்சி வற்றி நிலை தடுமாறிக் திண்டாடுகிறேனே, "என்று ஏங்கினாள்.

இது அவளுடைய காதல் மனதின் தாபம். ரகுபதியோ சத்துவ குணமே உருவாயிருந்தான். 'நமக்கென்னகுறை?' என்ற பாவனையில் இருந்தான்.

அதனால் ராஜேசுவரியின் பரிவை இழந்தான். 'இவர் வகிப்பது நடுநிலைமைதானா? என் உணர்ச்சிப் போரை மதிக்க வேண்டாம்; எனக்கும் உணர்ச்சி இருப்பதாகவாவது அறியலாம்; அறிந்திருப்பதாகக் காட்டிக் கொள்ளலாம்!" என்று ஆசைப்பட்டாள்.

ஒரு நாள் ரேடியோவில் நல்ல கச்சேரி நிகழ்ச்சி முழங்கிக் கொண்டிருந்தது அந்த நிகழ்ச்சியிலே பாடப்பட்ட ஒரு கீர்த்தனம் அவளும் நவராத்திரியிலே பாடினாள். அற்புதமாக இருந்ததாக பாராட்டுக் கிடைத்தது.

"நானா பாடினேன்? நானா அந்தப் பாராட்டு பெற்றேன்?" என்று நினைத்தாள். அவளையும் மீறி விசும்பல் பீறிட்டது. கைகளிலே முகம் புதைத்து அழுதாள்.

பார்த்துக் கொண்டேயிருந்தார் மாமியார், சாரதாம்பாள். அதை எதிர்பார்த்தவர் போல அமைதியைக் கடைப்பிடித்தார்.

விசும்பல் கேவலாக மாறிவிட்டது. 'அம்மா' 'அம்மா' என்று அரற்றியபடியே ராஜேசுவரி அழுதாள்.

"ராஜலக்ஷ்மியா?" என்று கேட்டுவிட்டார், துரைசாமி, வந்து பார்த்தார்.

"கொஞ்ச நாளாகவே மறைவில் கண்ணை கண்ணைத் துடைத்துக் கொள்ளுகிறாள். பார்த்தேன்!" என்று பதிலளித்தார் சாரதாம்பாள்.

கேவலும், விம்மலும் 'இனி அடங்க மாட்டோம்' என்ற வீறுடன் ராஜேசுவரியிடமிருந்து வெடித்துக் கிளம்பின. மௌனமாக வந்து எட்டிப் பார்த்தான் ரகுபதி, தூணருகு நின்றபடி; வாயைப் பொத்திக் கொண்டு உடல் குலுங்க விசித்து அழுத மனைவியைத் தான் பார்த்தான்.

"இப்படி அழுகிறாளே!" என்று துரைசாமி வியந்தார்_. ஒரு நிமிஷம் தயங்குவது போல இருந்தார். பிறகு குரல் தாழ்த்தி, "இது தான் ஹிஸ்டீரியா!" என்று நிதானமாகச் சொல்லிவிட்டுப் போனார். ரகுபதியும் அப்பால் போய்விட்டான். மெல்ல விம்மல் தணிந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு தண்ணீரால் முகங்கழுவிக் கொண்டு ராஜேசுவரி அரை

மணிக்குப் பின்னர், "நானும் ரொட்டி இடுகிறேன் அம்மா," என்று மாமியாருக்கு எதிரே வந்து அமர்ந்தாள்.

"ஏன் அழுதாய்? உன் வருத்தம் இது தானே?" என்று கேள்விகளைக் கேட்கப் புகாமல் மாமியார் தன்னுடைய மனநிலைமை அறிந்தவர் போல விளங்கியதைக் கண்டு, ராஜேசுவரிக்கு நன்றி உண்டாயிற்று.

"என் வருத்தம் என் வீண் ஆசைகளின் மேலே தான். உங்கள் பேரில் எனக்கு வருத்தம் இல்லை. அப்படி ஏதாவது இருக்குமானால் அது என் கணவர் மேல் தான், என்று சொல்லும் சலுகையோ இல்லை அவளுக்கு. அதனால் செயலில் சகஜ பாவம் காட்டினாள். மாமனார் மாமியாரைக் குறை கூறுவது தகாது என்று அவள் சலுகையுடன் கணவனிடம் கோபம் கொண்டுவிட்டாள்.

இன்னொரு நாள், பாராட்டுக்கு லாயக்கற்ற ஒரு இளம் பாடகியின் குரலிசையை, ரகுபதி ரேடியோ அருகு அமர்ந்து கவனித்துக் கொண்டு இருந்தான். இசை மனநோய்க்கு மாற்று என்ற நினைப்பு போலும் அவனுக்கு

இரண்டு மாதம் முன்னறிவிப்பும், தேவையான பாட்டுக்களைப் பாடி பழக வாரக் கணக்கில் அவகாசமும் கிடைக்கும்போது, இந்த அரை மணி நேர இசை ஒரு பொருட்டா? சாஷாத் சென்னைப் பட்டணத்தில் இருக்கிறாள் அவள். கச்சேரிகள் வாரந்தோறும் நடக்கின்றன சபாக்களிலே, போய்க் கேட்கும் பேறு இல்லை. ஆனால் அகில இந்திய ரேடியோ நிலையத்தில் போய் ஒரு தடவை பரீட்சைக்கு உட்கார்ந்தால் போதுமே, படிப்படியாக அவன் பெருமை வெளிவந்து விடுமே . . . ஆனால் இந்த வீண் ஆசையில் புகக்கூடக் குன்றுகிறதே உடலும் உள்ளமும்?

யாரோ பாடும் இசையை, ரேடியோவிலிருந்து வருகிறது என்று சிரத்தையுடன் கேட்கிறானே ரகுபதி! சர்மா வாத்தியாரின் சிஷ்யை என்ற அலட்சியம் தானே மனைவி என்ற பரிசைக் கூட மறக்கடித்துவிட்டது! மேடை ஏறிப் பாடி நாலு பேர் மெச்சுமளவு விஷயமறிந்தவள் தான் மனைவி என்ற நினைவையே காணோமே!

கட்டு மீறிய துக்கத்தில் 'ஓ' வென்று வாய்விட்டு கதறிவிட்டாள் ராஜேசுவரி.

"என்னது?" என்றான் ரகுபதி.

"அவள் தான் அழுகிறாள் இப்படி! நிறைந்த வீட்டில் இப்படி அழலாமா? ஆகுமா வீட்டிற்கு?" என்று அலுப்புடன் பதிலளித்தார் சாரதாம்பாள்.

ஆறுதல் ஏற்பட்டவரை அழுது ஓய்ந்த பின்னர் ராஜேசுவரி, முன் போலவே சகஜ பாவம் ஏற்படுத்திக் கொண்டுவிட்டாள். சாரதாம்பாளும் அதற்கு இடமளித்தார். ஆனால் ராஜேசுவரிக்கு உள்ளூர மனச் சஞ்சலம் இருந்து கொண்டே இருந்தது. உணர்ச்சி வசப்பட்டு விம்முவதும், கண் கலங்குவதுமாக இருந்து, ராமசேஷன் வீட்டாருக்கும் பிறருக்கும் நடுவில் மாமியார் மாமனார் தர்மசங்கடப்படும்படி செய்வதை விட, அங்கிருந்து விலகிக் கொண்டால் தனக்கும் பிறருக்கும் கூட அமைதி உண்டாகும் என்று முடிவு செய்தாள். வழி தான் புலப்படவில்லை.

இந்த ஏக்கத்திற்குச் சிகரம் போல இருந்தது, 'பவானி வரப்போகிறாள்' என்ற செய்தி. 'பவானியும் வந்துவிடப்போகிறாளே, ஈசா," என்று தான் வருந்துவது அழகல்ல, என்று ராஜேசுவரியின் நல்லுணர்வு சொல்லிற்று. அந்தப் போதனையையும் மறுக்க முடியாமல், வேதனைப்பட்டாள். "பெற்றோரிடம் வர அவளுக்கு உரிமை இல்லையா?" என்ற யோசித்துக் கடைசியில் ஒரு வழியைக் கண்டாள். "நானும் என் பெற்றோரிடம் போய்விடுகிறேன் என்று இந்தச் சமயத்தில் சொல்வது நியாயமல்ல! தாயின் மகப்பேறுக்கு உதவி செய்யப் போனேன்! அதே உதவியை இங்கும் செய்து கொடுக்க வேண்டாமா? பவானி வந்தால், பாட்டுக் கச்சேரிகளுக்குப் போவதும், வெளியிடங்களுக்குச் சென்று வருவதும் நடக்கும். எனக்கு வழி பிறக்கணும் என்று வாழ்த்தியிருக்கும் பவானியாயிற்றே" என்று முடிவு செய்தாள்.

எதிர்பாராத விதமாக மாறிப் போயிற்று அந்த முடிவு. ராஜேசுவரியின் கண் கலக்கமும், பவானியின் வரவைப் பற்றிய செய்தியும் துரைசாமி அய்யரை ஒரு காரியம் செய்யத் தூண்டின.

ஒரு சமையற்காரப் பையனை கொணர்ந்து அமர்த்தினார் வீட்டில். சாரதாம்பாளுக்கு சிறிது ஆக்ஷேபணை தான். ஆனால் ஆக்ஷேபணையை வலியுறுத்தி கணவனின் ஏற்பாட்டைத் தவிர்க்கவில்லை.

சமையற்காரப் பையன் வந்த பிறகு, ராஜேசுவரிக்கு, "நான் இங்கு இருக்க வேண்டிய அவசியமில்லை" என்று தோன்றலாயிற்று.

ஒரு நாள் மாலை வழக்கம் போல முகங்கழுவி, பொட்டிட்டுக் கொண்டு சேலை மாற்றிக் கொண்டாள். அதே சமயத்தில் ரகுபதியும் முகம் அலம்பி, வேற்றுடை தரித்துக் கொண்டு, உலாவக் கிளம்பிக் கொண்டிருந்தான்.

"அவர் செய்து கொள்ளும் அலங்காரமாவது பயன்படுகிறது, நான் எதற்கு எங்கேயோ புறப்படுகிறவளைப் போல இப்படித் தயாராக வேண்டும்?" என்று கண்களில் நீர் நிரம்பலாயிற்று. அந்த எட்டுமாதச் சுதந்திர வாழ்வு வாழ்ந்த நாட்களிலே இது போல தான் இருவரும் வேற்றுடை மாற்றிக் கொண்டு கிளம்புவார்கள். "உன்னால் தாமதம்" என்று அவன் கடிந்த நாட்கள் பல. 'நான் எத்தனை சில்லறை வேலைகளைப் பார்த்துக் கொண்டு புறப்பட வேண்டியிருக்கு! வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்புகிறது என்றால் சுலபமோ?" என்று அவள் கேட்பாள். ஓரோரு சிறு பணியும் முக்கியமான பணியாகக் கருதி, ஒரு பெருமிதமுடன் நடை போட்ட காலம் அது. ஒரு நாள் வீட்டு வாசல் பூட்சுச் சாவியை எங்கோ நழுவவிட்டுவிட்டான் ரகுபதி.

சிறிது நேரம் வெளி வாசற்படிக்கு அருகாமையிலே தேடிப் பார்த்தாள். தெரு முழுதும் சுற்றிப் பார்க்க தயக்கமாகயிருந்தது.

'கடவுள் என்று இருந்தால் சாவி அகப்படட்டும்," என்று நாஸ்திகவாதிபோல பேசினாள் ராஜேசுவரி.

"சாவி அகப்படாவிட்டால் கடவுள் இல்லை என்று அர்த்தமோ?" என்று ரகுபதி கேட்டுக் கொண்டேயிருக்கும் போதே, அகப்பட்டுவிட்டது சாவி!

"கட்டாயம் கடவுளிருக்கிறார் என்று தெரியும் . . . அதனால் சாவி அகப்படாமல் போகாது; இங்கேயே கிடைத்தாகணும் என்று தான் அப்படிச் சொன்னேன்! என்று வெற்றி முழக்கி ஆஸ்திகவாதியாக ஒளி வீசினாள் அப்போது!

"தேவலையே நீ," என்று சர்வ சாதாரணமாக ரகுபதி சொன்னாலும் அந்தச் சிறு சம்பவத்தில் எத்தனையோ இன்பம் கண்டாள் ராஜேசுவரி.

அந்தக் கலகலப்பும், மகிழ்ச்சியும் மீண்டும் எப்போதாவது வருமா?

இப்படி அவள் ஏங்கிக் கொண்டிருந்தாள். ரகுபதி மட்டும் சிறிதும் சலனமற்றவனாய், பழையன எல்லாம் மறந்தவனாய், தன்னை நாடி வந்த நண்பன் ஒருவனுடன் புறப்பட்டுப் போய்விட்டான், உலாவ.

அடக்கமாட்டாத துயருடன் ஒரு ஓரம் உட்கார்ந்துவிட்டாள் ராஜேசுவரி. மார்பு வெடித்துவிடும் போலிருந்தது. தலையும் கண்களும் ஜிவு ஜிவு என்று உஷ்ணத்தால் குமுறின. மறு கணம் 'அம்மா' 'அம்மா' என்று கதறியழத் தொடங்கிவிட்டாள். அவளுடைய கட்டு மீறி அழுது கொண்டிருந்தாள்.

எதற்காகவோ திரும்பி வந்துகொண்டிருந்தான் ரகுபதி. கிணற்றடியில் இருந்தார் துரைசாமி. தலைவாரிக் கொண்டிருந்தார் சாரதாம்பாள். துரைசாமி விழிப்பதைப் பார்த்து சாரதாம்பாள், 'அவள் தான்; அடிக்கடி இப்படி அழுவதால் நிறைந்த வீட்டுக்கு ஆகுமா? அவளுக்கே தெரிய வேண்டாமா?" என்றார்.

ரகுபதி வாசற்புறத்து நிலைப்படியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். சமையற்காரப் பையன் ஓடோடி வந்து, சமையலறைப்படியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். அந்த இருவருக்குமிடையே இருபதடி இடைவெளி இருந்தது போலவே தான், இருவரின் மனநிலைக்கும் இடைவெளி கொஞ்சம் தான் இருந்தது.

அந்தச் சமையல்காரப் பையன், 'தன்னால் என்ன உதவ முடியும்? தனக்குள்ள உரிமை என்ன?" என்று பரிவுடன் ஒதுங்கியிருந்தது போலவே, ரகுபதியும் அனுதாபமுடன் ஒதுங்கியிருந்துவிட்டான். விருக்கென்று துரைசாமி வந்தார். "என்னம்மா, உனக்கு என்ன வருத்தம், சொல்லிவிடு. எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு, உனக்கு இது போல அழும்படி என்ன செய்துவிட்டோம் என்று!" என விசாரித்தார், எடுத்த எடுப்பிலே.

குலுங்கும் உடம்புடன், எழுந்து நின்ற ராஜேசுவரி, 'ஒன்றுமில்லை' என்று சொல்லப்படாத பாடும் பட்டு விம்மலுடன் சொன்னாள்.

"இப்போ ஒன்றுமில்லை என்று அழுதால் ஏதாவது வந்துவிடும்! இப்படியெல்லாம் வீட்டுப் பெண்கள் அழுவது ரொம்ப விபரீதம்," என்றார் துரைசாமி.

"நான் ஊருக்குப் போய் விடுகிறேன்," என்று கேவலுடன் சொல்லிவிட்டு 'ஓ' வென்றழுதுவிட்டாள் மீண்டும்.

"அவளுடைய தம்பி வரப்போகிறதாக பிரஸ்தாபம் இருந்ததே, அவன் வந்தால் அழைத்துக் கொண்டு போகட்டும். கஷ்டப்பட்டுக் கொண்டு அவள் இங்கே இருக்கணும் என்று நமக்கு மட்டும் ஆசையா?" என்று சாரதாம்பாள் இருந்த இடம் விட்டு எழாமல் சொல்லிவிட்டார்.

சாரதாம்பாளின் யோசனை, அந்தச் சமயத்தில் எல்லோருக்கும் ஏற்றதாகத்தான் இருந்தது. ஆனால் அந்த யோசனை எதிர்பாராத வேகத்துடன் பலனளித்ததுதான் ஆச்சரியம். மறுநாள் காலையே கடிதம் வந்தது மணியிடமிருந்து; அத்திம்பேருக்கு எழுதியிருந்தான். தனக்கு இரண்டு வார விடுமுறை இருப்பதால் சென்னை வருகிறதாக நாளும் குறிப்பிட்டு எழுதிவிட்டான்.

மணிக்கு இளங்காளைப் பருவத்தின் உற்சாகம்; பெற்றோருடனே தொடர்ந்து போகும் சிறுவன் என்ற பருவம் மாறி, தனியனாகவே சினிமாக்களுக்குப் போகும் பெரிய பையனாக மாறி, இப்பொழுது சென்னைப் பட்டணம் போய் கொஞ்ச நாள் தங்கி சுற்றிப் பார்த்து வர வேண்டும் என்ற ஆர்வமுள்ள கட்டிளங்காளை. உறவுமுறையார் உள்ள வெளியூர்களுக்குப் போய் வந்து பழகினால் தானே பிற்பாடு, புதுப்புது ஊர்களுக்குப் போய் புதுப்புது இடங்களிலே பேட்டி என்றும் போட்டி என்றும் போய் சமாளிக்கத் துணிவு ஏற்படும்?

மணி வந்தான். அத்திம்பேருடன் சந்தோஷமாகப் பேசி மகிழ்ந்தான். ரகுபதியும், மீசை அரும்பிய முகத்துடன் வந்திருக்கும் மைத்துனனுடன் சரி நிகர்ச் சமானமாகப் பேசி மகிழ்வித்தான்.

"போகும்போது ராஜத்தைக் கூட்டிக் கொண்டு போகிறாயா, மணி?" என்று ஒரு நாள் ரகுபதி வாசற் திண்ணையில் கேட்டுக் கொண்டிருந்தான். ஜன்னல் வழியே தெரியும் அக்காளின் முகத்தைப் பர்த்தான் மணி, வியப்புடன்.

"அடிக்கடி அழுகிறாள் ஏனோ?" என்று ரகுபதி சொல்லும் போது, கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது ராஜேசுவரிக்கு.

"பாப்பாவைப் பார்க்கணுமென்று ஆசையாய் இருக்கு, மணி," என்று ராஜேசுவரி, ஜன்னல் வழியாகவே பதிலளித்தாள். உடன் பிறந்தவர், பெற்றவர் என்ற பாசமெல்லாம் மறந்து கணவனே வாழ்வு, புக்ககமே புகல் என்று அவள் இருந்தாள். அவளுடைய அற்ப ஆசைகள் கூடப்பட்டுப் போகின்றனவே! ஆகா, பவானியின் குழந்தைகளுக்கு எத்தனை பணிவிடை செய்தான்? பிறந்திருக்கும் தங்கைப் பாப்பாவுக்கு அவள் செய்தது என்ன? இந்தத் துன்ப உலகிற்கு வர உதவினாள், அவ்வளவு தான்!

ஆகா, தங்கைப் பாப்பா அவளையே ஒத்திருக்கிறதாம் சாயலில்! அப்படியானால், தானும் இவ்வளவு அழகாகத்தான் இருந்தாளா? ராஜேசுவரியின் கண்களில் துளிர்த்த நீரில் தங்கைப் பாப்பாவின் உருவம் தெரிந்தது. ஆகா, அழகு தான் குழந்தை. முகம் பார்த்துச் சிரிக்கும் பருவம். இன்னும் சில மாதங்களில், வேற்றாள் தெரிந்து போகும். சுற்றத்தாரைக் கட்டிக்கொண்டு, வேற்று மனிதர்களை, "நீ யார்?" என்று பார்க்கும்! இப்பொழுது முதல் பழகாவிட்டால், அக்காளைக் கூடத்தான், "நீ யார்?" என்று விழிக்கும்.

பிறந்தகம் போய்விட வேண்டும் என்ற எண்ணத்தை உறுதிப்படுத்தத்தான் ஒவ்வொரு நிகழ்ச்சியும், அம்சமும் உதவி செய்தால், பேதைப் பெண் என்னதான் செய்வாள்?

புறப்பட்டுவிட்டாள். மூக்கு நுனி சிவந்திட, கண்கள் பனித்திட, மாமியார் அளித்த சாப்பாடு அடுக்கைப் பெற்றுக் கொண்டாள். "போய் வரேன் அம்மா," என்று விடை பெறும் பொழுது குரல் குழறிப் போயிற்று.

இப்படி அழுது கொண்டு, பிரியாவிடை பெறும் தமக்கையை மணி கூர்ந்து பார்த்து, "இவள் வரணுமென்ற கட்டாயம் என்ன? அப்பா, அம்மா கூட எதிர்பார்க்கவில்லையே!" என்று நினைத்தான்.

தங்கைப் பாப்பா, "என்னால் தான், நான் தான் அழைக்கிறேன்!" என்று பெருமையுடன் மார் தட்டுவது யாருக்குத் தெரியும்? ராஜேசுவரி சொன்ன காரணம் எத்தகைய தீர்க்க தரிசனம் என்பதும் யாரே அறிவர்?

## 37

எதிர்பாராத விதமாக ராஜேசுவரியும் மணியுடன் வருகிறாள் என்று அறிந்த போது விசாலம் ரொம்பவும் கலங்கிப் போனாள்.

மைந்தன் மணியை அதற்கு முன்பு அத்தனை நாள் பிரிந்திருக்கவில்லை விசாலம். அதனால் அவனுடைய வருகைக்காக ஆவலும் கவலையுமாக காத்திருந்தாள் விசாலம். "ராஜமும் என்னுடன் வருகிறாள். எதிர்பாராத மகிழ்ச்சியளிக்கும்" என்று மணி எழுதியிருந்ததைப் படித்த உடனே மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. பிறகு யோசிக்க யோசிக்க, சிந்தனை சிக்கலாகியது. மாப்பிள்ளைக்கு வேலை தான் ஆகிவிட்டதோ? அவளுக்குத்தான் ஏதாவது உடல்நிலை மாறுதலோ? திடுமென வரக் காரணம்?

'பவானியக்காள் பிரசவத்திற்கு வரக்கூடும்' என்று எழுதியிருந்தாள்; அந்த ஏற்பாடு மாறி, சாரதாம்பாளே நாகபுரி போகிறதாக முடிவு செய்யப்பட்டிருக்கலாம், என்று சொன்னாள் விசாலம் கணவரிடம்.

"அதற்காக இவளை அனுப்பிவிடுவார்களா? மாமனார், புருஷன் இரண்டு பேருக்கும் சமைத்துப் போடத் தெரியாதா அவளுக்கு? இல்லை, புருஷனும் மனைவியும் கொட்டமடித்துவிடுவார்களோ என்று பயந்து கொண்டு அவளை அனுப்பிவிடுகிறார்கள் என்று நினைக்கிறாயோ?" என்று ஒரு வேடிக்கையான கோணத்தில் விசாலத்தின் யோசனையை வைத்துக் கேட்டார் நடராஜன்!"

ராஜேசுவரியின் வருகையைப் பற்றிய கவலையினாலும், மணியை இத்தனை நாள் பிரிந்திருந்ததனாலும் அன்பே வடிவமாக வாசலில் நின்று வரவேற்றாள் விசாலம். அந்த அன்பு முகம் ராஜேசுவரியை உருக்கியது. வந்த வழியிலே மனச்சுமையை இறக்கிவிடும், பேச்சுப் பேசிக்கொண்டு வீட்டு வாசற்படிவரை தென்புடன் வந்த ராஜேசுவரி, அன்னையைக் கண்டதும் கண்ணீர் மல்கி நின்றாள்.

"ஏது இப்படி திடீரென்று? மணிக்கு உன்னுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு கூட்டிக்கொண்டு வரத் தெரிந்துவிட்டதே! இனிமேல் உன்னைக் கொண்டு போகவோ கொண்டு வரவோ அவன் தான்! அப்பா நகரமாட்டார்!" என்று சிரித்தாள் விசாலம்.

"மாப்பிள்ளை வரவில்லையா? மதராஸ் எப்படி இருக்கு மணி?" என்று கேட்டார் நடராஜன்.

"பலே ஜோர்," என்று முழக்கியபடியே, மணி பெட்டி படுக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"பலே ஜோர் யாருக்குடாப்பா? நாலும் பார்த்து சந்தோஷப்பட முடிந்தவர்களுக்கு. அத்தனை பெருமைகள் இருந்தும் ஒன்றைக் கூட பார்க்க முடியாமல் போனால் எப்படியிருக்கும்?" என்று வெடித்தது ராஜேசுவரியின் வினா.

"ஏன் நீயும் போய்ப் பார்த்திருக்கலாமே, மணியை சாக்கிட்டாவது!" என்று நடராஜன் கேட்டார்.

இதழ்க் கடையை ஏளனமாகச் சுழித்தாள் ராஜேசுவரி.

"அந்தக் கோபந்தான் போலிருக்கு, திடீர் என்று என்னுடன் வந்துவிட்டாள்," என்று சூஷ்மபுத்தியுடைய மணி சொல்லிவிட்டாள்.

ஏழையின் கோபம் துக்கம். ராஜேசுவரிக்கு அழுகை வந்தது. "எனக்கு ஹிஸ்டீரியாவாம் அம்மா. அங்கே இருந்தால் அவர்களுக்கும் கஷ்டம் என்று வந்துவிட்டேன்". என்று தழதழக்கும் குரலில் கூறி, பொலபொலவென உதிர்ந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு, லேசாக ஒரு விம்மலும் வெளிப்படுத்திவிட்டாள். சூழ்ந்திருந்த குழந்தைகள் பெட்டி கூடைகளைக் குடைவதை நிறுத்திவிட்டு அக்காளைப் பார்த்தன.

"நன்னாருக்கு, ஹிஸ்டீரியா!" என்று ஆச்சரியமுடன் முணுமுணுத்தபடி விசாலம் சமைந்து போனாள்.

"பாப்பா தூங்கிக் கொண்டிருக்கா?" என்று மணி தொட்டிலருகு போனான். ராஜேசுவரியும் அவனுடன் போனாள். துஞ்சும் தங்கச்சியைப் பார்த்து "அட கண்ணு" என்று கொஞ்சினாள். மார்போடு எடுத்து அணைத்துக் கொஞ்சி விளையாடத் துடித்தாள். அக்காளின் ஆவலை அறிந்ததே போல குழந்தை அசைந்தது. உடனே வாரி எடுத்துக் கொண்டாள். மணியும் கைகளை நீட்டினான். மறுத்தாள், பிறகு கொடுத்தாள். குழந்தை தூக்கக் கலக்கத்தில் பிஞ்சுக் கைகளை கண்ணுக்கருகு வைத்துக் கொண்டு அமைதியாக இருந்தது. அதைப்பாடாய்படுத்த அக்காளுக்கும் தம்பிக்கும் போட்டி!

"காத்துக்கொண்டிருக்கிற குழந்தைகளோடு விளையாடுங்கள்!" என்று சிரித்தார் நடராஜன்.

"கூடையிலிருக்கும் பழங்களுக்காக அதுகள் போட்டி. நாங்கள் பாப்பாவை எடுத்துக் கொள்ள போட்டி," என்று சிரித்தாள் ராஜேசுவரி.

ராஜேசுவரி குளிப்பறைக்குப் போயிருந்த சமயம், விசாலம் கணவரிடம் வந்தாள். மெல்லிய குரலில், "ஹிஸ்டீரியா என்றால் என்ன?" என்று கேட்டாள்.

"ஹிஸ்டீரியா என்றாலா? ஹிஸ்டரிக்கல் . . . அதாவது, திடும் திடும் என்று அழுகிறது, உள்ளூர ஏதாவது வருத்தப்பட்டுக் கொண்டு கண்டபடி அர்த்தமில்லாமல் கத்துகிறது . . . இப்படி எத்தனையோ சொல்லலாம்," என்று நடராஜன் சொல்லிவிட்டு, "ஏன், உனக்கு விசாரம் வந்துவிட்டதா?" என்று சிரித்தார்.

"இல்லை. என்னமோ, அந்த வார்த்தை பிடிக்கவில்லை. யாரோ எப்போதோ சொல்லிக் கேட்டிருக்கிறேன். ஹிஸ்டீரியா என்றால் புருஷனைப் பிடிக்கவில்லை என்று அர்த்தம் என்று சொன்னார்கள். . . அது தான்" என்று விசாலம் தன் வேதனையைச் சொன்ன போது நடராஜன் மனைவியிடம் அனுதாபம் கொண்டார்.

"அதான் சொன்னேனே . . . பலவிதமாக அர்த்தம் சொல்லலாம்! ஏனென்றால் ஒரோருத்தருக்கு ஓரோர் வித வருத்தமிருக்கும் . புருஷனைப் பிடிக்காமல் ஹிஸ்ட்ரிக்கலாய் அழலாம் ஒருத்தி. புருஷன் செத்துப் போய்விட்டானே என்று வெறியாய் இருக்கலாம் இன்னொருத்திக்கு. புருஷன் பரஸ்திரீ லோலனாய் இருக்கிறானே என்று வேதனைப்படலாம் மற்றோருத்தி . . " என்று நடராஜன் சொல்லிக் கொண்டே போனபோது, விசாலம் பொறுமை இழந்து, "என்ன, ஒருத்தி ஒருத்தி என்று அடுக்குகிறீர்களே! புருஷர்களுக்கு ஹிஸ்டீரியா வரவே வராதோ?" என்று கேட்டாள்.

"பெண்களுக்குத்தான் விசாரப்பட நன்றாய்த் தெரியும், அவர்களுக்குத்தான் வரும்!" என்று நடராஜன் மடக்கிவிடப்பார்த்தார் மனைவியை.

"நான் என்னமோ கேட்டால் நீங்கள் என்னமோ சொல்லுங்கள். நான் விசாரப்பட்டு எனக்கு என்ன வந்துவிட்டது! முன்னெச்சரிக்கையாய் இருக்கிறேன், இது தப்போ" என்று கேட்டுவிட்டாள் விசாலம்.

"நீதான் உன் கவலைகைளைச் சொல்லிவிடுகிறாயே உடனுக்குடனே! என்ன வரும் உனக்கு? சரி, கவலைப்படாதே, சொல்லுகிறேன். உள்ளூர வருத்தத்தினால் புகைந்து கொண்டு சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் திண்டாடினால், புருஷனுக்கும் ஹிஸ்டீரியா வரும்! சாதாரணமாக பெண்கள் அழுதோ, சண்டை பிடித்தோ மனசில் இருப்பதைக் கொட்டிவிடுவார்கள். புருஷர்கள் மனசுக்குள்ளேயே வைத்து மருகுவார்கள். அதனால் புருஷர்களுக்குத்தான் ஹிஸ்டீரியா வரும்; நம்ம பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் அப்படியெல்லாம் ஒன்றும் வராது. வேலை இல்லையே என்று கவலைப்படுகிற பேர் வழியல்ல நம்ம மாப்பிள்ளை. நானும் தான் பார்த்தேனே, 'எனக்கு என்ன குறை' என்று தான் சொன்னார், அப்படியே இருக்கவும் இருக்கிறார். ராஜாபாய்க்கும் ஏதோ கொஞ்சம் வருத்தம். மணி சொல்கிறானே, இந்த வீட்டில் மூன்றில் ஒரு பங்கு இல்லையாம் அங்கே இடம். நடமாடக்கூட இடம் கீக்கடமாடியிருந்தால் எப்படியிருக்காது அவளுக்கு? ஒரு இடத்தில் உட்கார்ந்து புத்தகம் வாசிக்கவோ, பிறத்தியார் பார்வையில் படாமல் பத்து நிமிஷம் ஒதுங்கியிருக்கவோ வசதியில்லாவிட்டால் எப்படி இருக்கும்? வெள்ளைக்காரன் விருந்தாளிக்கு என்று ஒரு தனி அறை வைத்துவிடுகிறானே, அதைப்போல புத்திசாலித்தனம் வேறு உண்டா? நம்மகத்திற்கு ஒருவர் வருகிறார். அவர் எதிரில் நமக்கு சில விஷயங்களைப் பேச முடியாது. விருந்தாளியை ஒரு தடையாக நினைக்கும்படியாகிவிடும். விருந்தாளிக்கும் சிரம பரிகாரம் செய்து கொள்ள வேண்டியிருக்கும். எல்லோராலும் சதா பேச என்ன சமாசாரம் இருக்கும்? படுத்தால் போதும் என்று இருக்கும். அவனுக்கு என்று இடம் ஒதுக்கப்பட்டால், அவனும் சலுகையோடு ஒதுங்கிக் கொள்வான். மற்றவர்களுக்கும் தாங்கள் தங்கள் வேலையைக் குந்தகமில்லாமல் கவனிக்க முடியும். நான் யார், யாராவது வந்தால் தனி இடம் கொடுத்துவிட்டு கொஞ்சம் பேசிவிட்டுப் போய்விடுவேன்! என்னை யார் குறை சொல்லிவிட்டார்கள்? ராஜேசுவரிக்கு அந்த வீடு தான் ஏக்கத்தை உண்டாக்கியிருக்கும். ஆமாம். அப்போதே சொன்னாளே நினைவிருக்கா? பிடில் தான் பிடில்! வீடு ஒரு குடில் என்றாளே! எதுகை மோனை போட்டுப் பேசணுமென்றா பேசினாள். அந்த ஆத்திரம் அப்படிக் கவிதையார் வந்துவிட்டது. இப்போது தான் எனக்கும் விளங்குகிறது அது" என்று நடராஜன் பேசித் தீர்த்தார். அவர் பேராசிரியர் ஆயிற்றே!

விசாலம், குழந்தைக்குப் பால் பருகவிட்டபடி கேட்டுக் கொண்டிருந்தாள். "புருஷனைப் பிடிக்கவில்லை என்று மட்டும் ஏற்பட்டுவிடக் கூடாது!" என்று தான் அவள் கவலைப்பட்டாள். அப்படி ஏற்படாது என்று நன்றாக நம்பினாள். அவளுடைய கவலையைப் போக்கும் வகையில் தான் ராஜேசுவரியும் பேசினாள். "அப்பாடி, இங்கே என்ன இருந்தாலும் எனக்கு ஒரு தனி சுதந்திரம் தான். எங்கேயாவது உட்காரலாம், படுத்துப் புரளலாம் என்று விழுந்து கொள்கிறேன். அங்கேயா . . . அப்பப்பா, சாண் இடம் . . . போதும், போதும், நரகம் தான்." என்றாள் ஒரு தடவை.

"வாடா கண்ணா, உன்னை ஒரு சுற்று சுற்றுகிறேன் தட்டாமாலை," என்று அழைத்து, உடல் மயங்கும் வரை அவனையும் சுற்றி தானும், சுற்றி தடாரென்று தம்பியோடு புரண்டு விழுந்தாள்.

அடுத்தகத்து சீதம்மாள் ராஜேசுவரியைப் பார்க்க வந்தபோது, விசாலம் சற்று தடுமாறித்தான் போனாள். "நானே எதிர்பார்க்கவில்லையே! என்னமோ அவர்களும் இவளுடைய ஆசையை மதிச்சு அனுப்பினார்கள், வந்திருக்கிறார்," என்று சொன்னாள் விசாலம். "அவளுடைய நாத்தனார் வந்தாச்சாமா?" என்று கேட்டாள் சீதம்மாள்.

"சமையல்காரப் பையன் இருக்கிறானாமே, இவள் என்ன செய்யக் கிடக்கு? மணியும் போனான், இவளுக்கும் சின்னக் குழந்தையிடம் கொள்ளை ஆசை. அங்கே ஒரு வேலையுமில்லாமல் வெறுமனே இருக்கக் கஷ்டமாயிருந்த்தாம்! சரி, இங்கே வந்தாலாவது உபகாரமாய் இருப்போமே என்று அடிக்கடி நினைப்பாளாம். மணியும் வரவே கூட வந்திருக்கிறாள்," என்று விசாலம் தனக்குத் தெரிந்த காரணங்களையெல்லாம் கதம்பமாக்கி சொல்லி வைத்தாள். மிகைப்படக் கூறிவிடவில்லை.

ஆனால் சீதம்மாளின் சூட்சுமப் புத்தியே அலாதி. "ராஜேசுவரிக்கே விசித்திரமான மனசு தான் மாமி, அவருக்கும் வேலையில்லாமல் இருக்கும் சமயத்தில் தானும் புக்ககத்தில் பயமாக இருப்பானேன் என்று யோசித்திருப்பாள். என்ன தான் இருக்கட்டும், யார் தான் தாங்கட்டும், கை நிறைய சம்பாதித்து விட்டு வெறுமனே இருப்பது என்றா_ புருஷர்களுக்குக் கஷ்டம். ஓடியாடி வேலை செய்து ஆசையாகச் சமைத்துப் போட்டு குடித்தனம் நடத்தின பெண்ணுக்கு, பிறத்தியார் சமைத்துப் போடுவதைச் சாப்பிட்டுக் கொண்டு இருப்பதும் பெரிய கஷ்டம். புருஷர்களுடைய வேலை வேறு; பெண்களின் வேலை வேறு. ஆனால் இரண்டுமே வேலை தானே! வேலை செய்யாமல் சாப்பிடுவது உடம்பில் ஒட்டாது, அதுவும் ராஜேசுவரிக்கு இருக்கிற யோசனையும் ஊக்கமும் உண்டே! ஏதோ யோசனையோடு தான் அவள் திடீரென்று வந்துவிட்டாள். "உம் ஆகட்டும் ஒரு நல்ல வேலை உன் புருஷனுக்கு கிடைத்துவிடும் உடனே!" என்று சீதம்மாள் ராஜேசுவரிக்கு அன்புடன், வாழ்த்துக் கூறி, அனுதாபமுடன் பாராட்டு வழங்கினாள். ராஜேசுவரி ஒரு சிறு முறுவல் பூத்தாள். வழக்கம் போல கலகலப்பாகப் பேசாவிட்டாலும், அவளுடைய கண்கள், சீதம்மாவைப் பார்த்து, 'உங்களுக்கு என் நன்றி, மாமி. உங்களுடைய அன்புக்கு என் வந்தனம்!' என்று நன்றியுரை பொழிந்தன.

இப்பொழுதெல்லாம் ராஜேசுவரிக்கு இசையார்வம் சுடர்விட்டு ஒளிரவில்லை. நடுநிலைமை வகிக்கத் தவறி, ஆதரவு மறுத்த கணவனால் ஏற்பட்ட விடுதலை வேட்கைதான் அதிகம் இருந்தது. "அவர் இருக்கும் முறை எனது சகலமான ஆசைகளையும் கசக்கிவிட்டது," என்று பொருமினாள்.

கணவனுக்கு வேலை இல்லை என்ற மனச்சுமை இருக்கிறது ராஜேசுவரிக்கு, என்று சீதம்மாளும், இன்னும் ஓரிரு நண்பர்களும் ஊகித்து அனுதாபம் தாட்டி, 'அதனால் உனக்கு என்ன குறைச்சல்?" என்று தேற்றினார்கள். "எனக்கு அப்படிப்பட்ட குறையில்லை," என்று மறுக்கவோ, வேறு காரணங்கள் விளக்கவோ ராஜேசுவரி முயற்சிக்கவில்லை. "இருக்கட்டுமே, கணவருக்கு வேலை கிடைத்து எங்கேயாவது போனோம் என்றால் மீண்டும் சுதந்திர வாழ்வு தானே எமக்கு! என்மேல் அன்பு செலுத்த அவரும் தயங்கிக் கூச மாட்டார் அல்லவா? என் மனக்குறையின் மூலத்தைப் பிறர் கூறுவதில் தவறு இல்லையே," என்று அவளுடைய உள் மனம் கருதியது.

போகிப் பண்டிகையும் பொங்கற் திருநாளும், இந்துக்கள் அனைவரும் கொண்டாடும் நன்னாள். தெலுங்கர்களுக்கு பண்டிகைகளுள் சிறந்தது இந்த மகர சங்கராந்தி தான். அப்போது பெண்டுகள் வீடுவீடாகப் போய் மஞ்சட் குங்குமம் வழங்கி வருவார்கள்.

ராஜேசுவரி பிறந்தகம் வந்த மறுவாரமே பண்டிகை வந்துவிட்டது. வந்த பேரெல்லாம் ராஜேசுவரியைப் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் புலப்படுத்தினர். 'பண்டிகைக்கு வந்தாயா?' என்று கேட்டனர் அனைவரும். எல்லோருக்கும் ராஜேசுவரி, "இல்லை, வெறுமனே தான் வந்தேன். தீபாவளிக்குத் தானே எங்களில் மாப்பிள்ளையும் பெண்ணும் வருவது வழக்கம்?" என்று சொன்னாள். 'ஆம், பண்டிகை என்று தான் வந்தேன், என்று நினைப்பவளாகவோ, அவ்வாறு பிறர் நினைப்பதை மறுக்காதவளாகவோ இருக்கவில்லை ராஜேசுவரி உண்மை பேசினாள்."நாங்கள் தமிழர்கள், எங்கள் பழக்கவழக்கம் வேறு" என்று பொருள்படக்கூடிய பேச்சுத்தான் அது என்று அவளுக்கே தெரிந்தது. ஆனால் அவளுடைய உணர்ச்சி உண்மையைத்தான் விளம்பியது.

சிலருடைய கேள்விக்கு விடையை விளக்கியும் சொன்னாள். கணவனுக்கு வேலை இல்லை என்று சொன்னபோது சிலர் அதிசயப்பட்டனர். பட்டணத்தில் 'புக்ககம் இருக்கிறது என்று தெரிவித்தாள்.

"மாமனாருக்குத்தான் பெரிய வேலையாகியிருக்கே பட்டணத்திலே," என்று ராஜேசுவரி சொன்னபோது ஒரு அம்மாள், சிறிது கூட தாமதிக்காமல், "அப்போது அவரே பிள்ளைக்கு வேலை போட்டுத் தந்துவிடுவார்," என்று சிரித்தாள்.

"பிள்ளை என்ற பாசத்தில் நாணயம் தவறி வழுக்கி விழலாமா?" என்று ஒரு நாள் மாமனார் சொன்னார் மாமியாரிடம். அதன் அர்த்தம் ராஜேசுவரிக்கு நன்கு விளங்கியது இப்போது. அதனால், "என் மாமனார் அப்படியெல்லாம் செய்யமாட்டார் நியாயமல்லாமல்," என்று பெருமையாக பதில் அளித்தாள் ராஜேசுவரி.

பிறகு அந்தச் சம்பாஷணையைச் சொன்னாள் ராஜேசுவரி, நடராஜனிடம். நடராஜன் என்ன சொன்னார்.?

"தந்தை பெரிய வேலை பார்க்கிறார்; அதனால் பிள்ளைக்கு வேலை கிடைத்து விட்டது, என்று இருக்கட்டும். அதில் வெட்கக்கேடு ஒன்றுமில்லை. தந்தையின் திறமையும் பெருமையும் பிள்ளைக்கும் இருப்பது சகஜம். ஒரு பெரிய ராஜதந்திரியின் மகன். அல்லது மருமகன், பெரிய வேலையில் இருக்கிறான் என்றால் அது சிபாரிசு, உறவு முறையால் வந்த வேலை என்று சொல்லுவது சரியல்ல. நேருஜியின் குடும்பத்தில் ஒவ்வொருவரும் உயர்பதவி வகிக்கிறார்கள். அது அந்த குலத்தின் பெருமை. அந்த குடும்பத்தின் விசாலமான சூழ்நிலையில் ஒவ்வொருவரும் அப்படிப் பண்பும் பெருமையுமாக விளங்குகிறார்கள் அதனால் இந்தப் பதவிக்குத் தகுதி என்று தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். உறவு, பழக்கம், குலப் பண்பு எல்லாம் சேர்ந்து அவர்களையும் உயர்வாக வைக்கிறது. அதைப் போய் சிபாரிசு, முதுகு சொரிதல் என்று தூற்றக் கூடாது கணவனுக்கு உத்தியோகம் கிடைப்பதிலே தாமதம் ஏற்படாது என்ற ஒரு நம்பிக்கை பிறந்தது. மனதில் சாந்தி ஏற்பட்டது.

## 38

"அம்மா, நாங்கள் வாங்கிக் கொண்டு போனோமே, பர்லாகிமிடிக் கூடை அதை அம்மாவுக்காக வாங்கணும் என்று ஆசைப்பட்டது நானாயிருந்தாலும், பணம் அவர் கொடுத்தால் அவருடைய அன்பளிப்பு என்று அர்த்தமாம்," என்று ராஜேசுவரி தன் அன்னையிடம் உற்சாகமாகச் சொல்லிச் சிரித்தாள்.

விசாலம் ரொம்ப ரொம்ப லேசாகச் சிரித்து," உன் மாமனாரின் பணம் தானே மாப்பிள்ளை புழங்குகிறார்? அதனால் மாமனார் வாங்கிக் கொடுத்த கூடையாகவேதான் இருக்கட்டுமே!" என்று பதிலளித்த அன்னையை ஒரே வினாடி வியப்புடன் பார்த்தாள் ராஜம். பிறகு மீண்டும் குரலெழுப்பிச் சிரித்து,"பணத்திற்கு இத்தனை மதிப்புடாப்பா!" என்று சொல்லி முடித்தாள்!

"முன்னெல்லாம், மெட்ராஸிலிருந்து ஊருக்குப் போனால், இவர் புடவை துணிகளும் பிஸ்கட்டும் சாக்கலேட்டுமே நிறைய வாங்கிக் கொண்டுபோவாராம்! இப்போது எனக்கு அதுபோல வாங்கி கொடுக்கக் கூடாதோ?" என்று ராஜேசுவரி, வேடிக்கையாகச் சொல்லுவதுபோல வெளியிட்டாள் தன் ஆசையை.

விசாலம் ஒரே ஒருகணம்தான் யோசித்தாள்; மறுவினாடி,"அப்போது அவருக்குப் பிள்ளை என்ற ஸ்தானம் மட்டும்தான் . . . அப்பாவின் பணத்தைப் புழங்கக் கூசியிருக்காது! மெள்ள மெள்ள அந்த ஸ்தானம், புருஷன் என்ற ஸ்தானமாக மாறி, உன் புருஷன் என்ற ஸ்தானத்தில் அவர் மனது அதிகம் வேலை செய்கிறது இப்போது. தானே சம்பாதித்தால்தான் மனைவிக்குக் கொடுக்கத் தனக்கு பாத்தியதை என்றும், அப்பாவின் பணத்தில் உரிமை குறைவு என்றும் நினைக்கிறார்." என்று விசாலம் சொன்னபோது, ராஜேசுவரிக்கு அது மிகப் பொருத்தமாகத் தான் தோன்றிற்று. ஏனோ அந்த விளக்கம் ஆறுதலாகக்கூட இருந்தது.

ராஜேசுவரியின் மன அமைதியைச் சிதைக்கவே விதி நினைத்ததுபோலும். மார்பிலும் தோளிலும் சார்த்திக்கொண்டு எந்த இளம் முகத்தின் இனிமைக் கண்டு அவள் கவலை சற்று மறந்திருந்தாளோ, அந்தக் தங்கச்சி மதலையின் துணையும் மறைந்தது . . . குழந்தை இறந்துவிட்டது.

அன்பிற் சிறந்தவர் மறைவுங்கால், அந்தப் பிரிவைத் தாங்க இயலாமல், அந்த ஆத்மாவைத் தொடர்ந்துபோக விரும்புவதுதான் எஞ்சியிருப்பவரின் புலம்பலாக இருக்கும். ராஜேசுவரியும் அப்படித்தான் அழுதாள். அதற்கு மேலும் ஒருபடி ஏறியும் விட்டாள். "நான் உலகத்தில் படவேண்டிய சகலமெல்லாம் பட்டாயிற்று. இனி துவங்குவது துன்பம்தான். இந்தப் பச்சிளங்குழந்தை இந்த உலகத்திலே ஒரு சுகமும் சுவைக்காமல் போயிற்றே . . . என்னைக் கொண்டுபோயிருக்கலாகாதா கடவுளே?" என அரற்றினாள்.

அங்கிருந்த சீதம்மாளின் கண்களும் நீரைப் பெருக்கின. மதலையின் உடலைத் தடவித் தடவியழும் ராஜேசுவரியின் துயரம், விசாலத்தின் துயருக்குக் கொஞ்சமும் குறைந்திருக்கவில்லை. கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு சீதம்மாள் அவர்களைத் தேற்றினாள். ராஜேசுவரி புலம்பிய விதம் கேட்டு, புத்திமதியும் சொன்னாள். "அப்படிப் பேசாதே! வயது வளர்ந்து இறக்கும் குழந்தைகளின் பிரிவைத்தான் பெற்றோர் தாங்கமுடியாது . . . நீ போய்விட்டால் பெற்றோர் மனம் இடிந்தே போய்விடுவார்கள். மற்ற குழந்தைகளின் வாழ்வும் பாதிக்கப்படும். இந்தக் குழந்தையின் பிரிவும் மறைவும் உண்டாக்கும் துன்பம் வேறு தினுசு. பெற்றோர் இருந்து தாங்கும்போதே நமக்கு உயிர்ப்பாரம் என்றால், பெற்றோர் மனமொடுங்கி உடல் தளர்ந்துவிடும்போது மற்ற குழந்தைகள் எப்படி ஆதரவு பெறும்? நீ உயிர் வெறுத்துக் கொண்டால், வீட்டிலுள்ள மற்றவர்களையும் துன்பம் சேரும், நமக்காகத்தான் என்றாலும் சாவை வலுவில் அழைக்கக்கூடாது. யமன் சும்மா போகமாட்டான்." என்று சீதம்மா சொன்னது கேட்டு ராஜேசுவரியின் துன்பம் திசை திரும்பியது.

"சாவே, வா! என் பொருட்டு நான் அழைத்திருக்கிறேன்! பல தடவை உயிர்மேல் வெறுப்புடன் பல சிந்தித்திருக்கிறேன்! என் அழைப்புக்கு செவி சாய்த்து வந்தானோ காலன்? என் தங்கை தானோ என் துன்பத்திற்குப் பலி?" என்று யோசித்தாள். யோசிக்குங்கால் அவளுடைய தவறுதான் என்று உறுதி தோன்றி வந்தது!" நிறைந்த வீட்டில் கண்ணீர் வடித்தேனே, அதனால்தானோ?" என்று ஏங்கினாள். சில சமயம் சிந்தனை மாறுபட்டது. "இங்கு என் சோகம் குறைந்திருந்தது. எனக்கோ துன்பப்படும் வேளை இது. அதனால்தானோ என் துன்பம் குறையக்கூடாது என்று தானோ இப்படி ஒரு துயரம் உண்டாக்கினார் கடவுள்? இங்கே வந்தேனே . . . அங்கேயே இருந்திருந்தால் இந்த என் சோகம் அங்கே சுதந்திர ஏக்கமாகவே இருந்திருக்கும்; தங்கச்சியும் பிழைத்திருப்பாள் இங்கே!" என்று ராஜம் பேதை மனம் அங்கலாய்த்தது.

முரண்பட்ட இத்தகைய ஏக்கங்களும் சிந்தனைகளும் ராஜேசுவரியை மனநோயில் வீழ்த்திவிட்டன. "உங்களைப் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது என் துன்பம்" என்று கணவனுக்கு எழுதினாள். "பெண்ணாய்ப் பிறந்து சீமந்தப்புதல்வியாய்ச் சிறப்புடன் வளர்ந்து பல உயர்வுகளைப் பெற்றுப் பெருமையுடன் இருந்த நான் என்ன சுகப்படுகிறேன்? இளமையின் துடிப்பு அடங்கமுன்பேயே வாழ்வு கசக்கிறதே! என் தங்கையாவது தெய்வமாக மாறிப்போனாள் சுகமாக." என்று மனக் கசப்பைப் பிழிந்து கடிதத்தில் கொட்டியிருந்தாள். சில சமயம் அப்படி நினைக்கவும் நினைத்தாள். தங்கையின் பிரிவை இப்படியாவது மறக்க முயன்றாள் பேதை.

இன்பம் தாற்காலிகமானது. துன்பமும் நீடிப்பதில்லை. ராஜேசுவரிக்கு ஏற்பட்ட அதிர்ச்சிபோலவே, நாட்டுக்கும் ஒரு பேரதிர்ச்சி ஏற்பட்டது.

நாட்டின் பிதா காந்திமகான் பூதவுடலை நீத்து இறைவனடி சேர்ந்துவிட்டார்.

காந்திஜி அமரரானார் தெய்வம் ஆகினார். உண்மைதான். ஆனால் அது ஆறுதல் ஆகுமா பாரதத்திற்கு?

ஒவ்வொரு இந்திய இதயமும் சோகத்தில் மூழ்கிக் குளித்து எழுந்தது.

ராஜேசுவரிக்கு, தங்கச்சியின் பிரிவு துச்சமாகப்பட்டது.

எப்பேர்ப்பட்ட ஆத்மா! தியாகசீலர்! நாட்டின் தலைவர்!.சுதந்திர பாரதத்தின் உயிர்நாடி! அவரே போய்விட்டார்! இனி இந்த மானிட உயிர்தான் போகட்டுமே இந்த நஷ்டத்திற்கும் துன்பத்திற்கும் ஈடாகுமா?" என்று கேட்டது அவளுடைய காந்தி பக்தி.

ரகுபதி கூட, "என்னைப் போன்ற ஒரு வேலையற்ற ஜீவன் வெட்டிக்கு இருக்கிறது! நாட்டின் ஜீவன் அவர் போய்விட்டார். இந்த கீகடமான அரசியல் சூழ்நிலையில் அவர்தான் நாட்டின் பாதுகாப்பாளர்!" என்று எழுதினான். காந்திஜியிடம் நிறைந்த பக்தியுள்ளவன் கணவன் என்று அப்போதுதான் ராஜேசுவரிக்கு ஐயமற விளங்கியது. குற்றங்குறைகளைக் கண்டாலுங்கூட அவற்றை மறந்து பரஸ்பரம் அன்பை வளர்த்துக்கொள்வதுதான் காதல் உறவின் உயர்வு ஆயிற்றே... ராஜேசுவரியும் கணவனுக்காக மனம் மறுகினாள், ரகுபதியும் உள்ளம் உருகினான்.

"உங்களைப் பார்க்கவேண்டும் என்று வலியுறுத்துகிறது என் துன்பம்" என்று அவள் எழுதிய கடிதத்தை ரகுபதி திருப்பித் திருப்பிப் படித்தான். "உந்துகிறது" என்ற சொல்லை எழுதிவிட்டு, அதை உடனே அடித்துவிட்டு "வலியுறுத்துகிறது" என்று அவள் மாற்றியிருந்ததைக் கூர்ந்து பார்த்தான். ராஜேசுவரியின் மனநிலை தெரிந்துபோயிற்று. அவளுக்கு ஆவல் உந்துகிறது... ஆனால் உடல் நகர மறுக்கிறது என்பதைக் கண்டுகொண்டான்.

ரகுபதி சினந்தானா? இல்லை. இப்பொழுது ரகுபதி பக்குவம் அடைந்த வேதாந்தி. ராஜேசுவரி எங்கே சந்தோஷமாயிருக்க முடியுமோ, அங்கேயே இருக்கட்டும் என்பதே அவன் கருத்து. இப்பொழுது ராஜேசுவரிக்கு அங்கேயும் துயர் சார்ந்தது என்பதைக் கேட்டு வேதனையே அடைந்தான். தன்னுடைய பிரிவினாலும் ஆசைக்குகந்த ஒரு ஆத்மாவின் மறைவினாலும் ராஜேசுவரி துன்புறுகிறாள் என்று உணர்ந்தான். அவளுடைய துன்பம் நீக்க விழைந்தான் ரகுபதி.

இம்முறை ரகுபதி ராஜேசுவரியை நாடி வேட்டகம் வந்தபோது அனுதாபம் நிறைந்த மனத்தினனாக வந்தான்." அவள் தெய்வாம்சமோ?" என்ற பிரமிப்பு போய்விட்டது. 'அவளும் மானிடப் பெண்தானே... பாவம் எத்தனையோ ஆசைகளும் அன்பும் குமிழியிடுமே அவள் உள்ளத்திலே' என்று நினைக்கத் தொடங்கியிருந்தான் ராஜேசுவரி பவானியிடம் பட்டபாடுகளையும், அவள் அவற்றை மன்னித்து மறந்து சமாளித்ததையும் பார்த்த அந்த நாட்களிலே, ராஜேசுவரி தெய்வப் பிறவி என்றே முடிவுகட்டியிருந்தான். பிறகு, ராஜேசுவரி வெளியிட்ட மனத்தாங்கல்களைக் கண்டும், "ராஜேசுவரியும் ஒரு மானிடப் பெண்" என்று தெளிந்தான். அவனுக்கு இந்த முடிவு வருத்தமளிக்கவில்லை. அவளுடைய மானிடச் சிறப்பியல்புகளால் அவன் பெருமையே கொண்டான். ராஜேசுவரியின் சிரிப்பும் பேச்சும், கோபமும் தாபமும், பிணக்கும் சுணக்கமும் அவனை அதிகமாக ஆட்கொண்டு அவன் மனசை நிறைந்திருந்தன.

"நாங்கள் காதல் அன்பினால் இணைந்த ஜோடி! நேர்த்தியான ஜோடி! மாறிட வாழ்வின் துன்பத்தையும் பகிர்ந்து அனுபவிக்கும் தம்பதி!" என்ற ஒரு தென்பு இருந்தது. வந்தான் வேட்டகம். தாபம் தணிக்க வந்த கணவனை ராஜேசுவரி குதூகலத்துடன் வரவேற்றாள். வளைய வளைய வந்து உரையாடினாள். கடகடவெனச் சிரித்து முழக்கினாள். முன்பு அவள் இத்தனை சிரித்தது கிடையாது, இந்த மாதிரியும் சிரித்தது இல்லை. இப்போது இவளுடைய சிரிப்பின் அழகே போய்விட்டது. தங்கச்சி இறந்துவிட்டதை பற்றி கண்ணீருடன் விவரித்தாள். ஆனால் உடனேயே, "பெண் ஜன்மம் என்ன ஜன்மம்? போனாள் சுகமாக!" என்று உதறிப் பேசினாள். அவளுடைய மனப்போர் இப்படியெல்லாம் சிக்கலான உணர்ச்சிகளைக் காட்டிக்கொண்டிருந்தது!

"ஆண் ஜன்மம் மட்டும் என்ன? உத்தியோகம் இல்லை என்றால் கட்டின பெண்டாட்டி கூட மதிக்கமாட்டாள்." என்று ரகுபதி சொன்னபோது, ராஜேசுவரிக்கு பேச நா எழவே இல்லை!

'நான் வருத்தப்படுவதெல்லாம்எதற்கு என்பதை உணர்த்தவேண்டும்! இவருடைய உத்தியோகமின்மை வருத்தமில்லை எனக்கு என அவரை உணர்த்தவேணும்.' என்று உறுதி பூண்டாள் ராஜேசுவரி.

"உன் மனக்குறை என்ன? நீ வருந்த அவசியமேன்? கணவனுக்கு வேலையில்லை என்பதனால் நீ கலங்குவானேன்? அவர் யாரைக் காப்பாற்றவேண்டும்? அவருக்கு வேலையில்லை என்பதனால் யாருக்குச் சுமை? சூழ இருப்பவர்கள் அவரைப் பழிக்கும்படியாக அவர் யாரைத் திண்டாட வைத்துவிட்டார்? நீயும் திண்டாட வேண்டியதில்லை; பெற்றோர் இருக்கிறார்கள், மாமனார், மாமியார் இருக்கிறார்கள்' குஞ்சு குழந்தைகளோடிருப்பவர்கள்தான், பிறருக்குப் பாரமாகிவிட்டோமே என்று வருந்துவார்கள், அது நியாயம் கூட! நீ வருந்துவது வீண்," என்று யாரோ ஒரு அம்மாள், ராஜேசுவரியிடம் அன்பு மிகுந்தவளாய்ப் பேசினா_ள்.

ராஜேசுவரி சிரித்து மழுப்பினாள். 'நீங்கள் சொல்வதெல்லாம் சரி. ஆனால் நான் வருத்தப்படாமலிருக்க முடியாது. என் துன்பம் வேறு' என்ற முகபாவம் இருந்தது. அதையும் அந்த அம்மாள் ஊகித்துவிட்டார் போலும்!

"இனிமேலேவது வருத்தம் மறந்து இரு. புருஷனின் கஷ்ட சுகங்களைப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் அதற்காக, அவருக்கு வேலையில்லை என்று அவர் வருத்தப்படுவதைப் போக்க நீ வருத்தப்படக்கூடாது! நீ உற்சாகமாயிருந்தால்தான் அவருக்கு உதவியாயிருக்கும். நாம் எல்லோரும் அன்பைத்தான் ஏற்கணும்... பணமும் பொருளும் நமக்கு முக்கியமில்லை. அன்புதான் நமக்கு வேண்டியது; இல்லையா?"

ராஜேசுவரி சற்று ரோசமுடன், "அவருக்கு வேலையில்லை என்று நான் கவலைப்படவில்லையே!" என்று நினைத்தாள்; சொல்லத்தான் தயக்கமாயிருந்தது.

இதற்குள் அந்த அம்மாள், "அப்புறம் நமக்கும், கடை வீதியில் காத்திருக்கிறவளுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டார்.

பணம் கொடாதவனை விரட்டி, பணம் கொணருகிறவனை வரவேற்கும் வேசிப் பெண்போல, கணவனின் உத்தியோகமின்மையை குலமகள் அருவருக்கலாமா?

இது தான் அந்த அம்மாளின் வினா!

கணவனின் நிலைதான் தன்னைப் பாதிக்கிறது என்று பிறர் நம்புவதைத் தகர்த்தெறிய வகையறியாமல், அவர்கள் நினைப்பதும் உண்மைதானே என்ற கருத்துடன் இருந்தாள் ராஜேசுவரி. இந்த நாள் வரை பிறர் அவ்வாறு நினைப்பதில் சிறுமை காணவில்லை அவள். புருஷனுக்கு வந்த தலையிறக்கம் மனைவிக்கும் தலைக் குனிவு கொணர்ந்தது என்று பிறர் நினைப்பதில் தன் மனைவி ஸ்தானம் உயர்வதாகவே ராஜம் எண்ணினாள். ஆனால் இந்த அம்மாள் போட்டபோடு!

"ஐயோ, என் அந்தரங்கமான ஏக்கம் பொருள் ஈட்டாத கணவர் என்ற துயர் அல்லவே?" என்று கதறவேணும்போல ராஜத்திற்கு ஆவேசம் வந்தது.

உத்தியோகம் இல்லை என்று கணவன் கவலைப்படவில்லை . . . ஆனால் அவன் ஏன் கொண்டாடிய உரிமைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டான்?

"அவருக்கு வேலை இல்லையே." என்ற தலையிறக்கமோ வெறுப்போ இல்லை. கணவன் காட்டும் ஒதுக்கமும், அவனுடைய ஆதரவின்மையும் தான் துன்பு செய்கின்றன. அன்பைத் தான் அவள் கேட்கிறாள்... அது யாருக்கும் தெரியவில்லையே!

ஊரார் உணராவிட்டாலும் போகிறது... அன்பிற்குரியவர் உணர்ந்தால் போதுமே. கணவன் அறியத்தான் வேண்டும்" மனைவிக்குத் தேவையானது பொருளும் பதவியுமல்ல" என்று!

வாழ்வு தான் தேவை என்று உணர்த்தவேண்டும்! அந்த வாழ்வு எத்தகையது? என்னவென்று சொல்வாள்? சுருக்கமாகச் சொல்லக் கஷ்டமாயிருந்தது. விளக்கிச் சொல்ல வேதனையாயிருந்தது. அன்பின் சந்நிதானத்திலே மனக்கசப்புகளை அடுக்கி வைத்துப் பேசுவது எளிதாயில்லை.

பலவிதமான உணர்ச்சிச் சிக்கல்களை பற்பல சமயங்களிலே அறுத்து நுனி காட்டிவிட்டால், சிக்கல்களை ஆண்மகனே விடுவித்துக் கொள்வான் என்று நம்பினாள். கணவனிடம் அவள் அந்த உதவியை ஐயமின்றி எதிர்பார்த்தாள். அவளுடைய முயற்சியில் அவன் ஒத்துழைப்பான் என்று முடிவு கட்டினாள்.

உணர்ச்சிச் சிக்கல்களை நுனி வெட்டிக் கோடி காட்டும் பணி துவங்கிவிட்டாள்! எப்படி? சர்மா வாத்தியார் வந்தார். எத்தனையோ தடவைகள் வந்ததுபோல்தான் வந்தார். ராஜேசுவரி இப்போது பேச்சில் மீண்டும் சுருதிபேதம் செய்தார். "பாட்டுத் தெரியுமா என்று கலியாணத்திற்கு முன் கேட்பது வீண், ஸார்! என் தம்பி மணிக்குப் பெண் பார்த்தால் பாட்டுத் தெரியுமா எனக் கேட்கக் கூடாது என்பேன் நான்." என்று சொன்னாள் ராஜேசுவரி. "அப்புறம் என்ன சிரத்தை காட்டுகிறார்கள் புக்கத்தார்?" என்று நேரிடையாகக் கேட்கவெருவி மறைமுகமாக வெளியிட்டாள். ரகுபதி புரிந்துகொண்டதாகவே தெரியவில்லை! ராஜேசுவரி துடித்துக் கொண்டிருந்தாள். நடராஜன் மட்டும், "மணி, மாப்பிள்ளைப்போல் ரசிகனானால் அவன் கேட்பான்." என்று சிரித்தார்.

ராஜேசுவரி வெகுண்டாள். "ரசிகர்தான் ரசிகர்! புழைக்கடைப் பச்சிலை புண்ணுக்கு உதவாது," என்று முணுமுணுத்தாள்.

"என்ன? என்ன அது, வசனமா?" என்று கேட்டார் சர்மா.

"ஒன்றுமில்லை." என்று சொல்லிவிட்டு அப்பால் போய்விட்டாள் ராஜேசுவரி.

அவள் காட்டிய கோடி, அவளுடைய இசையுள்ளத்தின் விலையாயிற்றே! ஆனால் அப்போது அதற்கு மதிப்பு 'ஒன்றுமில்லை!

இன்னொரு சமயம் வாய்த்தது. "அப்பப்பா! அப்பளம், அப்பளம் என்று அப்பளப் பேச்சுக் கேட்டுக் கேட்டு எனக்கு, சந்திரனைப் பார்த்தால் கூட அப்பள நினைவு வர ஆரம்பித்துவிட்டது." என்றாள் ராஜேசுவரி, செவிகளைப் பொத்தியபடி.

"எங்கம்மா அப்பளத்தைப் பார்த்தாலும் பூரண சந்திரன் நினைவு வரும்!" என்று ரகுபதி பதிலளித்தான்.

"ஐயய்ய! சதா அந்தப் பேச்சுதான்! தீனிப்பாடு தான்! கஷ்டம், கஷ்டம்! என்று முகத்தை வலித்தாள் ராஜம். ரகுபதி பேசவில்லை. "உலகமே இந்த வயிற்றுப் பாட்டுக்குத்தான் பாடுபடுகிறது." என்று விசாலம் மறைவிலிருந்தபடி சொன்னாள்.

"இந்தப்பாடு நாக்குக்குன்னா! வயிற்றுப் பாடுக்கு இல்லையே." என்று கொதித்தாள், ராஜேசுவரி. பார்வை கணவனைத்தான் தாக்கிற்று.

"வயிற்றுப் பிழைப்புக்காக அப்பளம் இடுகிற அம்மாமிகள் எத்தனைபேர் தெரியுமா? நாக்கு கேட்பதனால்தான் அப்பளம் வேணும் என்று வாங்குவார்கள்." என்று ரகுபதி சொன்னான்.

ராஜேசுவரிக்கு அதற்குமேல் வாதம் செய்ய அச்சமாயிருந்தது. "அப்பள அம்மாமிகளின் பிழைப்பில் மண்ணை இறைப்பதுபோலதானே அம்மா அப்பளப் பட்டுவாடா செய்கிறார்? இந்த அப்பள உற்பத்தியினால் என் அருமையான பொழுதும் வீண்போயிற்று; என் செவிகளும் புளித்துப் போயின. மனம் நொந்துபோயிற்று" என்று கேட்டுவிட நாக்கு துடிதுடி என்று துடித்தது. அத்தனை நிஷ்டூரமாகப் பேசத்தான் முடியவில்லை. குமுறல் மனத்தூடே மறைந்து நின்றது.

'இத்தனை பேசுகிறாரே! இந்த அப்பள வேலை செய்த தீங்கு விளங்கவில்லையா? இவருக்கு இருக்கும் அப்பள வெறிதான் இப்படி அறிவை மயக்குகிறது! சை! கள் ஒழிந்ததுபோல அப்பளமும் ஒழியட்டும்! அப்பளம் ஒழிக!' என்று ராஜம் குமுறினாள்.

இந்தக் கோபம் மற்றொரு சமயம் வெளிப்பட்டது.

"அப்பளத்தைப் பற்றி பேசிப்பேசிப் பெருமைப்பட்டுப்பட்டு அலுக்கவில்லை; இடுகிறவருக்குத்தான் அப்படி இருக்கும் என்றால், ஒரு ஆண்பிள்ளையுமா இப்படி பேசிக்கொண்டிருக்கணும்?" என்று கேட்டாள்.

ரகுபதிக்கு விளங்கிவிட்டது! "உனக்கு மாமியாரின் அப்பளம் என்று பிடிக்கவில்லை போலிருக்கு. எனக்கு என் அம்மாவின் அப்பளம் என்று பெருமையிராதா? என்று கேட்டான்.

"அப்படியென்ன அதிசய அப்பளம் என்கிறேன்!"

"அதிசயம்தான்! எல்லோரும் அப்படியிட்டு விட முடியுமா? ஏ ஒன் தான்!"

"நான் இடமாட்டேனோ, பிரமாதம்? முனைந்தால் கஷ்டமா? ஏதோ பாட்டு, படிப்பு என்று கவனிக்க வேண்டிய வயசில் அப்பள அம்மாமியாக மாறணுமா என்று பார்க்கிறேன்," என்று சொல்லி லேசாகச் சிரித்தாள் ராஜேசுவரி; கஷ்டப்பட்டு வரவழைத்த சிரிப்பு. கணவனுக்குத் தன் மனக்கிடக்கை தெளிந்துவிடும் என்ற நம்பிக் கொணர்ந்த புன்னகை அது.

உறைக்க உறைக்க ஒரே தடவை பேசித் தீர்க்க நாத் துணியாமல், சந்தர்ப்பங்கள் வாய்த்த போதெல்லாம் மறுமொழிகளை வீசி, கேள்விகளும் பொழிந்தாள் ராஜேசுவரி. கணவனுடன் சலுகையோடு நிறையப் பேசி வாதாடும் உரிமையை எடுத்துக்கொண்டுவிட்டாள். மனக்குறைகளை வெளியிடப் புகுந்தாள். இத்தனைகாலம் கோழையாக இருந்து, குற்றம்குறை சொல்லாதவள் அல்லவா? இப்போது, 'இப்படி வாதாடுகிறேனே' என்று வேதனைப்பட்டுக் கொண்டே வாதாடினாள். நாவே தடை செய்யும். நல்லுணர்ச்சியே வழி மறைக்கும். அவள் அந்தத் தடைகளையும் மீறி கடகடவென பேசும்பொழுது, ரகுபதியின் தோற்றமே பின் வாங்க செய்யும். அதையும் சமாளித்து பேசுவாள் சிலசமயம். அப்போது அவனுடைய மறுமொழி தேளாகக் கொட்டி அகழியில் தள்ளும்.

மண்ணுக்கு நன்மை செய்யும் மண்புழுவை எத்தனை தடவை எத்தனை துண்டுகளாக வெட்டினாலும், ஓரோர் துண்டும் தலை, வால் பெற்று, ஒவ்வொரு முழுப்புழுவாக மாறுமாம்! ராஜேசுவரியின் உள்ளத்திலே கலையார்வத்தைக் கெல்லி, அவளை ஊகமே உருவாக வைத்திருந்த சாதனையார்வம் துண்டு துண்டுகளாக வெளியானபோது, ஒவ்வொரு துண்டும் உயிர் பெற்றுவிட்டது.

பொதுவாக ஒரே ஏக்கம் இருந்தது முன்பு. சூழ்நிலையில் ஆதரவு குன்றியிருந்தது என்று மட்டும் ஏங்கினாள் முன்பு.

ஆனால் இப்போதோ?

சதா முழங்கிய அப்பளப் புகழைப் பற்றி ஒரு குமுறல் தனியாக இயங்கியது. "வேலை இல்லை என்ற நிலைமையினால்தான் இப்படித் தீனிப் பேச்சுப் பேசும் வெறி!" என்று வெகுண்டாள் அந்தரங்கத்திலே.

'பவானி என்னைவிட உயர்ந்தவன் என்று யாரும் சொல்லமாட்டார்கள்! பவானிபோல் நான் இருந்தேனானால் எனக்கு என்ன பட்டம் கிடைக்கும்?' என்ற வினா ஒரு புறம் கொடுவாள் போலக் கொக்கரித்தது.

"மனைவி என்ற ஸ்தானத்திலே எனக்கு வழங்கப்பட்ட சிறப்பு என்ன?" என்று கணவன்மேல் சினம் ஒரு புறம் ஊர்ந்தது.

இந்தப் பலவிதமான அதிருப்திகளைப் பற்பல சந்தர்ப்பங்களிலே அவள் ஜாடைமாடையாக வெளியிடப் புகவே, அதன் பலன் விபரீதமாயிற்று. "சதா எதிர்ப்புத்தானா?" என்று ரகுபதி அலுத்தான். தந்தை நெற்றியைச் சுருக்கிப் பார்த்தார் - அன்னையும் கடிந்தாள்!

ஒருநாள், கண்ணன், அத்திம்பேரின் கைக் கடிகாரத்தை எடுத்துக் கீழே போட்டுவிட்டான்; கண்ணாடி விரிந்து போயிற்று. தந்தையின் பொருளைப் புழங்கும் ரகுபதிக்குப் பணத்தின்

அருமை தெரிந்திருந்தது. சற்று கடுகடுத்தான். அது ராஜேசுவரிக்குப் பொறுக்கவில்லை. காதல் நிறைந்த மனத்தினளாய் இருந்தபோது ராஜேசுவரியிடம் தன்மை இருந்தது. அவள் வீரம் கொண்டதும், அவளிடம் வெம்மை புகுந்தது. ஆம், காதல் மென்மையுடையது; வீரம் வெம்மை கொண்டது.

"இந்தக் கண்ணாடி வேறே போடமுடியாதா? உங்கள் மருமாள், நான் மருந்து புகட்ட வருகிறேன் என்ற கோபத்தில் என் கைம் மணிக்கட்டில் வெடுக்கு வெடுக்கென்று கடித்தாளே, நான் அசடுபோல சும்மா இருந்தேன். நீங்கள் அப்படிப் பொறுப்பீர்களா? ஐய, குழந்தைகள் என்றாலே எனக்கு அதிலிருந்தே வெறுத்துத்தான் போயிற்று." என்று கூறி, கணவனைத் திணற வைத்தாள்.

"குழந்தைகளைக் கூட வெறுக்குமளவு ஏன் அற்ப புத்தியாகிவிட்டாய்?" என்று ஒரே கேள்வி ஆங்கிலத்தில் கேட்டான் ரகுபதி.

கரகரவெனக் கண்ணிலே நீர் சுரக்க ராஜேசுவரி அப்பால் போனாள்.

அவள் இதயமோ எரிமலையாயிற்று. 'ஏன்? அற்ப புத்தியாகிவிட்டேனா? உங்களாலேதான்! உங்கள் உறவால்தான்! என்னைவிட அதிகமாக குழந்தைகளை நேசித்த பெண் யார்? குழந்தையாக நானும் இருந்தேன் - குழந்தைகள் என்றாலே உயிராயிருந்தேன். நீங்கள்தான் என் நெஞ்சிலே கபடம் புகுத்தினீர்கள், இப்போது என்னையே பழிக்கிறீர்களா? நீங்கள் எங்கள் வீட்டுக் குழந்தைகளிடம் செலுத்தும் அன்புதான் . . . அடடா . . . பிரமாதம்! பேஷ்! பேஷ்! அந்தோ! என்னைப்போல குழந்தைகளைப் பேணியது யார்? பெற்றவள் பவானி செய்யாத பணிவிடைகளை நான் செய்தேன்! என் இடது கை ஊனமாகிக் கொண்டிருக்க என் வலது கை தோட்டி வேலை செய்ததே, தெரியுமோ? போகட்டும். மற்றதெல்லாம் மறந்தா போயிற்று? பெற்ற பெருமையைக் காட்டவும் பவானி என்னை ஆட்டி வைத்ததெல்லாம் மறந்து போயிற்றா? நான் மறக்கவில்லை. மறக்க மாட்டேன். மறக்கவே முடியாது - உயிருள்ளவரை. குழந்தைகளை வெறுக்கும் பாவி என்று என்னை கருதுகிறீர்களா? அப்படியானால் என்னை இத்தகைய பாவியாக மாற்றிய பழி உங்களையெல்லாம்தான் சாரும்!' என்று உள்ளம் எரிமலையாகக் கிளர்ந்தது.

உடல் குலுங்க, அடங்காத கேவலுடன் ராஜேசுவரி அழுவதன் காரணம் என்ன? யாருக்கும் சரியாக விளங்கவே இல்லை.

இரண்டுநாள் கழித்து ரகுபதிக்கு என்ன ஆசை தோன்றிற்றோ, மைத்துனன் கண்ணனைப் பார்த்து ஏதோ சவால்விட்டான். கண்ணன் என்னமோ சொன்னான். "சரி, நீ சொன்னது ரைட்! என்னை அடி!" என்று சொல்லி, மைத்துனன் கொடுத்த அடிகளை வாங்கிக்கொண்டான் ரகுபதி. ராஜேசுவரிக்கு நெஞ்சை அடைத்தது!

இன்னொருநாள், "சந்தை இரைச்சலிலே குடியிருந்து கெட்டேன்." என்று ராஜேசுவரி அழுத்தம் திருத்தமாகச் சொல்லி முடித்ததும் ரகுபதி ஆத்திரமாகக் திரும்பிப்பார்த்தான். அந்தச் சமயத்திலே இருவர் கண்களும் சந்திக்கவே, ரகுபதியின் பார்வை கடுமை குறைந்துவிட்டது. "எங்கே, என்ன கெட்டாய், சொல்லு!" என்று உடைந்த குரலில் கேட்டான்.

ராஜேசுவரிக்கு அவனுடைய தோற்றம் தியக்கமூட்டியது. "சொன்னேனே - சவகாச தோஷம் என்றுதான்! உங்கள் பவானி எப்போதோ சொன்னாள் - அது இப்போது என் நாக்கில் வந்து விட்டது! நல்லதெல்லாம் மறந்துபோய் பொல்லாததைத்தானே கற்றுக் கொண்டிருக்கிறேன், நாலு வருஷத்தில்." என்று பதிலளித்தாள்.

நாலு வருஷம் என்றால் 'கலியாணமான பிறகு' என்று ரகுபதி புரிந்துகொண்டான். ரகுபதி மீண்டும் தாக்குவான்; தாக்கினால் மனசிலிருப்பதையெல்லாம் கொட்டிவிடலாம் என்று ராஜேசுவரி நினைத்தாள் . . . ஏமாந்தாள்.

ராஜேசுவரியின் துடிப்பு அதிகமாயிற்று. "அவசியமில்லாவிட்டாலும் அலுத்துக்கொள்கிறாள் பவானி - நான் என்ன சீர் கெட்டாலும் சொல்லக் கூடாது! எப்படியிருக்கு நியாயம்? பிறந்தகத்தைப் பற்றி பவானி குறைசொல்லிக்கொள்ளலாம் - நான்

அதே வீட்டை பார்த்துக் கொண்டே குறை சொல்லக்கூடாது! எப்படியிருக்கு பேச்சு?" என்று கேட்டா_ள் நெஞ்சு குமுற.

"பேஷாயிருக்கு!" என்று கோபமாக முணுமுணுத்தான் ரகுபதி.

நடராஜன் குறுக்கிட்டார். "பிறந்தகத்தைப் பற்றி பெருமை பேசக்கூடாது, புக்ககத்தைப் பற்றி பழிக்கக்கூடாது! நீயே இப்படி நினைத்தவள்தானே, ராஜம்! எத்தனை நேர்மையாக பேசுவாயே!" என்று கேட்டார் வருத்தமுடன்.

"அது ஒரு காலம். நான் ஏமாந்து மோசம் போன காலம் அது! சந்தை இரைச்சலை திருவிழா என்று நம்பினேன்," என்று சொல்லிவிட்டு அங்கு நில்லாமல் நகர்ந்தாள் ராஜேசுவரி.

ரகுபதியின் முகம் சிவந்து கன்றிப்போயிற்று. "பேசுவதற்கு வரம்பே கிடையாது! இவள் இப்படி இருப்பாள் என்று நான் எண்ணவில்லை! எனக்கு அதிர்ச்சிதான் உண்டாகிவிட்டது!" என்று ஆங்கிலத்தில் மாமனாரிடம் சொன்னான்.

"அவளுக்கும் ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டுத்தான் இப்படி மாறிவிட்டாள் என்று நாம் ஊகிக்க வேண்டியிருக்கிறது." என்று நடராஜனும் பதில் அளித்தார். அது ரகுபதிக்கு ரோசமளித்தது. மாமனார் மகளைத் தாங்கிப் பேசினால், அது தன்னை மதிக்காத பேச்சு என்று கருதினான்; மகளை அவர் கடிந்தாலும், அது தனக்குக் காட்டப்படும் போலி ஆதரவு என்று நினைத்தான். அவனுக்கும் மனவேதனைதானே.

## 39

தவம் மூவகைத்து.

உடற் தவம்தான் பணியாற்றல். அதிலே ராஜேசுவரி வெற்றியுடன் தேர்ந்துவிட்டாள். வாக்குத் தவம்தான் மெய்மை. ராஜேசுவரி அதிலும் தூய்மையுடன் சிறப்பாகப் புகுந்து மீண்டாள். முன்பு பாராட்டுகள் பகர்ந்தபோதும், இப்போது குற்றச்சாட்டுகள் விளம்பியபோதும், அவள் பொய் பேசவில்லை. அவளுடைய மனநிலைக்கு ஏற்றபடி அவள் கண்ட உண்மைகளையேதான் அவள் சொன்னாள்.

ஆனால் மனத் தவம் மட்டும் அவளால் முடியவில்லை. அடக்கம் தளர்ந்தது. சிந்தனை ஒடுக்கமற்றுச் சிதறிப் போயிற்று.

வாது செய்வதும் வீராப்புப் பேசுவதும் வாக்குக் கொடுப்பதும் அவளுடைய இயல்பிலே கலந்துவிட்டன.

"சதா எதிர்த்துப் பேசுவது அழகா? கொஞ்சம் அடக்கமாகப் பேசு புருஷனுடன்." என்று தந்தை கூட ஒருநாள் மெதுவாகச் சொல்லிவிட்டார். எப்போதுமே நடராஜனுக்கும் ரகுபதிக்குமிடையே பரஸ்பர மதிப்பு அதிகம். மேற்பூச்சான மரியாதை சொற்பமும், ஆழ்ந்த அன்பு காட்டும் செயல்களில் தேர்ந்தவராகவும் தன் மாமனாரை ரகுபதி கருதினான். நடராஜனுக்கோ, மாப்பிள்ளையிடம் தென்படும் சாந்தம் ராஜேசுவரியிடமும் இருக்க வேண்டும் என்பது விருப்பம். ராஜேசுவரி சொல்மென்மை இழப்பதை அவர் ரசிக்கவில்லை. ஆனால் நடராஜன் ஆராய்ச்சி நோக்குடையவர். அதனால் ராஜேசுவரியின் உணர்ச்சிக் குமுறல்களை மதித்தார். பெண்ணின் பங்கிலே நியாயமில்லை என்று அவர் நினைக்கவில்லை. அவள் துன்புறுவதன் காரணங்களை உணர்ந்தார். புக்ககத்தின் அப்பள வெறிக்கு பலியாக மகள் விரும்பவில்லை. கலைச் செல்வியாக, வாழ்வின் இனிமையைச் சுவைக்கும் ரசிகையாகத் திகழ ராஜேசுவரி விரும்புவதில் பிசகேயில்லை என்று அறிந்தார். பார்க்கப்போனால், அவருடைய விருப்பமும், மகளின் உயர்வுகளை வெளிப்படுத்தும் கலைவாழ்க்கைதானே? அதனால் நடராஜன் கவலைப்படவில்லை. "_சொல்லட்டும்! கேட்கட்டும்! வரம்பு மீறிப் போகமாட்டாள்!" என்று அவர், தம்பதிகளின் மன வேற்றுமையைப் பற்றி கவலைப்படாமலிருந்தார்.

ஆனால் விசாலம் கணவனைக் கடிந்தாள்! ராஜேசுவரி, கணவனுடன் உலாவப் போயிருந்தாள். போகும்போது, ஏதோ சிறு விஷயத்திற்குக் கூட அலுத்துக்கொண்டு நிஷ்டூமாகப் பேசிப் போனாள் என்பதைக் கவனித்திருந்த விசாலம், மனதிலே உறுத்தலுடன் கணவனிடம் சொன்னாள்.

"என்னென்னமோ கேள்விகள் கேட்கிறாள் அவரை! மாப்பிள்ளை வாக்குக் கொடுக்காமல் நல்லவராயிருக்கிறார். அப்படிப்பட்டவர் ஒரு வார்த்தை சொன்னால், இவள் பொறுக்கிறது கிடையாது! முந்தி மாப்பிள்ளையும் நீங்களும் தர்க்கம் பண்ணுவீர்கள்.... என் குடலைக் கலக்கும். இப்போது மாப்பிள்ளையும் இவளுமாய்ப் பண்ணுகிற வாதங்களைப் பார்த்தால், என்னமோ விபரீதத்திற்குத்தானோ என்று நடுங்கவேண்டியிருக்கு. அப்படிப் பேசுகிறாள்!" என்று விசாலம் முறையிட்டாள்.

"மனதிலே ஒரு எண்ணம் வலுப்பட்டு இருந்தால் கேள்வியோ பதிலோ ஆணித்தரமாக தான் அமையும்." என்று நடராஜன் சொன்னார்.

விசாலம், கவலையுடன், "நீங்கள் புரொபஸர்; பாடம் சொன்னால் மனதில் படியும்படி ஆணித்தரமாகப் பேசவேணும். இவள் புருஷனுக்குப் பாடம் படிக்கலாமா? நல்லது செய்யவோ, நல்லது பேசவோ கெட்டிக்காரத்தனம் உபயோகப்படணும்! நேற்று ரேடியோவில் ஏதோ நல்ல பாட்டு; கேட்டுக்கொண்டிருந்தார் மாப்பிள்ளை. காது அடைத்துப்போகாதா என்று இருக்கு என்று சொன்னாள் இவள்! இப்படி மனசு கெட்டுக்கிடக்கிறதா என்று எனக்கு அதிர்ச்சியாய்ப் போய்விட்டது! அவருக்கெதிரில் பாடுகிறதில்லை என்று சபதமாம்! என்னென்னவோ பேசுகிறாள் போங்களேன்! எனக்குத்தான் கிலியாயிருக்கு." என்று விசாலம் அலுப்பும் சோர்வுமாகச் சொல்லி முடித்தாள்.

"நாலு நாளில் மாப்பிள்ளை ஊருக்குப் போய்விடப் போகிறார் போலிருக்கே! என்ன சொல்கிறாள் ராஜேசுவரி?" என்று மட்டும் கேட்டார் நடராஜன்.

"அவர் மட்டும்தான் போகப்போகிறார் போலிருக்கு. நாகப்பூர் போய் தங்கையை அழைத்துக் கொண்டு போகப் போகிறார். நமக்கு ஒத்தாசைக்கு வந்தாள் - அதுபோல நாத்தனாருக்கும் செய்யப்போகலாம் அவளுக்கும் பெருமைதான். தெரியாதா அவளுக்கே?" என்று பெருமூச்சு விட்டாள் விசாலம்.

"வேண்டாம், வேண்டாம். இருக்கட்டும் இங்கேயே. அங்கே இன்னும் ஏங்கிப் போய்விடுவாள் - பவானியிடம் போய் மாட்டிக்கொள்ளவேண்டாம் நம்ம பெண். சதா தேளாகக் கொட்டிக்கொண்டிருக்கும் நாக்கு என்றால் ஏன் இவளும் மாறமாட்டாள்?" என்று சொல்லிவிட்டார் நடராஜன். விசாலத்திற்கும் மகளின் துன்பம் தெரிந்துதானிருந்தது. அதனால் ஒரு பெருமூச்சுடன் ஆமோதித்தாள்.

கணவனுக்கு விடை கொடுக்கும் வேளை வந்தபோது, ராஜேசுவரி சலனமின்றி விளங்கியதைப் பார்த்தபோதுதான், விசாலத்திற்கு தன் மகளின் பிடிவாதமான வைராக்கியம் நன்றாக விளங்கியது. விரைவிலேயே இழந்தாள் ராஜேசுவரி, நெஞ்சுத் திண்மையை. கணவனுடன் வாது செய்த வீராப்பு ஒடுங்கிப்போய், கழிவிரக்கம் அவளைச் சூழ்ந்தது. தான் கேட்ட சில கேள்விகளும் பேசிய பேச்சும் கணவனை எப்படி நேராக வைத்திருக்கும் என்ற சிந்தனை வேதனையை அளித்தது.

அவளுக்கே உடலும் உள்ளமும் கூசியது, ஓரிரண்டு நிகழ்ச்சிகளை நினைத்தபோது!

"உனக்கு_ம் எனக்கும் கல்யாணம் செய்துவைத்ததே பிசகு!" என்று ஒருநாள் ரகுபதி மெல்லச் சொன்னான்.

"அட, கலியாணமா செய்து வைத்தார்கள்? ஆகா, எப்பேர்ப்பட்ட கலியாணம்?" என்று ஏளனமும் ஆத்திரமுமாகக் கேட்டு, கழுத்தில் ஆள்காட்டி விரலால் கோடு இழுப்பதுபோல ஜாடை செய்தாள் ராஜேசுவரி. 'கழுத்தறுப்பு' என்று சொல்லும் சூசனை அது! தாலி கட்டும் அபிநயம் அல்ல!

"குழந்தைகளை வெறுக்கும் அளவிற்கு அற்பபுத்தி ஏன்?" என்று கணவன் வாய்மொழியாக வந்த வினாவோ, அவளைத் துளைத்தது. "ஐயோ, என் மனதில் நல்ல எண்ணங்கள் நலிகின்றனவே." என்று தவித்தாள்.

"கணவனின் பெற்றோர் என்ற மரியாதையை உதறி வருகிறாயே, அடி பாவி!" என்று அந்தரங்கம் ஏசுவதை விரும்பாத அவள், இன்னும் தன் ஏக்கத்தை இசையார்வமாகவே கருதப்பாடுபட்டாள் விடுதலையார்வம் என்று அதை நினைத்த சூடோடு, அந்த ஆர்வம், தன் இசையார்வத்தின் எதிரொலியென்று தான் நினைத்துப் பார்த்தாள். "எனக்குப் பாட்டு வெறிதான் பாட்டு விஷயத்தில் எனக்கு இவர் காட்டும் பாராமுகமும், அந்த வீட்டில் அதற்கு ஏற்படும் இடைஞ்சலும்தான் என்னை இப்படி மாற்றிவிட்டது. அந்தச் சூழ்நிலையை நான் வெருவுகிறதன் காரணம் என் இசையாசை தான்." என்று இன்னமும் ஒரு போர்வையைப் போர்த்து வந்தாள்.

அதற்கேற்றாப் போலவே தான் சிந்தனை இயங்கியது பலசமயம்.

ஒருநாள் கனவு ஒன்று கண்டாள். கணவனுக்கு டைபாய்டு சுரம் வருகிறது. அதன் தீவிரம் அனைவரையும் கலக்குகிறது. யார் செய்த புண்ணியமோ - அவன் பிழைத்து எழுகிறான். ஆனால்.... ஆனால்.... அவன் செவிகள் கேட்கும் சக்தியை இழக்கின்றன.

"உம், என் பாட்டு கேட்காமல், ஊர்ப் பெண்களின் பாட்டையெல்லாம் கேட்டு ரசித்தீர்களேன்னோ? அதற்கு தண்டனை இது! எந்தப் பாட்டும் யார் பாட்டும் இனி நீங்கள் கேட்க முடியாமற் போயிற்று." என்று ஏசிக் காட்டுகிறாள் ராஜம், கனவினிலே!

விழித்துக்கொண்டபிறகு, கனவை நினைத்துப் பார்த்த ராஜேசுவரி பீதியடைந்தாள். மனதில் இருக்கும் மறைவான நச்சு நினைப்புகள் கனவாக உருவாகும் என்று கேள்விப்பட்டிருந்தாள். அவள். இப்போது அவளுடைய கனவின் மூலம் யாது?

ரேடியோடிவனருகு பழியாகக் கிடந்து பாட்டு ரசித்து மகிழும் கனவின்மேல் ஆத்திரமாக வரும் அவளுக்கு. ரேடியோவைப் படக்கென மூடிவிடவேண்டும், "போதுமே உங்கள் ரசிகத்தன்மை! என்னைக் கெடுத்ததுதான் மிச்சம்." என்று ஒரு குரல் அழுது ஓயவேண்டும் என்று பலமுறை அவள் துடித்ததுண்டு. ஆனால் அந்தக் குமுறல் எல்லாம் இதயத்தூடே மக்கிப்போய் அவளுடைய மனத்துன்பத்திற்கு எருவாயின. அந்தத் தீராத சினம்தான் இத்தகைய கனவை உருவாக்கிவிட்டது என்று தோன்றிற்று.

"ஆகா! கணவரைப் பற்றி கூட இத்தனை புகைச்சலும் கோபமும் உண்டாக்கிவிட்டனவே! என் துரதிர்ஷ்டம் தான் அவருடைய வேலையில்லா நிலைமைக்குக் காரணம் என்று நான் எத்தனை சமாதானம் செய்துகொண்டாலும் மனம் நிம்மதியடையவில்லையே! நான் என் செய்வேன்? எனக்கு வழிசொல்லித் தேற்றுவார் யார்? என்னை இன்னும் கொடியவள் ஆக்காமல் கரையேற்றி உதவுபவர் யார்? என் மனத்துன்பம் அகற்ற வல்லார் யார்? கடவுளே, நீயே துணை". என்று ராஜேசுவரி அல்லும் பகலும் மனமுருகினாள்.

மனநோய் உடல் நோயை வரவழைக்கிறது. அது எப்படி? உடலில் ஊறும் ஷட் ரசங்களும், ஒரு நியதிப்படி வேலை செய்யும். அவை ஒழுங்காக வேலை செய்யவேண்டுமானால் உறுப்புகள் சரியாக இயங்கவேண்டும். உறுப்புகளின் வேலையைத் தடையுறுத்தும் சக்தி, இதயத்திற்கும் சிந்தனை உணர்ச்சி என்னும் ஜீவநாடிகளுக்கு உறைவிடமான மூளைக்கும் உண்டு என்பது ஆராய்ச்சியின் முடிவு.

ராஜேசுவரியும் ஜுரம் என்று படுத்துவிட்டாள். படுத்தவள் சில வாரங்கள் எழவில்லை. ஜுரம் டைபாய்டு ஜுரம். ஜுரத்தின் வேகத்தில் பலவிதப் பயங்கரத் தோற்றங்களும் பிரமைகளும் உண்டாயின. இத்தனைக்கும் நடுவில்,' நான் இப்படியே ஒழிந்து போகிறேன்' என்று சொல்லிக்கொண்டாள். ஆனால் தன் துன்பம் அத்தனை எளிதிலே தீரக்கூடியது அல்ல என்றும் அலுத்தாள். "இன்னும் பல அவதிகள்படப்போகிறேன். என் காதுதான் செவிடாகப் போகிறது - அல்லது என் நாக்குதான் இழுத்துக்கொள்ளப்போகிறது" என்றெல்லாம் நினைத்தாள். "கணவன் கேட்கக் கூடாது உன் பாட்டு என்றால் வேறு யார்

கேட்கணும்?" என்று தந்தை நடராஜனும் மணியும் கூட கேட்டிருந்தார்கள்! ஆம், 'ஊமையாகிக் கிட!' என்று தெய்வம் தண்டனை கொடுத்துவிடப்போகிறது! செவியும் நாவும் படைத்திருப்பதனால்தான் பாட்டுக்கேட்கவும், பாட்டுப் பாடிக் கொண்டிருக்கவும் ஆசை அடித்துக்கொள்கிறது! "மாமியாரின் அப்பளத்தோடு ஒன்றிப் போய் நல்ல நாட்டுப் பெண்ணாக இரு - உனக்கு வாழ்வில் இது தான் ஏற்றமளிக்கும்!" என்று கடவுள் அருள் செய்துவிடக்கூடும்!

அல்லது . . .

"நீ நாவினால் பாட்டு மட்டும் தானா பாடுகிறாய்? சுடுசொல் பேசிப் பலரையும் பொசுக்குகிறாயே - அத்தகைய நா எதற்கு? விஷம் கக்குகிறாயே - இன்பப் பேச்சு பேச உதவாத நா வேண்டாமே உனக்கு!" என்று கடவுள் சிட்சிக்கக் கூடும்.

ஆகக் கூடி ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது. முந்தி விரல் ஊனமானதே ஒரு சூசனை. கபடமற்ற உள்ளமுடன், தூய்மை நிரம்பி, பெரியவர்களை மதித்து, கணவனையே தெய்வமாக நினைந்து, பணி செய்வதே பிறவிப் பயனாகக் கருதி, கடமையை நிறைவேற்றிய நாளிலேயே, பிடில் வாசிக்கும் விரலுக்கு அபாயம் வந்தது.... இப்போது? கொண்ட கணவனை எதிர்த்துப் பேசி, காதல் வற்றி, கடுகடுத்தது நினைக்கும் நிலையில், இந்தப் பாவத்திற்கு பலன் எதுவாகத் தான் இருக்கக் கூடாது?

இவ்வாறு கனவிலும் நினைவிலும் பலவிதமான கற்பனைகளும் பயங்கர நினைப்புகளும் பிரமைகளும் அவளை வாட்டின.

## 40

சென்னையில் பவானி குழந்தை பெற்றிருந்தாள்.

ஆஸ்பத்திரிக்கும் அகத்திற்குமாக நடை நடந்துகொண்டிருந்த சாரதாம்பாளுக்கு," ராஜேசுவரி வந்தாளா பாரேன்?" என்று மனத் தாங்கல் தான். இந்தச் சமயத்தில் ரகுபதி சற்று உபகாரமாக இருந்தான்.

அவனுக்கு அழைப்பு வந்தது; மாமனார் விடுத்த அழைப்புதான். ராஜேசுவரிக்கு டைபாய்டு வந்து, அவள் படுத்துவிட்டாள் என்றும், ரகுபதியும் வந்தால் நலம் என்றும் எழுதினார்.

முன்னெச்சரிக்கையோடு சாரதாம்பாள் குறை கூறினாள். "நம்ம பவானி புக்ககம் போய் இருந்ததில்லை. நம்ம மாப்பிள்ளையும் வேட்டகம் வந்து உட்கார்ந்ததில்லை. ஆனால் நம்நாட்டுப் பெண் புக்ககம் வருகிறதைவிட நம்ம பிள்ளை வேட்டகம் போகிறது அதிகமாயிருக்கு." என்று கணவரிடம் சொன்னாள்.

மறுமொழி தயாராய் வைத்திருந்தவர் போல பேசினார் துரைசாமி. "அதெல்லாம் நடக்கிற போக்கிலே விட்டால்தான் நல்லது. இப்போது, நம்ம பிள்ளை என்ற ஸ்தானத்திலே ஒன்றுமே கிடையாது ரகுபதிக்கு. அத்தனை மோசமான தசை அவனுக்கு. ராஜலக்ஷ்மியின் புருஷன் என்ற பலம்தான் அவனை இந்தமட்டும் வைத்திருக்கிறது. அவனுக்கு வரவேண்டிய டைப்பாய்டைத்தான் அவள் வாங்கிக்கொண்டுவிட்டாள் என்று சொல்லலாம்!" என்று துரைசாமி சொல்லிவிட்டார்.

சாரதாம்பாள் வாய் திறக்கவில்லை. ரகுபதி கூட ஆச்சரியப்பட்டான். ராஜேசுவரியைப் பார்க்கும் ஆவல் பெருகிவிட்டது. போனான். சற்று இரக்கம் கண்டியிருந்தது அவளுக்கு.

"என் துன்பத்தை நீ வாங்கிக் கொண்டாயடி என் அன்பே!" என்று கனிவு சுரக்க அவளருகில் இருந்து கவனித்துக்கொண்டான்.

"எனக்கு வந்த உடல்நோய் கண்டு பதறுகிறாரே! என மனநோயை மட்டும் நன்கு உணர்வர் எனில்?" என்று ராஜேசுவரி மனங்குழைந்துவிட்டாள். மெல்ல மெல்ல அவள் குணம் கண்டு வந்தாள். அந்தச் சமயம் அவள் தன் மனக் குறைகள் பலவற்றை மறந்து கணவனின் அன்பையே கண்டாள். யுகயுகாந்தரமாக ஏற்பட்ட பிணைப்பு என்ற பெருமிதம் உண்டாயிற்று, கணவனின் கனிவு பெற்றதும்! அவளுடைய உடல் விரைவில் தேறுவதற்கு

உதவியாக மற்றொரு அம்சம் இருந்தது. நடராஜனின் வேலை பார்க்கும் கல்லூரியிலேயே ஒரு பேராசிரியர் தேவையாக இருந்தது. அதற்கு ரகுபதி மனுப்போடலாம் என்று நடராஜன் சொன்னார். உடனே மனுப்போட்டான் ரகுபதி.

"நமக்கு, நாமிருவராக வாழ்வதற்கு, நாம் சுதந்திரமாக இல்லறம் நடத்துவதற்கு, நம்மகம் என்ற உரிமை கொண்டாட ஒரு வீடு வேண்டும். பிறந்தகமானாலும் இங்கேயே இருப்பதிலே எனக்கு விருப்பமில்லை. எனக்கு, நானே குடித்தனம் செய்யும் பெருமிதம் வேணும்." என்ற ராஜேசுவரி நினைத்தாள். கணவனிடம் எப்படி சொல்வாள்?

"அடுத்தமாதம் டாக்டர் பிரசாத் ராவ் தம்முடைய டிஸ்பென்சரியை சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப் போகிறாராம். இப்போது டிஸ்பென்சரியாயிருக்கும் சிறுவீடு நமக்குப் போதும்." என்றாள் ராஜேசுவரி குதூகலமாக.

"கேட்டுப் பார்க்கிறேன்." என்று நடராஜன் சொன்னார். "காலேஜுக்கும் பக்கம்தான்" என்று ரகுபதி சொன்னான். விசாலமும் பெண்ணின் உடல்தேறி பழையபடி ஆகிறவரை, தானே தினமும் சமைத்து அனுப்பலாம் என்று திட்டமிட்டாள்.

உடலிலே தென்பு ஊற உதவியாக, உள்ளத்திலே நம்பிக்கை சுரந்துவிட்டது. ராஜேசுவரி தேறிவிட்டாள் டாக்டர் பிரசாத ராவ் "பேஷாகக் கிடைக்கும் வீடு. வீட்டுக்காரனிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும்." என்று கூறிவிட்டார்.

நடராஜன் ரகுபதியின் வேலைக்காக சிபாரிசோ, தூண்டுதலோ அளிக்கவில்லை. ரகுபதிக்குத் தான் அந்த வேலை என்று மட்டும் நிச்சயமாக நம்பினார்.

ஆனால் . . . எல்லோரும் ஏமாந்தார்கள்! வேறொருவருக்கு வேலை கிடைத்தது. "அவர் ஏற்றுக்கொண்டிராவிட்டால் அடுத்தவர் இவர் தான்! என்ன செய்யலாம்? அவருக்கும் எத்தனை நாளாய் கவலையோ?" என்றார் நடராஜன்.

"நான் கவலைப்பட்டாற்போலப் பேசுகிறீர்களே... நான் கவலையும்படவில்லை, ஆவலும்படவில்லை. அப்படியே வருகிற நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ளவேண்டியதுதான் என் வழக்கம். கவலையோ, கற்பனையோ பயனில்லை!" என்று ரகுபதி அமைதியுடன் பதிலளித்தான்.

இத்தனை நேரமும் சூம்பிய முகத்துடன் இருந்த ராஜேசுவரிக்கு, கணவனின் அமைதி ஆச்சரியமளித்தது. 'நீங்கள் படவேண்டிய கவலைகளையும், செய்யவேண்டிய கற்பனைகளையும் போடவேண்டிய திட்டங்களையும் நான் ஒருத்தி தாங்குகிறேனே, நீங்கள் நிச்சிந்தையாய் இருக்கமாட்டீர்களோ?" என்று நினைக்கும் ராஜேசுவரியாக முன்பு இருந்தாள். இப்போது அவள், 'என்ன திடம்!' என்று பிரமித்தாள்.

"போனால் போகட்டும். இந்த ஊரில் பிறந்து வளர்ந்தது போதாது என்று, இங்கேயே குடித்தனம் இருக்கணும் என்றால் சுவாச்யமில்லை! புதுப்புது ஊர்கள் போகாமல் இங்கேயே இருக்கணுமா என்று கவலைப்பட்டேன் நான்!" என்று சிரித்தாள் ராஜேசுவரி. அவள் சொன்னதும் மேலுக்கல்ல. பரிச்சயமில்லாத பேருக்கு நடுவே புகுந்து அவர்களுடைய தோழமையையும் அன்பையும் பராட்டையும் ஏற்று பெருமையாகக் குடித்தனம் செய்தவள் அல்லவா? அதுபோன்ற இனிமையான அனுபவங்களைத்தான் அவள் வரவேற்றாள்.

"என் இருபத்தியேழாம் வயது முடியப்போகும் சமயத்தில் தான் எனக்குக் கெட்டதசை போகிறதாம்!" என்று சொல்லியிருந்தான் ரகுபதி. அவனுடைய இருபத்தெட்டாம் பிறந்தநாள் நெருங்கிக்கொண்டு வருகிறது என்று ராஜேசுவரி நம்பிக்கையுடன் காத்திருந்தாள்.

ஜோச்யம் பலித்தது. ரகுபதிக்குத் தந்தி வந்தது. வேலைக்கு அழைப்பு வந்துவிட்டது! அழைப்பு சென்னைக்கு!

சென்னைக்கா? ஆம் . . . அங்கேதான் வேலை ரகுபதிக்கு!

ராஜேசுவரியின் கையிலே ஒரு பத்திரிகை இருந்தது. பொங்கிவந்த ஏமாற்றத்திலே பத்திரிகையை ரகுபதியின் மார்பிலே விட்டெறிந்துவிட்டு, கண்களிலே நீருடன் விடுவிடுவென அப்பால் போய்விட்டாள் ராஜேசுவரி.

அரைமணிநேரம் சூழ்நிலையில் சுரத்தே இல்லை. விதி இப்படி சோதனை செய்யும் என்று ராஜேசுவரி ஒருநாளும் நினைக்கவில்லை. விடுதலை வேட்கைக்கு இசையார்வம் என்ற பெயரிட்டு எப்படியோ மானம் காத்துக்கொண்டிருந்தாள். கணவனின் வேலையற்ற நிலையால் தலைக்குனிவு என்று பிறர் கொடுத்த பட்டத்தையும் ஆமோதித்தாள். 'விடுதலை வேட்கை' என்று சொல்வது பெரியவர்களுக்கு அபசாரம் என்ற நினைப்பு, அவளை அப்படி எல்லாம் காத்தது. ஆனால், அவள் தன்னுடைய மாசு படிந்த இதயத்திற்கு இட்டிருந்த திரை ஒரே நொடியில் அகலும் என்று கனவிலும் கருதியவளல்ல!

ரகுபதி தனியனாகப் புறப்பட்டான். மனைவி தன்னைப் பின் தொடருவாள் என்று அவன் நினைக்கவுமில்லை; "வா இனி நம் வாழ்வு அங்கு தான்," என்று அழைக்கவுமில்லை. "உனக்கு சந்தோஷமும் அமைதியும் கிடைக்கும் இடத்தில் நீ இரு, ராஜம்," என்று கோபமாகச் சொல்லாமல், அன்புடன் சொன்னான். சுதந்திர வாழ்வுக்காக தான் ஏங்குவதைக் கணவன் அறிந்துதானிருக்கிறான் என்ற ஆறுதலே ராஜம் கண்டாள். கணவனுடன் சேர்ந்துபோக வேண்டும் என்ற நினைப்பே இல்லை அவளுக்கு. கணவனுக்கு வேலையாகிவிட்டது என்றால், வாழ்வும் விடுதலையும் கிடைத்துவிடும் என்று ஆவலாயிருந்தவள் இப்போது, "வேலையாகிவிட்டது என்ற மாறுதல் தவிர வேறு என்ன விரும்பத்தக்க மாறுதல்?" என கருத்துடன் விளங்கினாள்.

'அந்தப் பட்டணத்து வீட்டுச் சூழ்நிலையின் வெப்பம்தான் என்னை அங்கிருந்து விரட்டும்,' என்று முன்பு அந்தரங்கமாக ராஜம் எண்ணினாள். பிறரும் ஊகமாக அதை உணர்ந்தார்கள். இப்போது, ராஜேசுவரி அதை செயலில் உணர்த்திவிட்டாள் . . . மற்றவர்களும் ஐயமறக் கண்டனர்.

ஆரம்பித்தது சோதனைக் காலத்தின் உச்சம். ராஜேசுவரியின் சுதந்திர ஆர்வம் குன்றிவிட்ட தீபமாகிவிட்டது. உள்ளத்து உணர்ச்சிகளின் நிறம் மாற்றி, உண்மை மறைத்து வேற்றுருவில் காண விரும்பி, பிறருக்கும் அந்த வேற்றுருவையே காட்டி ஏமாற்றி வந்த விடுதலை வேட்கை அம்பலமாகிவிட்டது.

வெள்ளையாடை அழுக்கு ஆடையாக இருந்ததை மறைக்க, மண் நிற ஆடையொன்றை மேற்போர்வையாக இட்டு இருந்தாள். தன் மதிப்பைக் காத்துக்கொள்ளும் நோக்கமும் அவசியமும் அவளை அவ்வாறு தூண்டின.

ஆனால் அழுக்கின் தீவிரம் போர்வையையும் கெடுத்து கெடு வாடையாக வீசிக்கொண்டுபகிரங்கப்பட்டுவிட்டது.

இந்தப் பரந்தத பாரத நாட்டில், கணவனுக்கு உத்தியோகம் செய்ய சென்னையைத் தவிர வேறு ஊர் இல்லையா? கடவுள் சோதிக்கிறார் என்பதில் ஐயமில்லை. அவள் துரதிர்ஷ்டம் பிடித்தவள் என்பதிலும் ஐயமில்லை . . .

கணவனும் குடும்பமும்தான் ஒரு இந்தியப் பெண்ணின் உலகம். கணவனின் பாராட்டுக்குரிய பெண்ணாக வாழ்வதும், குடும்பத்தின் பெருமைக்குத் தன்னை இலக்காக்கிக்கொள்வதும் தான் எந்தப் பெண்ணும் கொள்ளும் விருப்பம். கணவனிடம் போதுமான ஆதரவு பெறாமல், அதற்காக அவனைக் குறைகூறி மேலும் பரிவை இழக்கிறாள் பெண். அந்தச் சமயம் அவளுடைய நல்லியல்புக்கு ஊறு விளைகிறது. 'மற்ற பெண்களும் என்னைவிட உயர்ந்துவிடவில்லை' என்று கணவனுக்கு தெரியப்படுத்த முயல்கிறது பெண் உள்ளம். சுயமதிப்பைப் பெருக்கிக் கொள்ள விரும்பி, பிறரின் மதிப்புயர்வுகளைத் தாழ்த்திப் பேசும் மனித இயல்பு பெண்ணிடம் புகுந்து கொள்கிறது. மற்றவர்களிடையுள்ள குறைகளை - முக்கியமாக மற்ற பெண்களிடம் உள்ள குறைகளை நுட்பமாகக் காண்கிறாள் பெண். அது தான் வம்பு!

சீதம்மா, விசாலத்தின் தோழியாகவும் ராஜேசுவரியின் தோழியாகவும் பழகத்தக்க வயதினள். முப்பது வயது கூட நிரம்பவில்லை, ஆனால் அனுபவசாலி.

"நான் அப்போதே நினைத்தேன்! ஏதோ புதுவேகம், புதுமோகம் . . . புக்ககத்தைப் புகழ்ந்து தள்ளுகிறாள் என்று தெரிந்துவிட்டது எனக்கு. ஆனால் அப்புறமும் அவள் இருந்த விதத்தைப் பார்த்து,'அதிசயப் பிறவி தான், மாமனார் மாமியாரிடம் பக்தி குறைந்துவிடவில்லை' என்று நினைத்துத்தான் இருந்தேன். ஆச்சு, எல்லோரையும் போலத்தான் என்று தெரிந்துவிட்டது. ஆனால் நான், கோபமோ தாபமோ புருஷனோடேயே இருந்தேன். மாமியிடம் வாதாடுவேன், தலைவலி என்று படுத்துவிடுவேன் - என் மனசை வெளியிட்டுப் பேசிவிடுவேன். இப்படி புருஷன் கூட தள்ளுபடிதான் என்று நான் இருக்கவில்லையம்மா! ஒரு படி மிஞ்சிவிட்டாள் இவள்." என்று சீதம்மா ஒரு நாள் தன் கணவனிடம் சொல்லிக்கொண்டாள்,

அவள் கணவர் மனைவியின் ஆராய்ச்சியை ரசித்துப் பாராட்டவில்லை. அவருக்கு அது பெரிய விஷயமாகப்படவில்லை. ஆனால் சீதம்மாவுக்கு அது முக்கியமாகத்தான் இருந்தது. "நான் சண்டைக்காரி என்பீர்களே! இவள் வாயை மூடிக்கொண்டே எப்படி வினை செய்கிறாள்?" என்று கணவனிடம் சொல்லும் துடிதுடிப்பு! அவர் செவியில் வாங்கிக் கொள்ளவில்லை என்ற குறையோடு, தன் சிநேகிதியொருத்தியின் செவியில் போட்டாள் சேதி!

ராஜேசுவரிக்கு டைபாய்டு வந்ததைக்கூட சிலர் மறந்துபோனார்கள். "உடம்புக்கென்ன, நன்றாகத்தான் இருக்கிறது. என்னமோ மனசு தான் கோளாறு!" என்று சிலர் சொல்லிக்கொண்டார்கள்.

"டைபாய்டு வந்தது. ஆனால் குணமாகி இரண்டு மாதமாகிவிட்டதே, இன்னமும் என்ன தடை? பிறந்தகம் வந்து ஆறுமாதமாச்சே! உடம்பு நகரமாட்டேன் என்கிறதோ?" என்று பேசிக்கொண்டார்கள்.

இவர்கள் இப்படியெல்லாம் நினைக்கிறார்கள் என்பது விசாலத்திற்கும் தெரிந்து போயிற்று. எப்படி? "இன்னமும் ராஜம் இருக்கிறாளா இங்கேயே?" என்று சிலர் கேட்டார்கள். "இன்னும் 'போகவில்லையா? வரச்சொல்லி ஆகமுடையான் ஆர்டர் போடவில்லையோ?" என்று குறும்பு நெளிய சிலர் ஒரு தினுசாகக் கேட்டார்கள். "அவரே வந்து விட்டுப் போகிறார் என்று நீ போகவில்லையாக்கும்?" என்று கூட யாரோ ராஜேசுவரியைக் கேட்டாயிற்று! தோழமையும் உரிமையும் சிரிப்புமாக அவர்கள் கேட்டாலுங்கூட, அவர்கள் 'ஏதோ கசமுசவென்று யோசிக்கிறார்கள்' என்று விசாலம் ஊகித்தாள். ராஜேசுவரிக்கு இன்னும் அந்த ஊகமோ ஐயமோ இல்லை. அவர்கள் அவ்வாறு கேட்டபோது சிரித்தாள். "என் துயர் தெரியாது உங்களுக்கு," என்ற முகபாவம் காட்டி சோர்வாகச் சிரித்தாள்.

விசாலம் மகளைக் காத்துப் பேசினாள்; "மாப்பிளை அடுத்து வந்தால் அழைத்துப் போவார். இவள் அங்கே போனால், ஓய்வு எடுத்துக்கொள்ளாமல் ஓடி ஓடி வேலை செய்வாள் . . . டைபாய்டு வந்த உடம்புக்கு ஆகாது என்று அவருக்கு பயம். சாப்பாட்டுக்குக் கஷ்டம் என்றால் இவள் போகவேண்டியதுதான்; ஏதோ வீட்டுச் சாப்பாடு என்று அவருக்கும் அவசியமாயிருக்கும். இப்போது அங்கே வீட்டில் இவள் இல்லாமல் என்ன குறை?" என்று சொல்லி வந்தாள். ராஜேசுவரிக்கு அம்மா ஏன் இப்படிப் பேசுகிறாள் என்று விளங்கவில்லை. ஆனால், அவள் தாயின் பேச்சை மறுக்கவுமில்லை.

"ஆமாம், நான் சமைத்துப் படைக்க வேண்டுமா என்ன செய்யவேண்டும்? சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவார் என்று சொல்லிக்கொண்டு போகும் பெருமை எனக்கு ஏது?" என்று அவள் யோசித்தாள்.

ஒரொரு சமயம் ராஜேசுவரிக்கு உலகம் சூன்யமாகத் தென்பட்டது. தற்கொலை செய்து கொண்டுவிடவேண்டுமென ஆவேசங்கூட எழும். பெற்றோரும் தம்பிகளும் தங்கைகளும்

அன்பு மாறாமல் இருந்துங்கூட, அவளுக்கு அவர்களிடம் அன்பு குறைவாகப்பட்டது. எரிந்து விழுந்தாள். சிடுசிடுத்தாள். கடிந்துகொண்டாள்.

ஆனால் மணி, அண்ணன் என்ற தோரணையில், தன்னைவிட சிறியவர்களைக் கடிந்தபோது மட்டும், மணியைத் தாக்கி அவர்களை அரவணைப்பாள். மணியுடன் வாது செய்வாள். அத்திம்பேரின் ரசிகத் தன்மையையோ, அவருடைய பெருமையையோ அவன் பேசினால் கூட, "உனக்குத் தெரிந்த லட்சணம் அது தான்!" என்று அவனை வாயடக்கினாள். அவளுடைய இதயத்தில் இன்பமில்லையாதலால் அவள் பிறரையும் நோக வைத்தாள்! அவளே அதைத் சொல்லிக்கொண்டாள்!

"நீ பேசுவது எத்தனைபேரைப் புண்படுத்துகிறது?" என்று ஒருநாள் விசாலம் நயமாகக் கேட்டபோது,

"ஊம், எனக்கு நொந்து கிடக்கிறது மனசு; பிறர் மட்டும் சந்தோஷமாயிருக்கணும் என்ற அக்கரை எதற்கு எனக்கு?" என்று கேட்டாள்.

"எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல், வேறொன்று அறியேன், பராபரமே." என்று கருதுகிறவளாக இருந்த ராஜேசுவரிதானா இவள்?

ஒருநாள் விசாலம் எதற்கோ அலுப்புடன் பேசி, "சனியன்" என்று முத்தாய்ப்பு வைத்தாள். அது சகஜமான சொல் தான்- ஒவ்வொரு குடும்பத்திலும். ஆனால் சந்தர்ப்பத்தில் தன்னை திட்டுகிறதாக கோபம் வந்தது ராஜத்திற்கு.

"ஆமாம், சனியன் தான் போ! சனி பலவீன்னாயிருக்கும்போது கஷ்டங்கள் அதிகம் கொடுப்பான். பலமுள்ளவனாகயிருக்கும்போது நன்மைகள் செய்வான்.... நானும் சனி தான்." என்று மனதுள் சொல்லிக்கொண்டு, கூம்பிய உள்ளத்துடன் சோர்ந்தாள் ராஜேசுவரி. கஷ்டங்கள் வரும்போதுதான் ஜோதிடம், ஆரூடம், ஜாதகம், காலபலன் என்றெல்லாம் விழைகிறது மனம். ராஜேசுவரியும் அதற்கு விலக்கு அல்ல!

பத்திரிக்கைகளிலே, மனநோய்க்கு மருந்தாகவும், அறிவுக்கு விருந்தாகவும் சில சுவையான பகுதிகள் வெளியாவதுண்டு. கேள்விகள் கேட்டு குழப்பம் ஒழிக்க விரும்பும் அன்பர்களுக்கு விடையளிக்கும் மனத் தத்துவ நிபுணர்கள் பலர் அதுபோன்ற பகுதிகளிலே எழுதுவர். ராஜேசுவரி அவற்றைப் படித்து வந்தாள். பல கேள்விகள், அவளுடைய பிரச்சணைகளை போலவே இருக்கும்.... அவற்றின் விடைகளைப் படிப்பாள். "நான் ஒருத்திதான் அதிசயமாகத் துன்பப்படவில்லை. பலர் என்னைப் போலவே இருக்கிறார்கள்." என்று ஆறுதல் அடைந்தாள். தன் மனத் துயர் இயற்கை நியதியை மீறியதல்ல - தன் இயல்பிலே ஏற்பட்டுவிட்ட மாறுதல் மானிட இயல்பை ஒட்டியதுதான் - என்று அவளுக்குத் திருப்தி உண்டாக்கிவிட்டது.

"உலகத்தாரைப் போலவேதான் நாம் இருக்கவேண்டும்; புதுவழி போக முடியாது, ராஜம்," என்று கணவன் அவளுக்கு எழுதினான்.

ராஜேசுவரி தயக்கமில்லாமல் பதில் எழுதினாள். "உலகத்தாரைப்போல் இருக்கத்தான் நான் விரும்புகிறேன். அப்படி வாழ முடியாத குறைதான் - வாழ வகையில்லாத ஏமாற்றமே எனக்கு," என்றுதான் எழுதினாள்.

சந்தோஷமும் நல்லெண்ணங்களும் இணைந்து செல்லும் எப்போதும். எப்போதும் சந்தோஷம் நிலைப்பதில்லை... துன்பம் வருகிறது- அது இயற்கை நியதி. துன்பம் வந்ததும் சிந்தனைகளின் சிறப்பும் குறைந்து போகிறது. அப்போது, பழையனவற்றை நினைந்து மேலும் துன்பம் கொள்ளுகிறது மனது. "நான் செய்வது தவறுதானா? நான் நினைப்பது சரிதானா?" என்று ஆராய்கிறது மனது. "தப்புத்தான்." என்று தெரிந்தாலும் எளிதிலே அதை ஏற்க மனம் ஒப்பாது. மனதின் பொல்லாத்தனம் அது. அதை அடக்கும் சக்தி போய், "நான் செய்வது சரிதான்! நான் செய்தது தவறு இல்லை," என்று ஊர்ஜிதப்படுத்திக்கொள்ளவே மனம் முயலுகிறது; இது சகஜம். ஒவ்வொருவரும் அறிந்துணரக் கூடிய உண்மை.

ராஜேசுவரிக்கும் மனது இப்படியே தான் இயங்கியது. பவானியை நினைத்தபோது, 'பவானியை விட நான் நல்லவள், சிறந்தவள், சந்தேகமில்லை. நான் வஞ்சனையற்றவள், வேற்றுமை அறியாமலிருந்தவள். நான் அசடு; ஏமாந்தவள்,' என்று தன்னையே அனுதாபங்கண்டுகொண்டு பார்த்துக் கொண்டாள்.

நல்லவள்தான். சூதறியாதவள்தான்; ஆனால் ஏமாந்தவள் என்று நினைப்பானேன்? அதற்குக் காரணம் இருந்தது. கலியாணமான புதிதில் தம்பதிகள் கடிதங்கள் பரிமாறிக்கொண்ட நாளில், ஒரு தடவை அவள் பதில் எழுதவேண்டிய நாள் தவறிவிட்டது. வீட்டில் சுண்ணாம்பு பூசிக்கொண்டிருந்ததனால், வீடு முழுவதும் பண்டம் பாடிச் சாமான் இடம் மாறிப்போய் அமர்க்களப்பட்டது. ஏவல் வேலைகளைச் செய்ய அன்று ராஜேசுவரிக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சாவகாசமாக உட்கார்ந்து கடிதம் எழுதும் வழக்கம் அதற்கு நேரமும் வசதியும் இருக்கவில்லை. அலுப்பும் கோபமும் வந்தன. அதனால் மறுநாள் எழுதினாள். கடிதத்திலே, "வேலை சரியாக இருக்கிறது வீட்டில்; எழுதவே நேரமில்லை; எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கவில்லை." என்று எழுதிவிட்டாள், கணவனுக்கு.

"அம்மா கூட ஆச்சரியப்படுகிறாள், உனக்குப் பிறந்தகத்திலே இத்தனை வேலையா என்று! பொறுத்திரு; நீ தான் வந்துவிடப் போகிறாயே அங்கிருந்து." என்று ரகு பதில் எழுதினான்.

"பிறந்தகத்திலே ஒழிச்சலில்லாமல் வேலையா?" என்று மாமியார் நினைக்கும்படி நடந்துகொண்டது அசட்டுத்தனம் இல்லையா? ஒருநாள் தொல்லைக்காக அலுத்தாள்! வாழ்நாள் முழுவதும் அதன் பலனை அனுபவிக்கிறாளே! பவானி எப்படி நடந்துகொண்டாள்? பிறந்தகச் செல்வி என மாமியார் நினைக்கணும் என்று மாமியாரின் எதிரில் எத்தனை அட்டகாசம் செய்தாள்! ராஜேசுவரியோ, அம்மா கவலைப்பட்டாளே என்று பெண்பார்க்க வந்த பேர் இருக்கும் வரையில் எத்தனைகாரியம் செய்து உதவினாள்? "மூத்தவள் இவள் - அம்மாவிற்கு உதவாமல் முடியுமா?" என்று மாமியார் சொன்னதெல்லாம் அதனால் தானே?

## 41

ஏமாந்தவள்தான் அவள் என்பதில் ஐயமில்லை!

பாட்டு வளரும் புக்ககத்தில் என்று ராஜம் நம்பினாள். அன்பு மிகுந்த புக்ககத்தார் என நம்பினாள். நம்பினதெல்லாம் வீணாயிற்றே!

"நான் ஏமாந்தவள்," என்று அடிக்கடி மகள் சொன்னதைக் கவனித்தார் நடராஜன். அவளுடைய கருத்து விளங்காவிட்டாலும், "வாழ்விலே ஏமாற்றம் அடைந்தேன்" என்று அவள் சொல்வதாக ஊகித்தார்.

"வாழ்க்கை என்றால் நினைத்ததெல்லாம் நடந்துவிடுமா? ஏமாற்றங்களும் துன்பங்களும் வராதா?" என்று கேட்டார்.

"அதற்குச் சொல்லவில்லை நான் . . . பவானியைப் போல் சாமர்த்தியமாக இருக்கத் தெரியாமல், அவளுடைய குழந்தைகளுக்குகூட பயந்தேனே - புக்ககம் என்றால் அப்படித்தான் என்று எண்ணி ஏமாந்தேன் - ஒரொருத்தர் எப்படி இருக்கிறார்கள் என்று இப்போதுதானே தெரிகிறது? என்னைப்போல் ஏமாந்தவள் யாரும் இருக்கமுடியாது"

"ஏமாற்றுவது கொடுமை! ஏமாந்தால் இழிவு இல்லை. அறியாமையே ஒரு பெருமைதான்." என்று நடராஜன் சொன்னார்.

"ஓகோ, எனக்கு இப்பொழுது எத்தனை பெருமை பார்!" என்று ராஜேசுவரி சீறினாள்.

"ஏன், பெருமை இல்லாமல் என்ன? நீ அனாவசியமாய்ச் சிறுமைப்பட்டால் என்ன செய்வது? பெருமைப்படவேண்டிய விஷயங்கள் எத்தனை இல்லை? யோசித்துப்பார்! மற்ற விஷயங்களில் கவனம் செலுத்து." என்றார் தந்தை.

'எந்த விஷயத்திலும் மனம் ஊன்றி லயிக்க மறுக்கிறதே? என் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சி சாமானியமா?' எனக் கேட்க விரும்பினாள் ராஜேசுவரி. ஆனால் அப்படிக் கேட்கச் சக்தி இல்லை. கண்கள் மட்டுமே கலங்கின.

"நல்லதனமாக இருந்ததற்காக வருந்துவார்களா? தியாகபுத்தியுடன் பழகினாய் என்று சந்தோஷப்படவேண்டாமா? வருந்துவானேன்? பிறருக்குத் தீங்கிழைத்தற்காக வருந்துவது அழகு. பிறருக்கு உபகாரம் செய்யாமல் சுயநலமாக இருந்தோமே என்று வருந்துவது சரி. வஞ்சனையற்று இருந்தேனே என்று வருத்தப்படுகிறாயே, நியாயமா?" என்று மீண்டும் கேட்டார் நடராஜன்.

"ஏமாந்தவள் என்று என்னை நினைக்கிறார்கள் . . . விட்டுக்கொடுத்து மனசை அடக்கியவள் என்று நினைக்கவில்லையே அப்பா! இல்லாவிட்டால், கெட்டிக்காரி, குள்ளநரி என்று எண்ணம். நல்லவள் என்ற எண்ணமே இல்லையே அப்பா?"

"அவர்கள் மனசுக்குத் தெரியும்; நீ வஞ்சனை இல்லாமல் பழகுவதும் கடமையைச் செய்வதும் தெரியாமலிருக்குமா? கவலைப்படாதே வீணாக! சுய அனுதாபம் கூடாது! பிறர் நம்மிடம் அனுதாப்படலாம்; நாமே அனுதாபப்பட்டுக்ககொள்ளக்கூடாது! நம்மை நாமே கண்டித்துக்கொள்வதுதான் நல்லது" என்று அறிவுறுத்தினார் தந்தை.

ராஜேசுவரி பேசவில்லை.

முன்பு இருந்ததுபோல தூயமனம் மீண்டும் வருமா? இந்தத் தீயமனம் போகுமா?' என்று வஞ்சனையில்லாமல் கடவுளை இறைஞ்சினாள் ராஜம்.

மணவாழ்வில் காதல் சூரியசந்திரர் போன்றது. கண்ணுக்குப் புலப்படாத போது சூரிய சந்திரர் எங்கேயோ இருக்கத்தான் இருப்பார்கள், கடமை வழுவாமல் இயங்கிக்கொண்டுதான் இருப்பார்கள். இயற்கை நியதியையொட்டி அவ்வாறு சூரிய சந்திரர் நம்முன் உலவுகிறார்கள். தம்பதிக் காதலும் அதே ரீதியில் இயங்கும் தன்மையுடையது.

ரகுபதிக்கு ராஜேசுவரியிடம் ஏற்பட்ட மாறுதல் கோபமூட்டவில்லை. முன்னம் அவளுடைய சிந்தனைச் சிறப்பைப் போற்றினான்; இப்போது அந்தச் சிந்தனைச் சிறப்பின்மையை அனுதாபமுடன்தான் ஏற்றான். கோபமிருந்தால் திடுதிப்பென வருவானா வேட்டகம்?

ஒரிஸ்ஸா மாகாணத்தில் ஏதோ வேலை விஷயமாக பேட்டிக்கு அழைப்பு வந்தது. சென்னையில் வேலை வேண்டாம் என்ற எண்ணம் அவனுக்கும் இருப்பதால்தான் பேட்டிக்குப் போகிறான். போகிற வழியில்தானே வேட்டகம்?

கணவன் சொல்லாமல் கொள்ளாமல் வந்து இறங்கியதுமே மகிழ்ச்சியோடு கூடிய திகைப்பை எய்தினாள் ராஜேசுவரி. ஆனால் மறுநாளே மகிழ்ச்சி பறந்தோடிவிட்டது.

நடராஜன், அவளுடைய தந்தை, ரகுபதியைப் பார்த்து,"திரும்பும் வழியில் இறங்குவீர்களோன்னோ, மாப்பிள்ளை?" எனக் கேட்டார். ராஜேசுவரியைப் போலவே, ரகுபதியும் "இதென்ன தொனி? இதென்னகேள்வி?" என்று பார்த்தான்!

"தயாராயிருப்பாள் ராஜம். அப்படி உங்களால் இறங்க முடியாது, லீவு போதாது என்றால் கூட, நான் அவளை அழைத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு வருகிறேன்!" என்று பகர்ந்தார் நடராஜன்.

ராஜேசுவரி வெறித்துப் பார்த்தாள். ரகுபதி எங்கேயோ பார்ப்பதுபோல பாசாங்கு செய்தான். ராஜேசுவரி அன்னையிடம் போனாள். "அப்பா என்னை விரட்டுகிறார்!" என்று சொல்வதற்குத் தான் விடுவிடுவெனப் போனாள். அங்கே விசாலம் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்! எதற்காகத் கண்ணீர் சிந்துகிறாள் அன்னை? மகளின் சங்கடம் பாத்துத் தான்!

ராஜேசுவரிக்கும் அழுகை வந்தது. "அப்பா சொல்லிவிட்டார். சொன்னது சரிதான். இந்த விசை அவருடன் நீ போகாவிட்டால், நிச்சயம் புக்ககத்தாருக்கு வேற்றுமை தெரிந்துபோகும்.

இத்தனை நாளும் உடம்பு நேரில்லை, உடம்பு தேறவில்லை என்று கணவனைத் தொடர்ந்துபோகாமல் இருந்ததாகப் பிறர் நினைந்திருப்பார்கள். அது உண்மை தான். இனியும் போகாவிட்டால்..."

சென்னையை நினைந்தபோதே இதயம் நழுவிச் சரிவதுபோல சோர்வு வந்தது. உடம்பு கனன்றது. நிற்கும் இடத்திலேயே, அப்படியே உடலோடு தரையில் புதைந்து போய்விடவேண்டுமென்ற துக்கம் வந்தது. வாழ்நாள் முழுதும் வேதனைப்பட முடியவே முடியாது - சில நிமிஷங்களிலே உயிர் துறக்க பல வழிகள் இருக்கின்றன... ஏதாவது ஒரு வழி பற்றினால் என்ன?

யோசித்துக்கொண்டே மாலைமாலையாகக் கண்ணீர் வடித்தபடி உட்கார்ந்திருந்தாள். பக்கத்திலே ஏதோ ஒன்று ஊர்ந்து சுவரோரம் சென்றது. அது ஒரு தேள்!

"தேள் . . . அம்மா, தேள்!" என்று பதறி எழுந்தாள் ராஜம்.

விசாலம் கையிலே விளக்குமாறுடன் வந்தாள். அதற்குள் நடராஜன் செருப்புடன் வந்தார். தேள் செத்து ஒழிந்தது.

"நல்ல வேலை, இத்தனை பக்கலிலேயே உட்கார்ந்திருந்தாயே - கடிக்காமல் விட்டதே கடவுள் செயல்!" என்றாள் விசாலம்.

"கடித்திருந்தால் ஒருபாடு ஒழிந்திருப்பேன்." என்று சொல்ல நாக்குத் துடித்தது, ஆனால் எப்படிச் சொல்லுவாள்?

"தேள்" என்று பதறி எழுந்ததை நினைத்தால் அவளுக்கே அவமானமாயிருந்தது! "உம், அதுவே ஒரு விஷமுள்ள தேள் தான்; கடித்தால் உயிர்போய்விடும் என்றுமட்டும் தெரிந்திருக்கட்டும், கையைக் கொடுத்திருப்பேன்! இந்த மாதிரி... உயிரை வாங்காமல் உயிரோடு துடிக்க வைக்கிற சமாசாரம்தான் பயமாயிருக்கு!" என்று சொல்லிவிட்டுச் சமாளித்தாள் ராஜேசுவரி... ரகுபதியையும் ஓரப் பார்வை பார்த்தாள்.

"உன்னை மெட்ராஸ் வரும்படி நான் சொல்லவில்லை; உன் அப்பா சொன்னார். இஷ்டமிருந்தால் வா. சந்தோஷமாயிருக்கமுடியாது என்றால் நான் கூட்டிக்கொண்டு போக விரும்பவில்லை," என்று ரகுபதி ரோசமுடன் மெல்லச் சொன்னான்.

நடராஜன் ராஜேசுவரியை உறுத்து நோக்கி, "பேசாதே! தேள் உன் நாக்கிலே இருக்கக் கூடாது! எதற்கும் வரம்பு உண்டு! ஓரோரு தடவையும் ஓண்டியாகப் போய் இறங்க அவர் மனசு என்ன பாடுபடும் என்று நீ கொஞ்சம் யோசித்துப் பார்க்கணும்." என்றார்.

ரகுபதியின் கண்களைச் சந்தித்தன ராஜத்தின் நீர்விழிகள். ரகுபதி கண்ணீர் காட்டாவிடினும், அவன் பார்வையிலேதான் எத்தனை ஏக்கம்!

"என்ன சொல்கிறாய்? என்று கேட்டார் தந்தை, புதல்வியை, சற்று நிதானமாக.

"போகிறேன் - ஒழிந்து போகிறேன்." என்று சொல்லிவிட்டாள் ராஜேசுவரி.

அவளுடைய துன்ப முகம் தந்தையைக் கலங்க அடித்தது. அன்று மாலை ரகுபதி பேட்டிக்காகப் புறப்பட்டுவிட்டான்.

"மாப்பிள்ளைக்குப் புதுவேலை கிடைத்தாலும், போய்ச் சேர இரண்டு மாதமாகும். நீ இப்போது போகாவிட்டால் அப்புறம் இன்னும் பீதியும் அச்சமும் வளரும் - மாமியார் மாமனார் முகத்திலே விழிக்கவே கூசுவாய்! சீக்கிரம் சமரச பாவம் வந்தால்தான் உனக்கும் கஷ்டமிராது." என்று புத்திமதி கூறித் தேற்றும் வகையில் சொன்னார் நடராஜன் - அதை ராஜேசுவரி ஆட்சேபிக்க முடியவில்லை.

சோர்வுடனே ரகு தயாரானாள் புறப்பட; முன்றே நாட்களில் திரும்பிவிடுவானே!

ஆனால் ரகுபதி வரவேண்டிய தினம் அவனிடமிருந்து கடிதம் வந்தது.

"நான் என் தங்கை புருஷரைப் பார்த்துக்கொண்டு, நாக்பூர் வழியே சென்னை போகிறேன்" என்று எழுதிவிட்டான்.

கடிதத்தைப் படித்த ராஜேசுவரி, கணவனின் அன்பை நினைந்தாளோ, அவனுடைய ஒதுக்கத்தைத்தான் நினைந்தாளோ - பொலபொலவெனக் கண்ணீர் உதிர்த்தாள்.

"வா, போவோம்! உன்னைச் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டிய கடமை எனது... ஒரு கை பார்க்கிறேன்! என் சாமர்த்தியத்தைப் பார்த்து விடு!" என்று கூறும் வகையில் கணவன் அவளை அழைத்துப் போகக் கூடாதா? இப்படி ஓடிவிட்டானே வேறு வழியாக?

நடராஜனுக்கு உறுதி உண்டாகிவிட்டது. இனி ராஜேசுவரியைப் புக்ககத்திலே சேர்ப்பது அவர் வேலை!. ரகுபதியின் மனநிலை "மனைவியின் இஷ்டம்" என்ற கனிவுடன் இருக்கலாம்; ஆனால், தந்தையின் கடமை "மகளின் இஷ்டம்" என்று பார்க்கும் நிலையைத் தாண்டிவிட்டது!

விசாலம்தான் அதற்குத் காரணம்! "நீங்கள் அவளைத் தடுமாற வைத்தீர்கள் - ஆதியிலே அவள் சரியான பாதையில் போனாள்!" என்று ஒருநாள் விசாலம் சொன்னாள் கடுமையாக. அது மட்டுமா? உதாரணமாக ஒரு சிறு சம்பவம் சொன்னாள்.

"ஒரு சிறு பாத்திரம் சீதம்மா கேட்டாள் - நம்ம பக்கத்துப் பருப்புக் குண்டான்; கொடுத்தேன். நாலுநாள் முந்தி அவளுடைய குழந்தை அதை எடுத்துக்கொண்டு வந்து நம்மகத்துத் தொட்டி நீரில் மொண்டு மொண்டு விளையாடிற்று. போகும்போது பாத்திரத்தை இங்கேயே வைத்துவிட்டு போய்விட்டது. எனக்கா, அதை உடனே கொண்டுபோய்க் கொடுக்கணும் என்ற துடிப்பு - கை ஒழியவில்லை. எங்கே சீதம்மா வந்து அதைப் பார்த்து விட்டு, நான் அதை மறுபடியும் கொண்டுவந்துவிட்டேன் என்று நினைத்துவிடுவாளோ என்று திகில். அவள் வந்தால் சட்டென்று அவள் கண்ணில் படும்படி கிணற்றடியில் இருக்கிறது. உள்ளே எடுத்துவைத்து மெள்ளக் கொடுப்போம் என்றால், அதைக் தொட்டு, நம்முடைய வீட்டுக்குள்ளே வைத்துக்கொள்ளக் கூசுகிறது. இத்தனைநாள் என் சொந்தமாக இருந்த பண்டம் தான் அவளுக்குக் கொடுத்தாச்சு என்று ஏற்பட்டதும் எத்தனை யோசனை செய்ய வைத்துவிட்டது? எல்லாம் அப்படித்தான்! முந்தி மாடு வைத்திருந்து, அப்புறம் விற்றோம். இரண்டுநாள் அந்த மாடு ஓடிஓடி வந்தபோது, அருமையாக வைக்கோலும் புல்லும் போட்டோம். பின்பும் அது வந்துகொண்டேயிருந்தது! இதேதடா வம்பு? வாங்கிக்கொண்டு போனவன் என்ன பண்ணுகிறான்? தினி லாபம் என்று சும்மா இருக்கிறானா?" என்று முதலில் அவன்மேல் கோபம் வந்தது. அப்புறம், மாட்டுமேலேயே கோபம் வந்தது - ஒருநாள் விரட்டியடித்தோம். பின்னர் அது இந்தப் புறம் வந்தாலும் வீட்டுக்குள் ஓடி வரவில்லை... வாசலோடு போயிற்று! இந்த மனசே ஒரு புதிர் தான் - அதற்கு சந்தேகமில்லை." என்று விசாலம் சொன்னாள்.

ராஜேசுவரியை மனதில் வைத்துக்கொண்டுதான் அத்தனையும் பேசினாள் என்பது நடராஜனுக்குத் தெரியாதா?

## 42

"ஒரிஸ்ஸா பேட்டி பலனளிக்கவில்லை." என்று தகவல் வந்தது.

"ராஜா பாய்! சென்னை வாழ்க்கைக்கு உன்னைத் தயார்ப்படுத்திக்கொள்" என்று எச்சரிக்கை செய்துவிட்டார் நடராஜன்.

"ஹோ" வெனக் கதறி அழவேண்டும் போல, துக்கம் அவள் மார்பைப் பிறந்தது... விம்மினாள், கேவினாள். "நம்பி நம்பி மோசம் போனேன்! சங்கீதம் வளராது என்று ஒரு இடி! என் புகழ் எல்லாம் மணனானது ஒரு பேரிடி! அதுதான் போகட்டும் என்றால், படாதபாடுகள் பட்டும் பொல்லாங்குதான் மிஞ்சுகிறது. புகழுக்குரியவள் நான், நல்லவள் நான் என்று நாம் நம்பியதொல்லாம் பொய்யானது ஒரு நெருப்பிடி! அன்பு என்னைச் சூழ்வதாக எண்ணினேன் - கடைசியில் பெற்றோர் கூட கடுமொழிபேசி ஒதுக்கும் நிலைமை வந்ததே - இது ஒரு நீரிடி! இத்தனை இடிகளும் என்னைக் கொல்லாமல் வைத்திருப்பதேன்?

எனக்கு இன்னும் என்னென்ன துன்பம் வரவேண்டும்?" என்று குழைந்து குமைந்து அழுதாள். அனைவரும் அவளை நேசித்த காலம் இருந்தது. ஏனையோரும் அவளை மெச்சிய காலம் போயிற்று. ஒவ்வொருவரும் ஓரோர் அம்சத்திற்காக அவளைப் பார்த்துப் புகழ்ந்ததுண்டு. ஆதரிச மங்கையென அவள் விளங்கியதுண்டு; இப்பொழுதோ, அவள் ஒரு பெண். சிறப்புகளுக்குரியவள் அல்ல - சிறுமைகளுக்குடையவள்! பாராட்டும் புகழும் கூட வேண்டாம் . . . அன்பு கூடப் பறி போய்விட்டதே!

நடராஜனுக்கு மகளின் கலக்கம் தெரிந்துதான் இருந்தது. ஆனால் அவர் தன் கடமையைச் செய்தார். அவரால் சொல்லக் கூடிய புத்திமதியை சொல்லிவிட்டார். புத்திமதி மட்டும் சொன்னார் அக்கரையுடன் இன்னொரு முறை அவளைத் தேற்றினார்.

"பயப்படாதே! வீணாகக் கூசாதே. தோழிபோலப் பழகு. அடிமையாகவும் இருக்க வேண்டாம், யஜமானியாகவும் இருக்கவேண்டாம். மரியாதையும் அடக்கமும் அபிமானமும் வைத்துப் பழகு, போதும். இசை உனக்கு இன்பம் தரவில்லை என்றால் அதை மறந்துவிடு. எது வாழ்க்கையில் அமைதியாக இன்பம் தருகிறதோ, அதை ஏற்றுக் கொள். துன்பங்களைத் தவிர்ப்பது நமது சாமார்த்தியத்திலும் இருக்கிறது." என்று போதித்து வழி சொன்னார்.

மனைவி மக்களைத் தமிழ்நாடு அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டார். சென்னையிலே மகளை இறக்கிவிட்டு, பிறகு விசாலம் திருச்சிபோய் அங்கு ஒரு மாதம் இருந்து விட்டு ஊர் திரும்ப வேண்டியது என்று திட்டமிட்டார்.

அன்னையும் உடன் வருகிறாள் என்ற தென்புடன் ராஜேசுவரி புறப்பட்டாள். தந்தை சொன்ன அறிவுரை கேட்டபின் சிந்தனை தெளிந்துதான் இருந்தது. நீரின்வேகம் குறைந்து தெளிவுடன் பெருகும் கார்த்திகைக் காவிரிபோல ராஜேசுவரி விளங்கினாள்.

சம்பந்தியம்மாளும் நாட்டுப் பெண்ணும் வருவதை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர் துரைசாமி தம்பதிகள். புக்ககம் வந்து சேர்ந்ததுமே ராஜேசுவரி அச்சமும் கூச்சமும் மறந்துவிட்டதாக உணர்ந்தாள். அவள் பயந்தபடி ஒன்றுமே இல்லை. பவானி கலகலப்பாக பேசினாள். பவானியின் குழந்தைகள் எல்லோருக்கும் இடையே உறவை வலுப்படுத்தும் வகையில் விளையாடி மழலை பேசின. சாரதாம்பாள் பழையன எல்லாம் மறந்தவராகவே தோன்றினார். ரகுபதி கனிவுப் பார்வைகளையும் ஆதரவான சொற்களையும் சூசித்தான். துரைசாமி கைப் பணம் செலவு செய்து, அந்த வீட்டிற்கு ஒரு விசாலமான வராந்தா அமைத்து, சுற்றிலும் கம்பிக் கதவுகள் போட்டிருந்தார். முன்புறம் நிறைய இடம். ஒரு பெரிய அறை போன்று வசதியும் குளுமையும் இருந்தது. அங்கே குழந்தைகள் விளையாடின. கீக்கடமான இரண்டு அறைகளிலேயே அடைந்து கிடக்காமல் இடவசதி நன்றாகப் பெருகிப் போயிருந்தது. கலியாண வீடுபோல எல்லோரும் அங்கேயே படுத்தார்கள். நிறையப் பேசிக் கொண்டே அயர்ந்துபோய்த் துங்கினார்கள். குதுகலமாகத் தான் விளங்கியது சூழ்நிலை. கடவுளை நினைத்து கை கூப்பி வணங்கினாள் ராஜேசுவரி.

மூன்றாம் நாள் விசாலம் குழந்தைகளுடனும் மணியுடனும் திருச்சிக்குப் புறப்பட்டுவிட்டாள். வெறிச்சோடிவிட்ட வீட்டில் ராஜேசுவரி தடுமாறாமல் காப்பாற்றின மருமக்க குழந்தைகள். சித்ருவும் பிரவீணனும் கடைக்குட்டி மதளையும் அவளுக்குப் பேருதவி செய்தனர். அவர்களுடைய குறும்புகளையும் விளையாட்டுகளையும் ரசிக்கும் நோக்கிலே வேற்றுமை தோன்றாமல் ராஜம் பேசினாள், சிரித்தாள். அன்றிரவு அவள் எதிர்பாராத படி, ரகுபதி சமையற்காரப் பையனைப் பார்த்து, "இந்தா, இந்த விளக்குக்கு மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு வந்து வை" என்று சொல்லிவிட்டு, ஒரு சிறு புதுவிளக்கை, அட்டைப் பெட்டிலிருந்து எடுத்துத் தந்தான். "மாமா, மாமா" என்று ஓடிவந்தாள் சித்ரா, புதுப் பண்டம் கண்டதும்.

"ஏய், உடைந்து விடப் போகிறது... இன்றைக்குத்தான் வாங்கிக்கொண்டு வந்தேன்" என்று ரகுபதி குழந்தையை ஒதுக்கிவிட்டு, விளக்கைச் சுவரில் மாற்ற ஒரு ஆணி அடிக்க எழுந்தான்.

"வா, சித்ரா, தாச்சுக்காலம், தூக்கம் கண்ணைச் சுழட்டுகிறது." என்று பவானி, குழந்தைகளோடு வாசலுக்குப் போனாள்.

"எங்கள் இல்லற வாழ்வு இனி இங்கேதானே என்று தானோ இந்த ஏற்பாடு?" என்று எண்ணியபடி ராஜேசுவரி ரகுபதியின் பார்வையிலிருந்து ஒதுங்கி நின்றாள்.

"இந்த விசை என் புக்கக வாழ்வு ஒரு புது விதமான திருப்பம் காண்கிறது. நடுநிலைமை வகித்து, கணவன் புதல்வன் என்ற ஸ்தானத்தின் கடமைகளை வகிக்கும் மனத் திண்மையை அளித்துவிட்டது உத்தியோகம். என் துன்பங்கள் குறைந்து போகும்" என்று ராஜேசுவரி நினைத்து ஆறுதலான பெருமூச்சு ஒன்று வெளிப் படுத்தினாள். "தோழிபோல பழகு" என்று நடராஜன் சொன்னார், ராஜேசுவரியும் தோழமையை நட்டு வளர்த்தவேண்டுமென்று வந்துவிட்டாள். அவள் பயந்ததுபோல யாரும் பகை காட்டவில்லை, வேற்றுமை தோற்றவில்லை. ஆனால் ஏனோ சூழ்நிலையில், அந்த ஆதிநாள் உறவின் அழகே இருக்கவில்லை. சுட்டமண் ஒட்டாது என்று சொல்வார்கள் - அதுபோல அன்பு ஒட்டாத உறவு இருந்தது அங்கு.

"உன் சேதி தெரிந்துவிட்டதடியம்மா! நீ ஒரு சிசுருஷையும் சொய்யவேண்டாம். என்று நாவினால் சொல்லாமல் பவானி, தானே வீறாப்புடன் தன் காரியங்களைக் கவனித்தாள்.

சாராதாம்பாள், 'உன்னை நம்பலாமாடி பெண்ணே?' என்று இன்னும் யோசிப்பவர்போல, அற்புதமான அமைதியைக் கடைப்பிடித்தார். ரகுபதி கூடத்தான், "நீ என் மனைவியாச்சே... உன்னைநான் நேசிக்காமலிருப்பேனா? எத்தனை குற்றம் குறை இருந்தாலும் வெறுப்பேனா?" என்று நினைத்தான்! "கிடைத்தற்கரிய மாணிக்கம் நீ, விந்தை பெண் நீ." என்ற பாராட்டு அவனிடம் மறைந்துவிட்டது.

'பின்னே எப்படி இருப்பார்கள்? நானும் மாறித்தானே போனேன்? என்னிடம் முன்போல கலப்பற்ற அன்பு இல்லையே!' என்று ராஜேசுவரி, நியாயமாக நினைக்கவேண்டியதைத்தான் நினைத்தாள். இப்படி நினைத்தது அவளுடைய . மனதில் நல்ல அம்சம். ஆனால் அவளுடைய மற்ற அம்சங்கள் எங்கே போயின? கலையுள்ளம் வாடிற்று. பெண் மனம் ஏங்கிற்று. குழந்தைமனம் அழுதது. காதல் மனம் தவித்தது.

ரகுபதி நடுநிலைமை வகிப்பவன்போல விபரீதமான அமைதியைக் கடைப்பிடித்தான். "உத்தியோகம் இல்லை என்று நான் வாடவுமில்லை! உத்தியோகம் கிடைத்தாயிற்று என்று நான் ஆடவுமில்லை." என்று சொல்லுகிறவனாகத்தான் இருந்தான். "உலாவப் போவோம்" "பாட்டுக்கச்சோரி போவோம்" என்று அழைக்க அப்பொழுதும் கூசினான்; இப்பொழுதும் கூசினான். "பிரமாத சம்பாத்தியமா? தனது என்று நாலு காசு வந்ததும் இந்த மாற்றமா பிள்ளைக்கு?" என்று நினைவுக்கு இடம் கொடுப்பதாகுமே! அவனுக்கு அவளிடம் அனுதாபமும் அவளுடைய ஆசைகளின் உணர்வும் இல்லையா? ஓரிரண்டு நாட்கள் ராஜேசுவரி முக வாட்டத்துடன் தென்பட்டபோது," வருத்தப்படாதே, ராஜம்! என்னால் எந்தவிதமான ஆதரவு கொடுக்க முடியுமோ, அதை வஞ்சனையில்லாமல் கொடுப்பேன்! அதற்குமேல் கடவுள் செயல்! "என்று பொருள் பதிந்த சிறுபேச்சுப் பேசினான் - அவ்வளவு தான்!

பவானியின் கணவர், ஆறுமாதம் ஏதோ ஒரு பயிற்சிப் படிப்புக்காக வேற்றூர் போகும்படியாகிவிட்டது. அதானல் பவானி தன் பெற்றோரிடம் இருக்கிறாள். பவானியிடம் முன்பிருந்த அதிகார அட்டகாசம் குறைந்து, அலகூஷிய பாவம் புகுந்திருந்தது. முன்பு உரிமையுடன் ஏவல்களை இட்டாள். இப்போது அலட்சியமாக, "போதுமேடியம்மா உன் பணிவும் பணிகளும்" என்று இருந்தாள். ராஜேசுவரியும் "நம்மிடையே வேற்றுமை வந்துவிட்டாது. ஓட ஓட விரட்டினார்கள். நானும் ஓடாமல் நின்றுவிட்டேன் இப்போது! நீங்களும் இப்போது உள்ளபடியே நில்லுங்கள்!" என்று சொல்லும் நோக்குடன் சற்று மிதப்பாகவே இருந்து வந்தாள். மிரள விழிப்பதும், கலங்கி நிற்பதும், பீதியுடம் சமாதானம்

அளிப்பதும் இப்பொழுது தன்னிடம் கிடையாது என்று ஸ்தாபிக்கவே முயன்று வந்தாள். அவளுடைய முயற்சிகள் வென்றனா, தோற்றனவா?

அது அவளுக்கே விளங்கவில்லை.

ஒரு நாள் பவானியின் மைந்தன் ப்ரவீணன், பெஞ்சியிலிருந்து இறங்கும் முயற்சியில் கீழே விழுந்தான். அவனை நெருங்கி பெஞ்சியில் அமர்ந்திருந்தாள் பவானி. ஆனால் பவானி குழந்தையைத் தூக்கி நிறுத்தவில்லை. மிரள விழித்தாள். சற்று அப்பாலிருந்த ராஜேசுவரிக்கு ஓடிவந்து குழந்தையைத் தூக்கணுமென்று தோன்றிற்று. ஆனால், பவானி அழும் குழந்தையை எடுக்காமல் வாளா இருந்ததைக் கண்டதும், ராஜேசுவரியின் நினைப்பு பின் வாங்கியது.

"ஐயோ, எடு குழந்தையை! தலையில் விழப் போகிறது டப்பா! எங்கே, இங்கே வா! குழந்தையை விலக்கு குழாயடியிலிருந்து," என்று முன்பு பவானி ஏவலிட்டுக் கொண்டிருந்தாள். குழந்தை அவளுக்கு அருகுதான் இருக்கும்; ராஜேசுவரி உள்ளே ஏதோ வேலையாயிருப்பாள். ஆனால் வேலையில்லாமல் சும்மாயிருக்கும் பவானி இருந்த இடம் விட்டு நகரமாட்டாள் இப்போது ஏவாமல், ராஜேசுவரியே ஓடி வருவாள் என்று பவானி எதிர்பார்க்கிறாள் போலும்!

ராஜேசுவரிக்கு, பவானியின் குழந்தையை வாரி எடுக்கும் துடிப்பு ஏற்பட்ட மறுகணமே, பழைய நினைப்பும், புதுமனமும் அந்தச் செயலைத் தடுத்து நிறுத்தின. ராஜேசுவரி நகரவில்லை இடம்விட்டு.

"கண்ணோக்கு அறிந்து பணிந்துவரும் சேடி நான் அல்லள்... நான் பழைய ராஜம் அல்லள்." என்ற வீறாப்புடன் இருந்தாள். "நான் மாறிவிட்டேன் என்பது ஐயமில்லை." என்று கூறும் பாவம்தான் இருந்தது.

"ஏண்டி, என்னாச்சு? விழுந்தானா?" என்று கேட்டவாறு சாரதாம்பாள் வந்துகொண்டே இருக்கும்போதுதான் பவானி மைந்தனை வாரி எடுத்தாள்.

ஏனோ பேசவே பேசாமல் பவானி தாயையும் மதனியையும் ஒரு தினுசாகப் பார்த்துவிட்டு, மைந்தனை மெல்லத் தடவிக் கொடுத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் கொஞ்ச நேரம்.

'மதனி, நீ நினைப்பது எனக்குத் தெரியும்'. என்று கூறும் பாவமும், அதிலே சோர்வும் பவானியின் முகத்தில் தென்பட்டன.

ராஜேசுவரிக்கும் ஏதோ உறுத்தல் உண்டாகிவிட்டது. "குழந்தைகளைக் கூடத் தாக்குமளவு அற்பப் புத்தி!" என்ற உறுத்தல்தான்!

அன்று ஒரு நாழிகை கழிந்தபின், பவானி, "அப்பப்பா, இந்தப் பிள்ளை விழுந்தாலும், கொஞ்சம் பலமாக அழுதாலும், எனக்கு, கைகால் வெலவெலத்துவிடுகிறது. எந்த நிமிஷத்தில் எது சாக்கு என்று என்ன ஆகிவிடுமோ என்று எனக்கு இவனைப் பற்றித்தான் சதா ஒரு பீதி! எங்கள் வீட்டில் பிள்ளைக் குழந்தை இரண்டாவதாகப் பிறந்தால் தக்குகிறதில்லை என்று ஒரு பேச்சு அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவேண்டியதில்லை என்று எத்தனை சமாதானப்படுத்திக் கொண்டாலும் திடீர் என்று எனக்கு ஒரு பிரமை வந்து விடுகிறது. பெஞ்சிலிருந்து விழுகிறானே, எடுக்கணுமே என்று தோன்றுகிறது - என்னமோ கை கால் அசைக்க முடியவில்லை." என்று மேல் மார்பில் கை வைத்தபடி, அப்போதும் படபடக்கும் நெஞ்சைக் காட்டிக்கொண்டு, பவானி தன் தாயுள்ளத்தைப் புலப்படுத்தினாள்.

ஏற்கெனவே உறுத்தும் மனச்சாட்சியினால் இசித்துக் கொண்டிருந்த மனது, பவானியின் சொற்களால் ரத்தம் கசிந்தது.

"மிரள விழத்த பவானியின் நெஞ்சிலே இத்தகைய பீதியா? குழந்தையை நான் எடுக்கிறேனா என்று சோதிக்கிறாள் என்று நினைத்தேனே! சோதனை தான் தேவையில்லையே! என் மனமாற்றம் தெரிந்துதானே கிடக்கிறது! ஜாக்கிரதையாய்த்தான்

பழகுகிறாள்! தாயுள்ளம் என்று பெருமை படைத்து இருக்கிறாள் - மற்ற குற்றம் குறைகளைக் காண்பது எனக்குத் தகாது" என்று கழிவிரக்கம் நிரம்பிவிட்டாள் ராஜம்... ஆனால் அது நீடிக்கவில்லையே!

பிறகு ஒருநாள், பவானி தன் பெண்ணை அதட்டிப் பேசும் சாக்கில், ராஜேசுவரியின் தாய்மையின்மையைப் பழித்தாள்.

"சட்டையைக் கழட்டும் போதே அழறாளே! குளிக்கணும் என்றால் இப்படியா?" என்று ராஜேசுவரி சகஜமாகக் கேட்டாள்.

"குழந்தை குஞ்சு இருக்கிறவர்களுக்குத் தான் பொறுமை வேணும்." என்று பெண்ணின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே பவானி எண்ணெய்க் குளிப்பறைக்குப் போகும்போது ராஜேசுவரி பவானியைப் பின்தொடர விரும்பாமல் நின்று விட்டாள்.

"ஆமாம், எனக்குத் குழந்தைகள் என்றால் பிடிக்காமல் போய்விட்டது. ஆசையும் அன்பும் இருந்தால்தான் பொறுமையும் இருக்கும். எனக்குக் குழந்தைகள் அருமை தெரியாமலேயே இருக்கட்டும் - நான் வருத்தப்படவில்லை; நீங்கள் ஏசுவதனால் நான் குறைந்துவிடவில்லை. என்னை வேறு எந்த விதமாக ஏச உங்களுக்கு வாய் எழும்பும்? என்னிடம், வேறு எந்த வி_தமான குறை கற்பிக்க உங்களுக்கு முடியும்? கடவுளாக ஏற்படுத்திய குறையைத் தான் என் குற்றமாகச் சொல்லித் திருப்திபடவேண்டும்" என்று நினைத்துகொண்டாள் ராஜேசுவரி.

அன்பு தோன்றாதபோது வெளிப் பூச்சாகச் சிரித்துப் பேசிப் பழகும்படி தனக்கு நேர்ந்த விதியை அடிக்கடி நொந்துகொண்டாள் ராஜம். மனம் விட்டுப் பழகமுடியாத அந்த ஒடுக்கம் அவளை அனலாகத் தகித்தது.

மனைவியானள் எப்படியிருக்கவேண்டும்? கணவனின் துணைவியாக இருக்க, வீராங்கனையாயிருப்பாள். சிக்கலைப் போக்கும் வகையில் அறிவுறுத்தும் குருவாயிருப்பாள். கணவனின் உடல்நலத்தைப் பாதுகாத்துப் பேணுவதற்குத் தாயாக இருப்பாள். அவனைச் சேவிக்கும் பணிப் பெண்ணாயிருப்பாள். மகிழ்ச்சியளிப்பதிலே மதலையாயிருப்பாள். காதலை வளர்த்துவதிலே சிருங்காரம் நிரம்பியவளாயிருப்பாள். அவனுடைய இச்சைகளுக்கு உகந்த அடிமையாக இருப்பாள். அவள்தான் லட்சிய மனைவி. அவளே ஆதரிச மங்கை.

இப்படியெல்லாம் இருக்க ஏது சந்தர்ப்பங்கள் ராஜேசுவரிக்கு?

தாயாக இருக்கும் அவசியமிருக்கவில்லை. குருவாக இருக்கும் தென்பு இல்லை. மதலையாய்த் தோன்றி மகிழ்ச்சியளிப்பதற்கு, அவன் 'பெரியவனாக' விளங்கவேண்டும்.. அவன் 'குழவி' யாக இருந்தால் முடியுமா? சிருங்காரம் நிரம்பியவளாய், காதலை வளர்த்துவதற்கு அவளது சூழ்நிலை ஒவ்வாது. பின் அவள் எப்படித்தான் இருக்கமுடியும் அங்கு? பணிப் பெண்ணாய் இருந்து சேவை செய்யத்தான் முடியும். அது அவளுக்கு ஆசைதான். பேராசைப் படாமல் பணிப்பெண்ணாகவே இருக்க விரும்பினாள்.

ஆனால் அதுவும் முடியவில்லை. அவனுடைய தேவையறிந்து செய்யக் கூடிய சிறு உதவிகளைச் செய்தாள். மாமியாரும் நாத்தனாரும் விகற்பமாகக் கருதாவாறு ஆழ்ந்த அன்புடன் கணவனுக்குப் பரிமாற ஓடுவாள். சமையற்காரப் பையன் நீர் இறைத்து வைக்கு முன், இவளே வைத்துவிடுவாள். சமையற்காரப் பையனுக்கு படிப்பில் ரொம்ப ஆசை. கொஞ்சம் கை யொழிந்தால் புத்தகம் எடுத்துவிடுவான் - காரியங்கள் குறைந்தால் சந்தோஷம்தான் அவனுக்கு. ஓடி வரமாட்டான். ராஜேசுவரியின் தலையீடு கசக்குமா?

ஆனால் எத்தனைதான் பணிகள் இருக்கும் ராஜேசுவரிக்கு? எண்ணினாற்போல சில அலுவல்களே! அதிலே சுவையென்ன? கணவன் கீழே நழுவவிட்ட மேல் துண்டை எடுத்துக் கொடுப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்தால் கூட அவன் பெருமிதம் அடைந்தான்! சாரதாம்பாளும் பவானியும் சற்றுக் கணக்காகவே அவருடைய பணிவிடைகளை ஏற்றபோது, கணவனுக்காவது தடைதயக்கமில்லாமல் பணி செய்யலாம் என்ற உரிமையும் ஆர்வமும் ஏற்படுவது இயற்கை தானே?

ஒருநாள் ரகுபதி, ஆபீஸ் போகுமுன்பு அவசரஅவசரமாக, தன் கால் நிஜாரில் பொத்தான் தைத்துக்கெண்டிருந்ததைக் கண்ட ராஜேசுவரி, "கொடுங்களேன், தைக்கிறேன் நான்" என்றாள்... அவன் மறுபேச்சின்றிக் கொடுத்தான். பேசாமல் தைத்துக்கொடுத்தாள், பெருமிதமாக இருந்தது.

ஆனால் பெருமிதம் நீடிக்கவில்லை. "அப்படி அவசரமுடன் அவரே தைக்கணுமா? நான் வெறுமனே இருக்கிறேனே - என்னிடம் கொடுத்தால் என்ன? அப்படித்தான் நான் வேலையா இருந்தாலும் கூட்பிடத் தோன்றாதா? என்னிடம் வேலை வாங்க உரிமை இல்லையா?" என்று வேதனைபட்டாள்,. "பொத்தான் தைத்துக்கொடு" என்று சொல்லக் கூடாதபடி அவளிடம் நாட்டம் குறைவா?

பவானி அன்று ராஜேசுவரிக்கு ஆறதல் அளித்தாள்!

"நான் அந்த வழியாகத் தான் வந்தேன்; அண்ணா பொத்தான் தைப்பதைப் பார்த்தேன் ஆனால் ஏனே தெரியவில்லை, கொடு என்று கேட்கத் தோன்றவில்லை; நேராக வந்துவிட்டேன். மன்னிக்குச் சட்டென்று கேட்கத் தோன்றிவிட்டது! அவனும் உடனே கொடுத்துவிட்டான் பாவம்! என்ன நினைத்தானோ தங்கைக்கு அக்கரை பார்த்தாயா என்று தோன்றியிருக்கும்! எனக்கே வெட்கமாகத் தான் இருக்கிறது - மனதில், அண்ணா பாவம் பொத்தான் தைக்கிறானே என்று தோன்றிற்று - அதை வெளியிடத் தோன்றவில்லை." என்று வேதனையுடன் சொன்னாள்.

"எங்களுக்குள்ள தொந்தம் இது! எங்கள் வளரும் அன்பின் பிரதிபலிப்பு இது! எங்கள் உறவு வலுவடைவதில் சூசனை இது!" என ராஜேசுவரி உள்ளம் பூரித்துப்போனாள்.

தங்கைக்கும் தாரத்திற்கும் ரகுபதி வைத்த போட்டியிலே, ராஜேசுவரிக்கு வெற்றி! இதுபோன்ற போட்டியை ஏற்படுத்திய மற்றொரு பெரிய நிகழ்ச்சியும் வந்தது. அது, சாரதாம்பாளுக்கும் ராஜேசுவரிக்கும் போட்டியாக அமைந்த சம்பவம்; சாரதாம்பாளின் பெற்ற வயிறு எத்தனை பெருமைக்கு இலக்காகியதோ, அத்தனை பெருமை ராஜேசுவரியின் காதல் இதயத்திற்கும் சார்ந்துவிட்டது!

உல்லாசப் பயணம் புறப்பட்டார்கள், இரண்டு மோட்டார்களில். ஒரு மோட்டாரில் பெண்கள்; மற்றொன்றில் ஆண்கள். ஆண்கள் அமர்ந்திருந்த மோட்டார் இவர்களைப் பின் தொடர்ந்து வந்தது. உல்லாசப் பயணம் போகும் குஷியில் எல்லோரும் தமாஷாகப் பேசிக்கொண்டு, வேற்றுமைகளை மறந்து அளவளாவினர். ராஜேசுவரிக்கும் குதூகலமாயிருந்தது. அந்தக் குதூகலத்தில் அவள், ரகுபதி அமர்ந்திருக்கும் மோட்டாரை அடிக்கடி பார்த்த வண்ணமிருந்தாள். தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். புழுதியில்லாத நல்ல ரஸ்தாவில் சென்றார்கள், அதனால் பின்னால் வரும் மோட்டாரை நன்றாய்ப் பார்க்க முடிந்தது.

ராஜம் திரும்பத் திரும்பப் பார்ப்பதைக் கவனித்த பவானி, "அகமுடையான் அதிலே இருக்கிறான் என்று மன்னிக்கு அந்தப் பக்கமே கண்!" என்று கிண்டல் செய்தாள். அதை ராஜேசுவரியும் சந்தோஷமாகவே ஏற்றுச் சிரித்தாள். அவளுக்கு அன்று இருந்த மனநிலையில், கணவனும் தங்கள் மோட்டாரிலே இருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று தோன்றிற்று. பவானியின் கிண்டல்களைச் சந்தோஷமுடன் ஏற்றாள்.

ஆனால் பவானி கொஞ்ச நேரம் கழித்து, "புதுசாக் கலியாணம் பண்ணிக் கொண்ட பெண் கூட மன்னியாட்டம் திரும்பித் திரும்பிப் பார்க்கமாட்டாள்" என்று சொன்னபோது ராஜேசுவரி சிரக்கவில்லை. "பவானி சொல்வது போல, என் போக்கு விரஸமாகத் தோன்றலாம் மற்றவர்களுக்கு." என்று எண்ணம் எழவே, திரும்பிப் பார்ப்பதை விட்டுவிட்டாள். பின்புறம் மோட்டார் தொடர்ந்து வருகிறதா, தொலைவில் வருகிறதா, திருப்பத்தில் வருவதனால் மறைந்திருக்கிறதா என்று பார்ப்பதையும் விட்டுவிட்டாள்.

வந்து சேர்ந்தார்கள் குறிப்பிட்ட இடத்திற்கு. ஆண்கள் அமர்ந்திருந்த மோட்டார் வந்து சேரவில்லை - இவர்கள் தான் வந்து சேர்ந்தார்கள்.

"வந்துவிடுவார்கள்" என்று நினைத்து பத்து நிமிஷம் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். கண்ணுக்கெட்டின தூரம் அந்த வண்டி தென்படவில்லை.

சாரதாம்பாள், "என்னமோ தெரியவில்லையே - நாம் போய்ப் பார்ப்போம்" என்றார்.

"வேண்டாம் . . . . வந்துவிடுவார்கள்." என்று மற்றவர்கள் சொல்லவே, சிறிதுநேரம் காத்தார்கள்.

சாரதாம்பாள் மீண்டும் "எனக்கு யோசனையாயிருக்கு; எங்கே டிரைவர்? நாம் போவோம்!" என்று திரும்பப் புறப்பட்டார்.

எல்லோரும் ஏறிக்கொண்டார்கள், வந்த வழியே போனார்கள். கால் மணி நேரம் வண்டி ஓடியபின், ஆண்கள் கார் நின்றிருப்பதைப் பார்த்தார்கள்.

இவர்கள் அணுகிச் சென்றதும், "எங்களை உயிரோடு பார்த்தீர்களே - அதுவே பாக்கியம்!" என்று ராமசேஷன் சொன்னார். அவர்களை ஒரு பெரிய ஆபத்து சூழ இருந்ததாம்!

மோட்டார் ஏதோ கோளாறினால் நின்றுவிட்டதாம். எல்லோரும் இறங்கினார்கள். டிரைவருடன் ராமசேஷன் மட்டும் மோட்டாரினருகு இருந்தார்... மற்றவர்கள் காலாறச் சுற்றிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது வழிப் போக்கன் ஒருவன், மோட்டாரையும் அது நிற்பதையும் பார்த்துக்கொண்டே அவ்வழியே வந்தான். மோட்டாரைத் தாண்டும்போது, "என்ன ஐயா அதிலே - புகையா?" என்று கேட்டானாம். அவன் சுட்டிக் காட்டிய இடம், காரின் பின்புறமிருந்த ஹோல்டால் படுக்கை. அதிலே லேசாகப் புகை எழும்பிக்கொண்டிருந்தது!

உடனே படுக்கையைப் பிரித்தார்கள். உள்ளே தலையணையின் பஞ்சில் தீ பரவியிருந்தது.

வழிப் போக்கனுக்கு வந்தனம் சொல்லிவிட்டு, ராமசேஷன் மற்றவர்களிடம் வந்தார். ராமசேஷனின் பிள்ளை, மோட்டாரில் அமர்ந்தபடியே சிகரெட் குடித்துவிட்டு வீசியிருக்கிறான்!

"பத்து நிமிஷம் ஆகியிருந்தால் போதும், தீ பரவி, பக்கத்தில் இருக்கும் பெட்ரோல் டின்னில் தாக்கி, மோட்டாரிலிருந்து வெளி வரமுடியாமல், மோட்டாரோடு கைலாசம் போயிருப்போம்! கார் கோளாறு ஏற்பட்டு நின்றதும் கடவுள் அருள்; வழிப் போக்கன் தெய்வமாக வந்ததும் நமது பாக்கியம்! பாருங்கள், பெட்ரோல் டப்பாவின் முடியை! கொட்டாங்கச்சி! இத்தனை வினைகள் இருந்தும் நாங்கள் எரிந்துபோக இத்தனை அம்சங்கள் சேர்ந்திருந்தும், தப்பிவிட்டோம்." என்றார்கள் - ஆளுக்கொருவராக.

பெண்கள் எல்லோரும் திகைத்தனர். சாரதாம்பாள், "எனக்கு என்னமோ செய்ததே மனசையும் வயிற்றையும்! நிம்மதியிருக்கவில்லையே அங்கே. என் பிள்ளைக்கு ஆபத்து என்று எனக்குத் தோன்றிவிட்டது. பாருங்கள்! இவர்கள் எல்லாரும் 'ஒன்றும் இராது' என்றார்கள் - நான்தான் துடித்துப் போய் கிளம்பச் சொன்னேன்." என்றார்.

ராஜேசுவரிக்கு மாமியாரையே பார்த்துக்கொண்டிருக்கத் தோன்றியது. "பெற்ற வயிறு அறியும் - அதற்கு ஐயமில்லை!" என்று அவளும் பிரமித்தாள்.

இதற்குள் ராமசேஷனின் பிள்ளை, "ஏதுடா, பின்னாடி ஒரு கார் வருகிறதே என்று - ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் திரும்பிப் பார்க்கமாட்டீகளோ? உங்கள் கார் முன்னாடி போகட்டும் என்று ஏன் விட்டோம்? எங்கேயாவது கோளாறு கீளாறு என்று நின்றால் தெரியாமல் இருக்கக் கூடாது எங்களுக்கு என்று" உங்களை முன்னாடி அனுப்பினோம் - நீங்கள் அந்த எண்ணமே இல்லாமல்... திரும்பியே பார்க்காமல் போயிருக்கிறீர்களே!" என்று சிரிப்பும், குறும்புமாகக் கேட்டார்.

ராஜேசுவரியின் நினைவு பவானிக்குத் தான் இருந்தது. "மன்னி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள் முதலெல்லாம் - முக்கியமான சமயத்தில் கவனிக்கவில்லை." என்றாள்.

"உங்கள் கேலிப் பேச்சுக்குப் பயந்துதானம்மா!" என்று ராஜேசுவரி சொல்ல விரும்பினாள் - ஆனால் அதற்கு அவசியம் தோன்றவில்லை. ராமசேஷனின் தாயார், "திரும்பித் திரும்பிப் பார்கிறாள் என்று நாம் அவளைக் கேலி செய்தோம்! இப்போது திரும்பிப் பார்க்காமல் போனீர்களே என்று நாம் பேச்சுக் கேட்கிறோம்!" என்று சிரித்தாள்.

## 43

அரசியல் கொள்கை முரண்பட்டாலும், கை குலுக்கிப் பேசிச் சிரிக்கும் ராஜ தந்திரிகள் போல, பெண்களிடையே நேசம் இருந்தது.

சண்டை கூடாது என்று சொல்லிக்கொண்டே தாக்கிப் பேசிக் கொள்ளும் தலைவர்கள்போல அவர்கள் உறவு மிக நுணுக்கமாயும் நாசூக்காகவும் அமைந்தது. ராஜேசுவரிக்கு அதைப் பற்றி வேதனைப்பட நேரமில்லை! கணவனுடன் ஒன்றிப் போகாத நிலைமைதான் அவளுக்கு மலையாகிவிட்டது. ராஜதந்திரிகளுக்குள் பூசல் இருக்கட்டும், ஏசல் இருக்கட்டும்... நாட்டு மக்களும் நாட்டின் வழிகாட்டியும் ஒன்றிப் போகாத நிலை எப்படியிருக்கும்? வழிகாட்டுவோன் ஆவன கவனிக்காமலிருந்தால் மக்கள் என்ன செய்வார்கள்?

நாட்டுக்கும் வீட்டுக்கும் உணவுப் பிரச்னை எப்போதும் அதிகம்தான் - முக்கியத்தும் வாய்ந்தததுதான் - ஐயமில்லை; ஆனால், கலைப் பசியினால் வாடுகிறவர்களுக்கு என்ன அவசியமோ - அதை வழங்கினால்தானே நாட்டின் பெருமை ஓங்கும்? கலையை ரசித்தே பசியாறக் கூடிய தெய்வீகத் தன்மை எல்லோருக்கும் வராது - கஷ்டம்தான். ஆனால் பெரிய மனிதர்களுடன் பழக்கம் துரைசாமிக்கு அதிகரித்திருந்ததால், இவர்களும் விருந்துகளுக்குப் போவது சகஜமாயிருந்தது; விருந்துகள் கொடுப்பதும் அவசியமாயிற்று. இட நெருக்கடியிருந்தாலும், சிறு சிறு குழுவினராக நண்பர்களைப் பிரிந்து எதிர் மரியாதை செய்துவிடும் வழக்கமிருந்தது. ரகுபதிக்கு அந்த விருந்துகளின் அம்சங்களை நிர்ணயிக்கும் வேலை; அதில்தான் அவனுக்கு எத்தனை உற்சாகம்! அடிக்கொரு தடவை சமையலறையில் வந்து நிற்பான். விசாரிப்பான். அலுக்காமல் சலிக்காமல் ஒரு நாள், 'மெனு' தயாரித்தான். வருகிறபேர் இன்னின்ன உண்டிகள் இருக்கின்றன என்பதையறிய, மேலை நாடுகளிலும், நம் நாட்டு ஓட்டல்களிலும் உணவுப் பட்டியல் தயாரிப்பது வழக்கம் - அது தான் 'மெனு'த் தாள். அது வீட்டு விருந்துக்கு அவசியமா? இல்லை. ஆனால், ரகுபதிக்குக் குஷியில் அது தெரியவில்லை. பத்துக் காகிதத்தாள்களில், ஒவ்வொன்றிலும், பாதம் கீர், பஜ்ஜி, நேத்திரங்காய் வறுவல், என்று வரிசையாக எழுதினான், அலுக்காமல்; அலுத்தவள் ராஜேசுவரி!

"சாம்பார், ரசம், கறி, கூட்டு... சாம்பார், ரசம், கறி, கூட்டு... என்று ஸ்மரணை ஜோராயிருக்கிறதே! ஸ்ரீ ராமஜயம் எழுதுகிற புண்ணியம் வந்துவிடும்!" என்று லேசாக முணுமுணுத்துவிட்டு, கையில் பிடித்திருந்த ஊதுவத்திகளை அப்படியே வைத்துவிட்டு அங்கிருந்து வந்துவிட்டாள் ராஜம்.

"என்ன, என்ன சொன்னே? சரியாகச் சொல்லிவிட்டுப் போ!" என்று ரகுபதி கூவினான். "என்ன அண்ணா?" என்று பவானி கையில் வெள்ளிக் கூஜாவுடன் வந்துவிட்டாள்.

"இந்த மெனுவும் கினுவும் வீட்டு விருந்துகளுக்கு அவசியமா என்று கேட்கிறேன்!" எனக் கேட்டாள் ராஜேசுவரி தயங்காமல்.

ராஜேசுவரி முணுமுணுத்தபோது சொன்னது வேறுதான் என்று தெரிந்துவிட்டது ரகுபதிக்கு. அப்படி முணுமுணுத்தது தவறு என்றும், மனசு நோகும்படி அதையே மீண்டும் சொல்ல வேண்டிய அவசயமில்லை என்றும் இப்பொழுது மாற்றிப் பேசிவிட்டாள் என்று சமாதானப்படுத்திக் கொண்டான் ரகுபதி. பேச்சு வளர்த்த விரும்பவுமில்லை அவன். உணவுப்

பட்டியலை முடித்து ஒவ்வொரு இலையினருகும் டம்ளருக்கு அடியில் வைத்துவிட்டு வாசலுக்குப் போய்விட்டான்.

ஒருநாள் ரகுபதி, "நான், வாங்கிகொண்டு வந்தேன் - ஆனால் நான் தின்றது ஒன்றே தான்..." என்று மூன்று நான்கு தடவை சொல்லிவிட்டான். அவன் வாங்கிவந்த இரண்டு டஜன் வாழைப் பழம், வீட்டில் எல்லோருக்கும் வழங்கப்பட்டு, கொஞ்சம் மீதமிருந்தது. அன்று மாலை, யாரே வந்திருந்தார்கள் - மீதியும் வந்தவர்ளுக்குகொடுக்கப்பட்டது. ரகுபதி அன்றிரவு சாப்பிட்டபின் இரண்டு பழம் கேட்டான் - இல்லை பழம்.

"நீ தின்றது ஒன்று தானா? எடுத்துக்கொண்டவன் இன்னும் இரண்டு தின்னக் கூடாதோ? . . . என்னமோ கொடுத்துவிட்டேன்." என்றார் சாரதாம்பாள்.

"இந்தப் பழம் நல்ல ராசி; அப்புறம் தின்னால் போச்சு என்று இருந்தேன். ங்கிகொண்டு வந்தவனுக்கு ஒட்டவில்லை,"என்று ரகுபதி மீண்டும் சொன்னான். ராஜேசுவரிக்கு அவன் குற்றம் சாட்டியது பிடிக்கவேயில்லை. "ஐயோ, பிரமாதம்! என்னவாம் அதனாலே? முந்தி ஓருநாள் ஊரில் அம்மா பாடுபட்டு இட்டிலிக்கு அரைத்தார் - மறுநாள் வார்க்கும்போது, ஈரோடிலிருந்து யாராரோ வந்து விட்டார்கள். எல்லோருக்கும் இட்டிலி கொடுத்தப்புறம், அம்மாவுக்கு மிஞ்சியது இட்டிலிப்பானை தான்!" இதுபோல எத்தனையே தடவைகள்! அதையெல்லாம் சொல்கிறார்களா? கடவுள் படைத்த பழம்; தோட்டக்காரன் பயிரிட்டு, கடைக்காரன் விற்பனை செய்கிறான் - காசைக் கொடுத்து வாங்கிக் கொண்டு வந்தீர்கள்! சும்மாச் சும்மா சொல்கிறீர்களே." என்று கேட்டுவிட்டாள் ராஜேசுவரி.

"மன்னி அம்மாவை நன்றாகத் தாஜா பண்ணுகிறாளே" என்றாள் பவானி. சாரதாம்பாளுக்கு, மருமகள் கேட்கும் கேள்வி ஆச்சரியமும் சந்தோஷமும் அளித்தாலும், மைந்தனின் முகம் சுண்டிப் போனது பிடிக்கவில்லை.

"சும்மா, வேடிக்கைக்குத் தான் கேட்கிறான் . . . அதனால் என்ன, எனக்குக் கோபமா?" என்றாள்.

"நானும் வேடிக்கையாகத்தான் சொன்னேன்." என்று சிரித்து மழுப்பினாள் ராஜேசுவரி வேடிக்கையாகவே ரகுபதி கேட்டிருந்தாலும், அந்த அற்ப விஷயத்திற்குத் தானாக கேட்டிருக்கவேண்டாம். "நான் வாங்கி வந்தேன் - எனக்கு ஒட்டவில்லை." என்று சொன்னபோது அதிலே என்ன வேடிக்கையிருந்தது? ஒன்றுமில்லை!

நான் போட்டபோடு சரியான போடு! அவர் முகமே சொல்லிவிட்டதே,' என்று பெருமிதம் அடைந்தாள் ராஜேசுவரி. தீனி விஷயத்தில் ரகுபதி இன்னும் அக்கரைக் குறைவாயிருக்கவேண்டும் என்று ராஜேசுவரி எண்ணுவது தீவிராமயிற்று.

"இன்றைக்கு டீ வேண்டாம் - கோக்கோ கொடு!" என்று சமையற்பையனிடம் சொல்லும் நாக்கு, "இன்று ஒரு பாட்டுக் கச்சேரிக்குப் போகலாமா?" என்று கேட்கவில்லை. மாறுதல் மனதுக்கும் வேண்டும் - நாக்குக்கு மட்டும் போதுமா?

எத்தனையே நண்பர்கள் அவனுக்குச் சென்னையில் இருக்கிறார்கள். "மனைவியை அழைத்துப் போகிறேன்." என்று சொல்ல ஒருநாள் கூடத் துணியவில்லை ரகுபதி.

"மிஸ்டர் ஜான் வீட்டில் வா வா என்று அழைக்கிறார்களே - போய் வாருங்களேன் அம்மா எல்லோரும்." என்று ஒருநாள் ரகுபதி சொன்னான். ஜான் அவனுடைய நெருங்கிய நண்பர்.

"அதுகள் வீடுகளுக்கு நான் ஒன்றும் வரமாட்டேன்! நீ போகிறாயே, போதாதா? வேணுமானால் நீ போ அவளைக் கூட்டிக்கொண்டு." என்று சொல்லிவிட்டார் சாரதாம்பாள்.

"சரி" என்று சொல்ல அப்போதுகூட ரகுபதிக்குத் துணிச்சல் இல்லை... அசட்டுச் சிரிப்புடன் சும்மா இருந்தான்!

கணவனின் கோழைத் தனம் அவளுக்கு உறைத்தது. பெரியவர்களுக்கு மத்தியில் இருக்கு நினைப்புடன், அடக்கமாகப் பழக வேண்டியதுதான் முறை என்று அவளுக்குத்

தெரியாதா? தெரியும் தனிக்கு குடித்தனம் நடத்தின இடத்தில்போல இங்கு இருக்கமுடியாது... இருக்கவும் வேண்டாம். அடங்கி வாழ்வதிலே இன்பம் அதிகம்தான். ஆனால் மனைவி என்னும் ஸ்தானத்தின் அழகும் இனிமையும் பெருமையும் அவளுக்கு அவன் வழங்கவேண்டாமா? ஆணின் அன்பு ஆளும் அன்பு. பெண்ணின் அன்பு வணங்கும் அன்பு. இதுதான் கடவுளின் சட்டம். இவள் வணங்கிப் பணிந்து அன்பு காட்டத்தயார். அவன் ஆள வேண்டும் அவளை; அதுதான் அவள் விருப்பம்.

அன்பின் ஆட்சி ரகுபதியிடம் பெயரளவில் இருந்தது. அவனுக்கு அவளிடம் அன்பு நிறைய இருந்தது. ஆனால் அவனை அன்புடன் பாலிக்கவில்லை. அன்பு வழங்கவில்லை.

"என் வாழ்க்கைத் துணைவி." என்று ஏற்றிருந்தான். அவள் தன்னுடைய மனைவி என்று சொல்லும்படி அவளை வைத்திருக்கவில்லை. காதலி என்று கருதுகிறவனாக உல்லாசமாயும் இருக்கவில்லை. ஆசைக்குரியவள் என்று மட்டும் கருதினான்.

பற்றாக் குறையை நகைச் சுவையுடன் பலவிதக் கோணங்களில் பார்த்து கவலை மறக்க முடியாதா? முடியும்! தமிழ்நாடு சமாளித்தது பற்றாக் குறைக்கொடுமையை. உணவுக் கட்டுப்பாடுகள், க்யூ வரிசை, இடநெருக்கடி, விலைவாசி ஏற்றம் என்று வந்த இன்னல்களையெல்லாம் சித்திரங்களா_கவும் கதைகளாவும் கட்டுரைகளாகவும் விகடத்துணுக்குகளாகவும் மாற்றி அவற்றைப் பார்த்தும் கேட்டும் ரகசித்தும் சிரித்தும் பூரித்தார்கள் தமிழர்கள்.

வீட்டில் கலையம்சத்தைப் பேண முன் வரவில்லை ரகுபதி. உணவுப் பிரச்னையைத் தான் மறக்கவில்லை; கலையம்சத்தை மறந்தே போனான். ராஜேசுவரியின் கலையுணர்ச்சியும் இசையார்வமும் வெளிப்படுவதைப் பற்றி அவன் அக்கரைப்படவில்லை. வீட்டில் தாயார் செய்த பணியாரங்களைப் பற்றி விமரிசனம் செய்வதிலும், இன்னின்ன உணவுப் பண்டங்கள் இன்னின்னார் எப்படிச் செய்தார்கள் எப்படிச் செய்யவேண்டும் என்று கவனிப்பதிலும் அவன் அக்கரை இருக்கும். அதை ராஜேசுவரி வெறுத்தாள்.

"நல்லதோர் வீணை செய்தே அதனைப் புழுதியில் எறிந்திடலாமோ? என்னைச் சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய்! வல்லமை தாராயோ இந்த மானிலம் பயனுற வாழ்வதற்கே?" என்று ஒரு கவி பாடினார். அவருடைய கலையுள்ளம் பாடிற்று. ராஜேசுவரியின் கலையுள்ளமும் அப்படியே வாடிற்று.

"பாட்டு, படிப்பு, அழகு, குணம், அன்பு எல்லாவற்றிலும் சிறப்புடன் விளங்கினேன் நான். என்னுடைய சிறப்புகள் எல்லாம் மெருகிட்டுக் கொள்ளவில்லை... மங்கி மறைந்து அழிந்து வருகின்றன. என் உயர்வுகளை ஒடுக்கும் வாழ்வு எனக்கு வேண்டாம். நான் பொம்மையாக இருக்கமாட்டேன்." என்று துடித்தது அவளிடம் இருந்த ஆற்றல். சக்திக்கும் திறமைக்கும் தகுந்தவேலை செய்வதில்தான் உற்சாகம் ஏற்படும். அந்தச் சக்தியையும் மீறிய வேலை செய்து, வெற்றி காணுவதில்தான் பெருமையுண்டாகும். இந்த ஆற்றலும், முயற்சிகளும் சாதனையும்தான் ஒவ்வொரு உயிர் அணுவின் வளர்ச்சிக்கும் மூலம். இந்த ஆற்றலும் நாட்டமும் இல்லையெனில் உலகம் இயங்காது. கடல் பெரிதானாலும் குடிநீராக உதவாது... சாதனைகள் பலவற்றுக்கு உதவும். ஆனால் தாகம் என்று தவிக்கும்போது, அதன் பெருமையெல்லாம், சிற்றுற்றின் உயர்வுக்கு ஈடாகாது.

புக்ககம் அந்தஸ்தில் உயர்ந்து பெரிய மனிதர்கள் கோஷ்டியில் சேர்ந்தது - ஆனால் ராஜேசுவரியின் சுதந்தர ஆர்வமும் தாகமும் கலைப் பசியும் தணிய அங்கு ஒன்றுமே இருக்கவில்லை. இசையறிவு வளர உதவும் அம்சம் ஏதுமில்லை. பவானியும் ரகுபதியும் மதிக்காத பாட்டு என்று எண்ணம், இந்தப் புக்ககச் சூழ்நிலையில் வலுத்துக் கிடந்தது. பாடுவதற்கு ஆர்வமோ விருப்பமோ இல்லை அவளுக்கு. சமையலும் கலைதான் - ஆனால் அந்த சமையற்திறனைக் காட்டவும் வகையில்லை. சமையல்காரன் இருந்தும், முக்கியமான காலைச் சமையலை சாரதாம்பாள்தான் செய்ய விரும்பினார். "அது மட்டும் நான் யாருக்கும் விடமாட்டேன். அப்புறம் மற்றக் கார்யங்கள் உங்கள் பாடு." என்று சொல்லிவிட்டார். மாலையில், எளிமையான உணவு - அதை பரிசாரகனே சமைத்தான். அண்டை அயல்

போகவும், சினிமாவோ, பாட்டுக்கச்சேரியோ போகவும் நண்பர்கள் வீடு செல்லவும், நண்பர்களை வரவேற்கவும் மாலைப் பொழுதுகள் சரியாக இருக்கும். பவானியையும் ராஜேசுவரியையும் அழைத்துக்கொண்டு போவார் ஸ்ரீமதி ராமசேஷன். சிலசமயம் சாரதாம்பாளும் செல்வார். ஆனால் ரகுபதிக்கு ராமசேஷன் பிள்ளையுடன் பழக்கம் அதிகமில்லை. ஆதி முதலே அப்படி இருந்துவிட்டான். ராமசேஷனின் நாட்டுப் பெண் சிலசமயம் இவர்களுடன் வருவாள். ஆனால் பல சமயங்களிலே அவள் வருவதில்லை. கல்லூரி அலுவலும் அதனையொட்டிய விசேஷ நிகழ்ச்சிகளிலே பங்கும் அவளுக்கு அதிகம். பாட்டுக் கச்சேரி, சினிமா என்று விச்ராந்தியாகப் போய் மகிழவேண்டும் என்றால், அவளும் அவள் கணவனுமாகப் போய் வருவார்கள். ஆதலால் கிடைத்த அவகாசத்தில் எத்தனை இல்லற இன்பம் நுகரமுடியுமோ அத்தனையையும் இழுத்துக்கொண்டு ஆனந்த தம்பதிகளாக இருந்து வந்தார்கள். புருஷன் மனைவி என்றால் அப்படி இருப்பதுதான் அழகு என்று பலரும் பாராட்டும்படிதான் இருந்து - நெற்றி சுருங்கும்படி இல்லை. அவர்களுக்கு மக்கள் இருவர். மணிமணியான குழந்தைகள். அந்தக் குழந்தைகள் வளர்ந்த நேர்த்தியும் பாராட்டுக்கு உகந்தது. குடும்பத்திலே ஸ்ரீமதி ராமசேஷன் தான் பொறுப்புள்ள தலைவி; ஆனால் அவர்களின் மருமகளுக்கும் உபதலைவிஸ்தானம்.

ராஜேசுவரிக்கும் அதையெல்லாம் கவனிக்க கவனிக்க, தனக்கும் அத்தகைய இல்லற வாழ்வு ஏன் கிடைக்கக் கூடாது என்ற எண்ணம் வலுத்தது. கிடைக்கக்கூடிய வாழ்வுதான். கிடைக்காது. அவளைச் சூழ்ந்துள்ளவர்களின் மனப்போக்கு.... முக்கியமாக..... ரகுபதியின் நடுநிலையமைதி, இடமளிக்காது.

"அண்ணா எப்படி அடங்கிவிட்டான் இப்போதெல்லாம்! அம்மாடியோ! முந்தி அவன் என்னைப்படுத்தின பாடுண்டே . . . எனக்குக் கலியாணம் நடக்க நாலுமாசம்தான் பாக்கி; என்னை அடிக்காத குறை - கை ஓங்கிவிட்டான்," என்று பவானி ஒருநாள் ராமசேஷன் மனைவியிடம் சொன்னாள்.

ராஜேசுவரி, தான் பார்த்திராத அந்த நாளைய ரகுபதியை நினைத்துப் பார்த்தாள். அன்று போல் இன்றும் இருப்பானேயாகில்?

"அம்மா! நாங்கள் இன்று எக்ஸிபிஷனுக்குப் போய் வருகிறோம்." என்று சொல்லிவிட்டு, "உம், கிளம்பு - நாழியாக்காதே" என்று அவளை அதட்டி, கையைப் பிடித்து இழுத்துச் செல்லாத குறையாக அழைத்துப் போவான்! மனைவி மேலும் கோபதாபம் வரும்; வந்தால் இரண்டு கத்துக் கத்திவிட்டு "என்னமோ சொல்லிவிட்டேன், போ . . . உன்மேல் கோபமில்லை." என்று அன்பும் வழங்குவான்.

இப்போதோ?

அவனுடைய அமைதி எப்படி அவளை வருத்துகிறது! அவள்மேல் வரும் சினத்தை மனதில் இருத்தி. "இப்படியாகிவிட்டாயா நீ? இருக்கட்டும்." என்று வாயை மூடிக்கொண்டிருந்துவிடுகிறான்! புருஷன், ஆண்மையுடன், ஆளும்தன்மையுடன், கட்டளை இட்டு, பணிவிடை ஏற்று உரிமை கொண்டாடினால்தான் அவனுக்கும் சோபை; மனைவிக்கும் சோபை. புருஷன் அதிகாரம் செய்யக் கூடாதென்றும், மனைவி அவனுக்கு அடிமையல்ல என்றும் பேசும் பெண்கள் இருக்கலாம்; ஆனால் ராஜேசுவரி விரும்புவது அவனுடைய இந்த நல்லத் தனம் அல்ல. அக்கறையும், உரிமையும் புலப்படுத்தினால் போதும்; அவளுடைய ஆசைகளை அறிந்துகொண்டு நிறைவேற்ற முயன்றால் போதும்; விஷமம் செய்யாத குழந்தையைவிட, விஷமம் செய்யும் குறும்புக் குழந்தைதான் பெற்றோருக்கு ஆசையை ஊட்டுகிறது. கண்ணனுடைய பால லீலைகளில் பாதி விஷமம்தானே! அதுபோலவே, கொண்டவரும் ஆண்டால்தான் உரியவருக்கு இன்பம்.

மனிதனுக்கு, உடலுக்குத் தேவை: உண்ண உணவு; உடுக்க உடை; இருக்க இடம். உள்ளத்திற்கும் தேவைகள் மூன்றுதான். முதல் தேவை சூழ்ந்திருப்பவரின் அன்புக்கு உரியவராய் இருக்க வேண்டும் தனக்கும் சில பெருமைகள் உண்டு; தன்னிடமுள்ள சில உயர்வுகள் உள. அவற்றைப் பிறரும் உணர்கிறார்கள் என்று அவன் நினைக்க வேண்டியது

இரண்டாம் தேவை. தனக்கும் பிறருக்கும் இடையே தொந்தம் உறுதிதான், பிணைப்பு வலிவுதான் என்று அவன் காணவேண்டியதுதான் மூன்றாம் தேவை.

இந்த மூன்று தேவைகளில் எது குறைந்தாலும் உள்ளம் சோர்ந்துவிடும். ராஜேசுவரிக்கோ, இந்த மூன்று தேவைகளும் இருந்தன. எந்த அம்சமும் நிறைபெறவில்லை.

ஆயிரம் கண்கள் கொண்டதுதான் ஆண்மயில்; தோகையெல்லாம் கண்கள் தான்; ஆனால் அதற்குப் பார்வை இரண்டே கண்களில்தான்; . மற்றவையெல்லாம் கண்கள் தான்; ஆனால் அதற்குப் பார்வை இரண்டே கண்களில்தான். மற்றவையெல்லாம் பார்வை யில்லா தவை தான். அதுபோலவே, ராஜேசுவரியின் சூழ்நிலையிலும் அழகு இருந்தது. பயன்?

முன்பு புக்ககத்தில் பழகியதற்கும் இப்போது பழகியதற்கும் எத்தனை மாறுதல்! சிவனடியார்க்குப் பணிந்து சிவபக்தர் சிறுத் தொண்டர் செல்வன் சீராளனை மனமுவந்து கொன்றார். பக்தி வெறியில் செய்தார் அப்படி. ராஜேசுவரியும் புக்ககத்தின் மீதுள்ள பக்தி வெறியினால் அருமையான இசைச் செல்வத்தைக் கொன்று கொண்டாள். சீராளன் உயிருடன் மீண்டதுபோலவே, அவளுடைய இசைச் செல்வமும் மீண்டது.

அந்தப் படலம் முடிந்தது. மைந்தனைப் தேரடியில் இட்டு ரதத்தை ஓட்டி, பசுவிற்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழனைப் போல நியாயவெறி ஏற்பட்டது அவளுக்கு. கிடைத்தற்கரிய புகழ்ச் செல்வத்தை நியாயத்திற்குப் பலிகொடுத்தாள். "நியாயம் வேண்டும்' என தனக்குள்ள விடுதலை உரிமையை வெளியிடுகிறவளாக விளங்கியதனால், அவளுக்கு இழுக்கு வந்தது; புகழ் மறைந்தது.

இந்தப் படலமும் ஓய்ந்தது. இப்போது அவளுக்கு ஏற்பட்டிருந்தது சுதந்தர வெறி!

"சுதந்தரம் வேண்டி நின்றார் பின் வேறொன்று வேண்டுவரோ?" என்று வீறு உண்டாகிவிட்டது அவளுக்கு. எப்போது உண்டாயிற்று?

"இங்கே நம்மகத்தில் நாட்டுப் பெண்ணாக இருக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் நாம் வாயை மூடிக்கொண்டிருப்பது போல எந்த மாமியார் நாத்தனார் புருஷன் அமைவார்கள்?" என்று சாரதாம்பாள் நினைத்ததை உணர்ந்து தான்! சமையல்காரனும், வேலை வாங்காத புருஷனும் குறை சொல்லாத மாமியாரும், ஆதரவான மாமனாரும் வாய்க்க எத்தனையோ தவம் செய்திருக்க வேண்டுமாம்! "இதெல்லாம் வேண்டாம்! நான் ஏங்குவது சுதந்தரமான வாழ்வு! என் உள்ளம் நாடும் அம்சங்களை நான் நிறைவேற்றிக்கொடுக்க எந்த சுதந்தரம் வேண்டுமோ அந்த சுதந்தரம்! மணவாழ்வின் உயர்வுகளை அடைந்து மனைவியாகத் திகழ்ந்து ஒளிர எனக்குத் தேவையானது சுதந்தரம்! நான் பொல்லாத மருமகளாகிவிட்டேனே என்றும், நான் விடுதலை விரும்புவது தவறுதானோ என்றும் அல்லும் பகலும் தவிக்கிறேனே - இந்தத் துன்பத்திலிருந்தும் விடுதலை வேண்டும்." என்று அந்தரங்கம் அரற்றியது.

சக்கரவர்த்தினி சீதா கானகம் விரும்பினாளே, ஏன்? கானகம் ஆயினும், காதல் வாழ்வு ஈந்த இடம் அது. கணவனின் அன்பிற்கு ஏகபோக உரிமையுடன் இருக்க அந்தக் கானகம்தான் உதவியது. அரண்மனையில் சக்கரவர்த்தினியாக வாழ்ந்தபோதும், அந்த ஆரணியவாச இன்பம் அவள் மனதைவிட்டு அகலவில்லை. ராஜேசுவரிக்கும் தனிக்குடித்தனம் செய்த ஊரை மீண்டும் போய்ப் பார்க்கவேண்டும், அங்கே அவள் வாழ்ந்த வீட்டை கண்டு வலம் வர வேண்டும், அங்குள்ள நண்பர்களைக் காணவேண்டும் என்று ஒரு புறம் ஆசை அரித்தது. எங்கோ, என்றோ கண்ட இன்பக் கனவு மீண்டும் வராதா என்று ஏங்கினாள். கணவனும் மனைவியுமாக மன நிறைவுடன் வாழ்ந்த அந்த வாழ்க்கையை எண்ணி நெக்குருகினாள். பெற்றோரும் மற்றோரும் அளிக்கமுடியாத மனநிறைவைத் தங்கள் தனி வாழ்வில்தான் காண முடியும் என்று கண்டுகொண்டாள் அவள். "இந்த இடத்தில் நாம் இருக்கும்போது, நாம் இப்படித் தான் இருக்கமுடியும்; இதற்குமேல் ஆசைகள் பட்டுப் பயனில்லை." என்று நினைப்பவனாகக் கணவன் விளங்கினால்..... அவள்

செய்யக் கூடிய முடிவு வேறு என்னதான் இருக்கும்? "சுதந்தரம்! விடுதலை!" என்று துடித்தாள் ராஜம்.

ஆண்தான் பெண்ணை உருவாக்குகிறான். முக்கியமாக, கணவன்தான் மனைவியின் இயல்புகளை வார்ப்படம் செய்கிறான். பிறப்பு வளர்ப்பு எல்லாம் பெண்ணிடம் அமைத்திருக்கும் ஒரு கலவையான இயல்புக்கு உருவமளித்து, மனைவியாக இயக்கி விளம்பரப்படுத்துகிறவன் கணவன்தான். சில கணவன்மாரின் திறமையினால்..... திறமைக் குறைவாலுங்கூட ...... அடையாளம் காணமுடியாதபடி மாறிப்போகும் பெண்கள் உண்டு. பிறப்பு வளர்ப்பு என்று அம்சங்கள் ஏற்படுத்தியிருக்கக்கூடிய கோலங்களை அழித்துப் புதுக் கோலமிட்டிருப்பான் கணவன். சில ஆண்கள் போடும் கோலங்கள் அற்புதச் சித்திரங்களாகலாம், சிலபேர் போடும் கோலங்கள் வெறும் கீறல் கோடுகளாகும்!

"ஆண் தாயை இழப்பதில்லை; தாயார் போனால் அவள் இடத்தை மனைவி நிரப்புகிறாள்" என்று மனைவி என்பவளுக்கு உயர்வளித்துச் சொல்வார்கள் சிலர்.

"அன்னைக்கு அடுத்தவள் இல்லாள்" என்று சுருக்கி இங்கிதமாகச் சொல்லுகிறவர்கள் சிலர்.

"தாயைப் போல தாரமும் இருக்கமாட்டாள்" என்று மனைவியை இறக்கி, தாயை தூக்கி வைத்துப் பாராட்டுகிறார்கள் பலர்.

"அன்னை ஒருத்தி தான் - அவள் போனால் கிடைக்கமாட்டாள். மனைவிமார் எத்தனைபேர் வேணுமானாலும் கிடைப்பர்" என்று மனைவியை எத்தனை தாழ்த்திட முடியுமோ அத்தனை தாழ்த்திச் சொல்வர் சிலர்.

ஒவ்வொரு விளக்கமும், அவரவர் அனுபவங்களைப் பொருந்தியது. இந்த நான்கு விளக்கங்களும் உண்மையாகவே இருக்கவேண்டும்.

ரகுபதி, "அன்னைக்கு அடுத்தவள் இல்லாள்" என்று நினைத்தான்.

"தாயைப் போல தாரமும் இருக்கமாட்டாள்" என்றே கணவன் நினைப்பதாக ராஜேசுவரி கருதினாள்.

"தாயார் புருஷனுக்குத் தானா? மனைவிக்கும் உண்டல்லவா பெற்றவள்?" என்று யோசித்தாள்.

கணவன் வாழ்வுடன் பிணைப்புண்ட மனைவியே அக்கறைக் குறைவாயிருப்பாளா? ரொம்ப ரொம்ப சரி; அப்படியானால், தாயைப் போல மாமியார் இருப்பாரா? மாமியாரைப் பக்தி செய்வதும் மாமியார் அருள் செய்வதும் நிறைய இருக்கட்டும். என்னதான் அந்த பக்தியும் அருளும் பெருகி வழிந்தாலும், அந்த மாமியிடம் தாய்த்தன்மை இருக்குமோ?

கணவனுக்கு வரும் தீங்கு மனைவியைப் பாதிக்கிறது. மனைவியின் வாழ்வு தாழ்வுகள் கணவனால் ஏற்படுகின்றன. அதனால் தான் மனைவியின் மனநிலைகளும் நிலையில்லாத அன்புகொண்டு சலனமடையும். அன்னையின் அன்பைப்போல அசையாத பாசமல்ல! இவ்வாறு விளக்கம் கூறுகிறார்களோ?

கூறட்டும். அது உண்மையாகவே இருக்கட்டும். கணவன் மனைவி உறவு மட்டமாகவே இருக்கட்டும். ஆனால் மாமி மருமகள் உறவு? கணவனிடம் மனைவி காட்டும் பாசமே குறைவு என்றால் மருமகளிடம் மாமி காட்டும் ஆசை எத்தனை சதவிகிதமாகும்?

அன்னை புருஷனுக்கு மட்டும்தானா? இல்லை, மனைவிக்கும் உண்டு. அந்த மனைவி தன் தாயின் அன்பை நினைந்து ஏங்கமாட்டாளா?

கண்திட்டம், கைதிட்டம் என்று பெருமையுடன் பக்ஷண பணியாரமும், அப்பளமும் செய்வதில் குறி பிசகாத சாரதாம்பாளுக்கு, தோய்த்திருக்கும் தயிர் மோர் திட்டம் தெரியாமல் போவதுண்டு! ஒரு நாள் மோர் சிலுப்ப மத்து எடுத்தாள் ராஜேசுவரி.

"வேண்டாம், இப்படியே ஊற்றுகிறேன்." என்றார் சாரதாம்பாள்.

"போதாதேம்மா!" என்றாள் ராஜம். "போதும்" என்று மாமியார் சொன்னபோது ஆச்சரியமாகத் தான் இருந்தது.

தயிரின் பெரும்பகுதி செலவாயிற்று; கடைசியில் சாப்பிட்ட மூன்றுபேர் பாக்கி: ஆனால் கால்வாசித் தயிர்தான் மிச்சம். அதைச் சிலுப்பி ஊற்றினார் சாரதாம்பாள்.

இதுபோன்ற சம்பவங்கள் சொற்பம்தான் என்றாலும், ராஜேசுவரிக்கு அந்த 'வஞ்சனை' உறுத்திற்று. தீனி விஷயத்திலே அக்கரையும் நாட்டமும் கூடாது என்று நினைக்கும் இயல்புடைய ராஜேசுவரியின் கருத்துக்களைச் சிதைத்துவிட்டன, இந்த அற்பமான நிகழ்ச்சிகள்.

"சை - தீனி விஷயத்தில் கூடவா எனக்கு சம உரிமை கிடையாது இங்கே? வேட்டகத்தில் மாப்பிள்ளைக்கு நடக்கும் மரியாதை ஒரு தினுசு! நாட்டுப் பெண்ணுக்குப் புக்ககத்தில் நடக்கும் மரியாதை இந்த வகை! இந்த வேற்றுமைகூட தேவையா ஆணுக்கும் பெண்ணுக்கும்? இல்லை - ஆணுக்கும் பெண்ணுக்கு மட்டும் அல்ல! பெண்ணுக்கும் மாற்றுப் பெண்ணுக்கும் கூடத்தான்!" என்று வெறுத்துக் கொண்டாள்.

அந்த வெறுப்பு, பிறகு தன் மீதே திரும்பும்படியும் நினைத்துக் கொள்வாள். "சே, நான் கூட இந்த அற்பச்சிறு விஷயத்திலே குறை சொல்லுகிறேன். பாட்டுப் பாட முடியவில்லை என்ற பெரிய விஷயத்திற்காக வருந்திய நாள் போய்விட்டது. அந்த மனம் போய்விட்டது. சரியாகச் சாப்பாடு கிடைக்கவில்லை என்று அற்பமாக நினைக்கும்படியாச்சா? நான் ஏன் இப்படி சிறப்பழிந்து போனேன்?" என்று அலுத்துச் சிறுத்துக்கொண்டாள்.

இத்தகைய உணர்ச்சிப் போர்களே அவளுடைய மனசை நிறைந்தன. மனப்போர் தான் அவளுடைய சூழ்நிலையை நிறைத்தது.

ராஜேசுவரியிடமிருந்த தெய்வத்தன்மையே நிலை பிழகி, மானிடத் தன்மையை அடைந்துவிட்டதே . . . அந்த மானிடத் தன்மை நிலை சறுக்கி சரிந்து விழ எத்தனை நாழி? ராஜேசுவரியின் சிந்தனையிலே கொடூரம் புகுந்தது.

"எனக்கு விஷம் வாங்கிக் கொடுங்கள்" என்று கண்ணீர் சிந்தினாள் கணவனிடம். காரணங்கள் விளக்கவில்லை. வாழ்வு சுமையாகிவிட்டது என்ற துன்பத்தை மட்டும் வெளியிடத் தான் அவளுக்குத் துணிவு.

"பாகிஸ்தான் கேட்கிறாயா, ராஜம்? ஏன் இப்படி விஷம் கக்குகிறாய்? என் பெற்றோரைக் கொன்றுவிடும் விஷம் கக்குகிறாயே!" என்று ரகுபதி கேட்டான்.

"ஐயோ! நான் தெய்வப்பிறவி எனக் கருதியவர், கொலைபாதகி என்கிறாரே! நான் இத்தனை கொடியவளா?" என விம்மினாள் ராஜம். வெளியில் படுத்திருந்த வர்கள் விம்மலொலியைக் கேட்டுவிடுவார்களோ என்ற பீதியும் இருந்தது. "இப்படிக் கேட்கிறீர்களே? என்ன அர்த்தம்? நான் எதனால் கட்டுப்பாடு வெறுக்கிறேன்? என் அற்ப ஆசைகளை நிறைவேற்றினால், நீங்கள் உங்கள் பெற்றோரை முட்டுக் கட்டையாகக் கருதாமல் என் கணவனாகத் திகழ்ந்தால், நான் வேறு என்ன ஆசைப்படப்போகிறேன்? என்னைப் பழிக்காதீர்கள்! குற்றம் எனதல்ல, உங்கள் பெற்றோர் குற்றமும் அல்ல குற்றவாளி நீங்களே." என்றெல்லாம் கதற அவளுக்கு முடியவில்லை.

விம்பிவிட்டு சற்று சமாளித்துக்கொண்டு, "நான் பாகிஸ்தான் கேட்கவில்லை; இந்த உலகத்தில் நமக்கு வேறு இடம் கிடையாதா? எங்காவது போய்விடுவோம்! கூழ் குடித்தாலும் சுதந்தரமாகக் குடிக்கணும் என்றே சொல்லுகிறேன். காந்திஜி சுதந்தரம் கேட்கிற மாதிரி கேட்கிறேன்." என்றாள் ராஜம்.

"நானே ஒழிந்து போகிறேன் - உனக்குச் சுதந்தரம்தான்." என்று வெடித்தான் ரகுபதி.

அழவில்லை ராஜேசுவரி. "எக்கேடு கெட்டுப்போ என்றுதான் நீங்கள் எனக்கு சுதந்தரம் கொடுத்தாச்சே! கொஞ்சமாவது அக்கரை அபிமானம் இருக்கிறதா? நான் எதற்கு ஒரு

மனைவி என்று இருக்கிறேன்! இலவசமான வேசியாக இருக்கிறேனே - அதுதான் நான் கண்ட பலன்!" என்று கண்ணீர் கூட சிந்தாமல் பதிலளித்தாள்.

"என்னதான் செய்யணும் நான், சொல்லிவிடு! வேசி, தேவடியாள் என்று உனக்குப் பட்டம் வேண்டாம் என்னால்! மனைவி என்றுதான் நான் உனக்கு மதிப்புக் கொடுக்கிறேன். அதுகூட உனக்கு இஷ்டமில்லை, நான் புருஷன் என்று நினைக்கவே பிடிக்கவில்லை என்றால் இத்தனை நாள் இருந்ததுபோல் பிரிந்தே இருப்போம்." என்றான் ரகுபதி.

"என்னால் இயன்ற ஆதரவு கொடுப்பேன்" என்று அன்று கழறிய கணவன், இன்று "என்னால் இயன்றதைத்தான் வழங்குகிறேன் . . . இதற்குமேல் ஆதரவு எதிர்பாராதே" என்று தானே சொல்கிறார்?

ராஜேசுவரிக்குக் கண்ணீர் சுரக்க மறுத்தது. உள்ளம் குழைய மறுத்தது. "என்னை அனுப்பிவிடுங்கள்! எனக்கு இங்கே இருந்தால் பைத்தியமே பிடித்துவிடும்." என்று உறுதியாகச் சொல்லிவிட்டாள்.

"உன் இஷ்டம்" என்று ஆமோதித்து விட்டான் ரகுபதி, அவனுடைய தாராளமே அவளை அணு அணுவாக வதைக்கிறது என்பதை அறியாமல்.

## 44

காரண காரியமில்லாமல், மூன்றே மாதங்களுக்குள் மீண்டும் பிறந்தகம் வந்துவிட்டாள் ராஜேசுவரி.

அவள் வர விரும்புகிறாள், வருவாள், வருகிறாள் என்று தகவல்கள் வந்தபோதே விசாலத்திற்கு சற்று கலக்கமாகத்தான் இருந்தது. மகளுக்குப் பொல்லாங்கு வராமல் தடுக்க என்ன வழி கவலைப்பட்டாள்.

"சரி, வா, உன்னை இங்கு லேடி டாக்டரிடம் காட்டி, குழந்தை பிறப்பதற்குச் செய்யும் ஆபரேஷனைச் செய்விக்கலாம் என்று எனக்கும் ரொம்ப நாளாக யோசனைதான். இப்போது உன் உடம்பு தேறியிருக்கும் - அதனால் செய்யலாம்." என்று எழுதினாள் மகளுக்கு.

"ஏது, திடுமென வருகிறாள்?" என்று யாராவது கேட்டாலும், இதே காரணம் சொல்ல அவள் தயாராயிருந்தாள். தென்பாயிருந்தது.

குழந்தை என்று ஒன்று பிறந்துவிட்டால், இல்லற வாழ்வு சுவைக்கும்; தம்பதிகளின் அன்பு வலுவடையும். பாட்டி தாத்தாவுக்கு, பேரன் பேத்தி என்று அன்பு வளரும்; குடும்பத்தில் இன்பம் தழைக்கும். இது விசாலம் அறியாததா? அவள் ராஜேசுவரிக்கு எழுதிய யோசனை பொய் அல்ல!

ராஜேசுவரி வந்துவிட்டாள். அவளிடம் தென்பட்ட கடுமை விசாலத்தைத் திகைக்க வைத்தது! "உனக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை என்று எல்லோருக்கும்தான் தெரியும். மாப்பிள்ளை என்னதான் செய்யமுடியும்? கிடைத்தவேலை இது தான்! யார் குற்றம் இது? உன் மாமனார்தான் முதலில் இருந்தார் அங்கு- அப்புறம் போனது நீங்கள்தான். என்னமோ உங்கள் தனிக்குடித்தனத்தில் அவர்கள் வந்து உட்கார்ந்துவிடவில்லையே.... நீ எப்படிக் குறை கூற முடியும்? உன் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்று ஏற்றுக்கொள்ளவேணும்." என்று ஒரு நாள் சற்று துணிவுடன் சொல்லிவிட்டாள்.

ராஜேசுவரிக்கு அன்னைமேல் கோபமாகப் பொங்கிவந்தது. "உனக்கு ஆரம்பத்திலிருந்தே சுதந்தர வாழ்வு! நீ எப்படி அறிவாய் புக்ககத்தின் வெம்மையை?" என்று அன்னை மேலும் பொறாமை பொங்கிற்று.

"சொல்லமாட்டாயோ நீ? பதினைந்து வயதுக்கே கலியாணத்தைப் பண்ணி வைத்து விட்டீர்களே! அப்படி என்ன அவசரம் குடி முழுகிப் போயிற்று? என்னைச் சட்டுப்புட்டென்று துரத்திவிடத்தானே? இப்போது அனுபவியுங்கள்! நான் இங்கேயே கிடந்து சாகிறேன்!" எனத் தாக்கினாள் மகள்.

"கலியாணம் பண்ணியிருக்காவிட்டால் என்னவென்று கேட்டிருப்பாயோ, இந்த இருபது வயதில்?" என்று கேட்டாள் விசாலம். ராஜேசுவரிக்குப் பதில் தெரியவில்லை!

"கலியாணம் பண்ணி வைத்தது போதாதென்று குழந்தை பிறக்க ஆபரேஷனாம்! நான் சீரழிகிறது போதாது..... இன்னும் மகவொன்றை சுமந்து கொண்டு, லோலோ என்று போக்கிடமில்லாமல் நான் திண்டாடுவதைப் பார்க்கணுமாக்கும்!" என்று எதிர்த்தாள் வேறுதிசையில்.

"நீ திண்டாடினால் எங்களுக்கு சந்தோஷம் என்று சொல்லுகிறாய், பார் - அது நாங்கள் செய்த பாபம், என் வயிறு செய்த பாபம்! "என்று குரல் மங்க மொழிந்தாள் விசாலம். ராஜம் உருகிவிடவில்லை.

"சந்தேகமென்ன? என்னை இவ்வளவு அழகாய்ப் பெற்றாயே உன் வயிறு செய்த பாக்கியம்தான்! நீயும் ஆபரேஷன் கீபரேஷன் செய்து கொண்டுதான் என்னை இப்படிப் பெற்றாயாக்கும்? ஏன் என்னைப் பெற்றாய்?" என்று ஒரு அசட்டுக் கேள்வி கேட்டாள் ஆத்திரமாய்

"நீ இப்படியெல்லாம் கேட்டு மடக்குவாய் என்று தெரியாது" என்று விசாலம் சொன்னாள்; புன்னகைக்கீற்று எட்டிப் பார்த்தது, வானத்துப் பிறைபோல.

"அப்படியென்றால் வேணுமென்றுதான் என்னைப் பெற்றாயா? எனக்கும் புத்தி சொல்ல வருகிறாயா மருந்து, ஆபரேஷன் என்று? உன்னை நான் மன்னிக்கவே முடியாது." என்றாள் ராஜேசுவரி வெறியுடன்.

விசாலத்திற்குக் கண்ணீர் துளிர்த்தது. "கடவுளாகக் கொடுத்துப் பிறந்தவள் தான் நீ. நீ பிறந்ததிலும் கோளாறு இல்லை; வளர்ந்ததிலும் குறை இல்லை. இப்போது மட்டும் என்ன குறைச்சல்? நீயாக என்னவோ குருட்டு யோசனை செய்து மனசைக் குழப்பிக்கொள்கிறாய், அவ்வளவே. அது என்ன வருத்தம் என்று எங்களுக்குப் புரியவுமில்லை," என்று விசாலம் தன் குழப்பத்தைச் சொன்னாள்.

"என்ன புரியணும்? எல்லாம் வெட்ட வெளிச்சம்! பட்டவர்த்தனம்! நான் சந்தோஷமாயிருக்க என்ன இருக்கு சொல்லேன், பார்ப்போம்!" என்று சவால் விடுத்தாள் ராஜம்.

"ஏன், என்ன இல்லை?ஒரு கஷ்டம் சுகம் என வந்தால் கைகொடுக்கப் பெரியவர்கள் இருக்கிறார்கள்; நல்ல புருஷன், கோபமில்லாதவர் இருக்கிறார். குழந்தையில்லை உனக்கு என்ற ஒரு குறைதான் எனக்குத் தெரிகிறது." என்று விசாலம் வெகு சாதுரியமாகவும் அழகாகவும் பதிலளித்தாள். ராஜேசுவரி பேசவில்லை அதற்குப் பிறகு.

"என்ன குறை எங்ககத்திலே அவளுக்கு?" என்று புக்ககத்தோர் நினைக்கிறார்கள்.

"என்ன குறை உனக்கு உங்காத்திலே?" என்று பிறந்தகத்தார் கேட்கிறார்கள்.

இருதரத்தாரும், அவளுக்கு என்ற சொல் மூலமும், உங்காத்திலே என்ற சொல் மூலமும், அவளை எட்ட நிறுத்துகிறார்கள்!

"நம்மகத்திலே உனக்கு," என்று சொல்லுவோர் யாருமில்லையே . . . அத்தனைபேர் இருந்தும் பயன்?

எத்தனை பேர் இருந்தும், என்னதான் வசதியும் புகலும் இருந்தும், அவளுக்குக் குறை இருக்கத்தான் இருக்கிறது. அது ஏன்?

அவளுடைய உள்ளுணர்வு அறிகிறது; புண்கள் உணர்ந்து நோகின்றன; அறிவு ஆதரிக்கிறது. அந்தக் குறை அவளை ஏகபோக உரிமையுடன் ஆட்கொண்டு ஆட்டுவிக்கிறது. அது அவளுக்குத் தெரிகிறது . . . வேறு யாருக்கும் தெரியவில்லை.

"நான் கேட்பது என்ன? சுதந்தரம்; உரிமை. வாழ்வில் பெருமை. பெரியவர்களை நான் வெறுக்கவில்லை. காந்திஜி வெள்ளையரை வெறுத்தாரோ? அவர்களுடைய கொள்கைகளையே வெறுத்தார். இந்தியா விஷயத்தில் அவர்கள் காட்டிய ஆதிக்கத்தின் கொடுமையையும் அவர்கள் கடைப்பிடித்த ஆட்சி முறையையும் எதிர்த்தார் காந்தி. போரிட்டார், கத்தியின்றி, ரத்தமின்றி, சாத்வீகப் போர் செய்தார். நானும் அடக்கமில்லாமல், எதிர்த்துப் பேசிச் சண்டை போடவில்லை. வீண் சண்டைபோட்டு வம்பு செய்யவில்லை. என் மன வளர்ச்சியை ஒடுக்கும் அந்தச் சூழ்நிலை மாற வேண்டும், எனக்கும் சில சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்றே ஏங்குகிறேன். என் மனநிலை காட்டத்தான் இப்படி சிறையில் வந்து சேர்ந்தேன்." என்று ராஜேசுவரி எண்ணமிட்டாள்.

ஆம், இப்போது பிறந்தகமும் அவளுக்கு சிறையாகத் தோன்றிற்று. பிறந்த வீட்டில் முன்னம் அவள் கண்ட இன்பங்கள் இன்று இல்லை புதல்வி என்ற ஸ்தானத்தில் உடல் இயங்கினாலும், உள்ளம், நாட்டுப் பெண் மனைவி என்ற ஸ்தானங்களிலே உலவியது. தெருவில் நடந்துபோனால், சில பேர், "இன்னும் இருக்கிறாயா?" என்று கேட்டார்கள். பிறகு அப்படிக் கேட்காமல், வெறுமனே பார்த்தபடியே போனார்கள். ஒருநாள் விசாலம்தான் புரியவைத்தாள் அந்தக் கேள்வியை!

"இன்னும் இருக்கிறாயா?" என்று ஊரில் நாலுபேர் கேட்கும்படி வைத்துக்கொண்டு விட்டாய், பார். பிறந்தகத்தில் இருக்கிறாள் என்றால் குழந்தை பிறக்கும் என்று உயர்த்தியாக நினைக்கிறார்கள். இல்லாவிட்டால் ஒரேயடியாய், புருஷன் மனைவி மனஸ்தாபம் என்று நினைக்கிறார்கள் ஊர் வாய் என்றாள் இதுதான்." என்று விசாலம் அங்கலாய்த்தாள்.

ஆகா! ராஜேசுவரியின் சிந்தனை மாண்பு எத்தகையது முன்பு? அதற்கு அத்தாட்சிகள் தான் எத்தனை? எல்லோரும் அதை மறந்துவிட்டார்கள்.

சக்குபாய் சினிமா போனார்கள் எல்லோரும். ராஜேசுவரி முதல் முறை புக்ககம் போய்த் திரும்பி வந்திருந்தாளே . . . அப்போது.

கிருஷ்ணர் சக்குபாயின் உருக்கொண்டு வருகிறார்; மாமியாருக்கு சுசுரூஷைகள் செய்து, வெறுப்பே வடிவாக இருந்த மாமியாரைத் திருப்தி செய்விக்கிறாள். நல்ல மாமியாரைத் திருப்திப்படுத்துவதோ.... சற்று கண்டிப்பான மாமியாரைத் திருப்தி செய்வதோ கஷ்டமாகுமா? சக்குபாய், மாமியாரிடம் சரியாக நடந்துகொள்ளவில்லை தான்.... கடமையைச் செய்யவில்லை தான். அதைத்தான் கிருஷ்ணபகவான் மாறுவேடத்தில் வந்து அறிவுறுத்துகிறார்!

இவ்வாறு கருத்து ஓடியது ராஜேசுவரிக்கு. "உம் நிஜ சக்குபாய் இப்படி மாமியாருக்கு அனுசரணையாயிருந்திருந்தால், மாமியார் ஏன் பொல்லாதவளாவாள்?" என்று ராஜேசுவரி உரக்கவே சொல்லிவிட்டாள்.

பல கண்கள் அவள் பக்கம் திரும்பின. ஒரு மூதாட்டி," பக்தையம்மா, அந்த சக்குபாய்! அவளுக்கு இந்த உலகவிஷயங்களிலே ஆசையும் பற்றும் இல்லை; நமக்கெல்லாம் அந்தப் பக்குவ நிலை வராது." என்றாள், அங்கிருக்கும் இளந்தை ராஜேசுவரியிடம்.

ராஜேசுவரி ஒரு கணம் யோசித்தாள் . . . கிழவியை எதிர்த்துப் பேச வாய் துடித்தது. மறுவினாடி "இல்லை, மாமி! மீராவை அப்படிச் சொல்லலாம். அவள் புருஷனையும் அரசபோகத்தையும் கூட லட்சியம் செய்யவில்லை. சக்குபாயோ அப்படியில்லை. புருஷனுக்குக் குடிக்க பாலோ, நீரோ எடுத்துக்கொண்டு வருகிறாளே அறைக்குள் வரும்போது! மாமியார் படுக்கும்போது பக்கத்தில் ஜலம் கூட கொணர்ந்து வைக்கவில்லை என்று தெரிகிறதே - கிருஷ்ணர் சக்குபாயாக வந்து இந்தச் சிறு சிறு உதவிகள் செய்ததும் மாமியார் சந்தோஷப்படுகிறார்! பக்தியைவிடக் கடமையே முக்கியம் இல்லையா? கேட்டாள்.

இதற்குள், சற்று தொலைவிலிருந்தவர்கள் உஷ், உஷ் என்று அடக்கவே ராஜேசுவரியின் கேள்விக்கு விடையளிக்கவில்லை அந்த மூதாட்டி.

"தேவலையே நீ! பாட்டுத்தான் கர்ணாமிருதமாய்ப் பாடுகிறாய் என்றால், பேச்சு குளிர்ச்சியாயிருக்கிறதே! இது யார் தெரியுமா சித்தி? ராஜ்யம் என்று சொல்லியிருந்தேனே - நவராத்திரியில் பாடினாள் என்று . . . அவள் தான்!" என்று அருகிருந்த வேறொரு அம்மாள் ராஜேசுவரியை மூதாட்டிக்கு அறிமுகப்படுத்தினாள், மெல்லிய குரலில்.

"அப்படியா? கலியாணமாச்சா?" என்றார் மூதாட்டி. "புக்ககம் போய் வந்திருக்கிறாள்" என்றாள் விசாலம் பெருமையுடன்.

"பாக்கியம் செய்தவர்கள்." என்று அகமகிழ்ந்து போனார் மூதாட்டி.

அது அந்தக் காலம். ஆம், ஊர்வாய் ராஜேசுவரியைப் பற்றி இப்போது புகழவில்லை. அவளுக்குத் தெரியாதபேர் கூட அவளை அறிந்திருந்து , "பேஷாகப் பாடும் பெண் ராஜ்யம்." என்று அவளை மெச்சிய நாட்கள் போயின; அவள் அறிந்திராதபேர் கூட "இவள் தான் அந்த ராஜ்யம்!" என்று பேசிக்கொண்டார்கள்.

"பாட்டுப் பாடுவதும், மேடை ஏறுவதும் பழகிப்போன பிறகு, எப்படி நிலைத்து குடித்தனம் செய்யத்தோன்றும்? அதற்குத் தான் குலப் பெண்களுக்கு அதெல்லாம் வேண்டாமென்று முன்னோர் ஏற்படுத்தினார்கள்." என அவர்கள் ஒரு உண்மையை உணர்ந்தாற்போலப் பேசினார்கள். "இன்பமான இல்லறம் போதுமே" என்ற மனநிலையில் இருக்கும் ராஜேசுவரிக்கு, "மேடைப்புகழ் நாடுகிறாள்." என்ற அவதூறு! கணவனின் அன்பை இழந்தவள் என்று விளக்கம்.

ராஜேசுவரிக்கு உலகம் புரிந்தது. பெண்ணுக்கு கணவன் என்ற உறுதுணை இல்லாத சமயத்தில் எந்தப் பெருமையும் இல்லை என்று கண்டாள். கணவனின் அன்பிற்குரியவள் தான் அவள் - அதை அறியவில்லையே பிறர்!

"வாருங்கள். கொஞ்சநாள் இருந்துவிட்டுப் போகலாம், வாருங்கள். பலபேர் நம்மை ஜோடியாகப் பார்க்க நாம் இந்த ஊரை வலம் வருவோம் . . . வருக விரைந்து. 'இங்கேதான் தலை நிமிர்ந்து நடப்பேனாக்கும்' என்று முன்பு நான் பெருமை பேசினேன். இப்போது தெருவில் நடந்தால் தலைகுனிந்து நடக்கிறேன். கூர்ந்து பார்க்கும் கண்களைச் சந்திக்க அஞ்சுகிறேன். என்ன கேட்பார்களோ, என்ன பேசுவார்களோ என்று மிரள்கிறேன். எனக்கு அங்கும் இங்கும் எங்குமே ஆதரவு இல்லை. என் இருப்பிடம் இது அல்ல என்று அனைவரும் கருதுகிறார்கள் . . . எனக்கும் தெரிகிறது. நான் அனாதையாகி விட்டேன். எனக்கு வாழ்க்கை வெறுக்கிறது. வந்து பாருங்கள் என்னை. உங்களுடன் சென்னைக்கு வந்துவிடுகிறன் என்று சொல்லவும் என் மனம் தயங்குகிறது. இங்கேயே இருக்கிறேன் என்று சொல்லவும் வாய் தடுமாறுகிறது. நீங்களும் நானும் வாழவேண்டிய வாழ்வு தனி' அங்கு மற்ற பாசாங்களுக்கு இடமில்லை என்று இப்பொழுது என் மனம் முன்னைவிட அதிகமாக வற்புறுத்துகிறது! தாய் தந்தையரின்றி உலகம் வேறு இல்லை என்று பிஞ்சு மனம் படைத்திருந்த நாட்கள் போய், அவரவர் வாழ்வு தனி என்ற எண்ணம் வருகிறதே, இது என்ன அக்கிரமம் என்று நானே வியக்கிறேன். ஆனால் அந்தத் தனி வாழ்விலே, நீங்கள் இல்லாமல் கற்பனை கூட செய்ய முடியவில்லை. தாற்காலிக சாந்தியாவது எனக்கு கிடைக்கட்டும்.... வருக விரைந்து." என்று ராஜேசுவரி கணவனை அழைத்தாள்.

அன்பு கட்டளையைக் கனிவுடன் ஏற்க தயங்காமல் ரகுபதி வந்தான்.

**முற்றும்**